
# திருக்கோயில்

ஜூலை – ஆகஸ்ட் 1982 ரூ. 2-50





திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயிலின திருக்குட நன்னீராட்டு மலர் வெளியீட்டு விழாவில், அம்மலரை வெளியிடுவதற்குச் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு கே. என். சிங் அவர்கள் வருகை தந்தபொழுது, நமது அறநிலைய ஆணையர் திரு ஆர். ஷண்முகசிகாமணி, I.A.S. அவர்கள் வரவேற்றுச் சிறப்புச் செய்தல். (22.8.82)





திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து, தமிழ்நாடு அரசின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் அமுல் செய்யப்படுவதற்குரிய கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்காக, ரூபாய் இரண்டு இலட்சத்திற்கான காசோலையை, அறங்காவலர் குழுத் தலைவர் திரு பி. ஜோதி அவர்களும், உதவி ஆணையர்-நிர்வாக அதிகாரி திரு த. நாகராசன் அவர்களும், நமது இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திரு ஆர். சண்முகசிகாமணி, I.A.S., அவர்களிடம் வழங்குதல்.

முகப்பு

அருள்மிகு
மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,
மதுரை.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Admn. Dept.

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2013, துந்துபி ஆண்டு-சித்திரை & வைகாசி [ஜூலை & ஆகஸ்ட் 1982] ரூ. 2-50 | மணி : 9 & 10 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

1. திருவிசைப்பாவில் சைவசித்தாந்தம் -ஆசிரியர்
2. திருக்குறள் வெளிப்படை -திரு.டாக்டர் வ.சுப.மாணிக்கம்
3. கம்பர் வாழ்ந்த காலம் -திரு.பி.ப.அண்ணங்கராசார்யசுவாமிகள்
4. திருநன்னிலத்துப் பெருங்கோயில் -திரு.டாக்டர் இரா.கலைக்கோவன்
5. 'அஞ்சினாற் பொலிந்த சென்னி' -ஆசிரியர்
6. திருப்பாசுரப் பொருள்நலம் -ஆசிரியர்
7. கம்பனும் இறைமையும் -திரு.டாக்டர் ச.வே.சுப்பிரமணியம்
8. பரிபாடல் காட்டும் பக்தி நிலை -திரு.புலவர் தா.சுப்பிரமணியம்
9. நம்மாழ்வார் -திரு.புலவர்.அ.தேவராசன்
10. 'ஆறுமுகம் ஆனபொருள்' -திரு.ஆ.கந்தசாமி,
11. அன்னை ஆதிபராசக்தி —ஆசிரியர்
12. திருமூலர் திருமந்திரச் செய்யுள்மணிகள் -ஆசிரியர்
13. பெரியபுராணம் -திரு.பெ.திருஞானசம்பந்தம்.
14. திருமூலயோகம் -தவத்திரு சுத்தானந்த பாரதியார்
15. திருவாசக நினைப்பு —திரு டாக்டர் வ. சுப. மாணிக்கம்
16. பாரதியாரும் கம்பரும் —ஆசிரியர்
17. திருவாசகம் -திருமதி சௌந்தரா கைலாசம்
18. கோகழி -திரு.ஆ. சிவலிங்கனார்
19. திருமால் திருநெறி -திரு.நா. வேணுகோபாலநாயகர்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# திருவிசைப்பாவில், சைவசித்தாந்தம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாவதாகத் தொகுக்கப்பட்டுத் திகழ்வது திருவிசைப்பா எனப்பெறும். சேந்தனார் இயற்றிய திருப்பல்லாண்டு என்பதும், இதனைச் சேர்ந்த ஒரு தனித் திருப்பதிகம் ஆகும். திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டிருப்பதற்கு ஏற்ப, அதனைப் பாடிய ஆசிரியர்களும் ஒன்பதின்மராக உள்ளனர். அவர்கள் முறையே திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்போராவர், இவர்கள் ஒன்பதின்மரும் பாடியுள்ள திருப்பதிகங்கள் 29; பாடல்கள் 301 ஆகும். இசைநலம் செறிந்த எழிலுடையனவாதல் பற்றியும், இறைவனது 'பொருள் சேர் புகழ்' ஆகிய இசையினை எடுத்து விளக்குவனவாதல் பற்றியும், கவிதைநலம் சான்ற இத் திருப்பதிகங்களுக்குத் திருவிசைப்பா என்னும் சிறப்பியற்பெயர் வழங்குவதாயிற்று.

## கவிதையும் தத்துவமும்

கவிதைக்கும் தத்துவத்திற்கும், மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு. ''கவிதையானது வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து தோன்றுகின்றது. வாழ்க்கைக்கு உரியதாக விளங்குகின்றது; வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் கொண்டது, வாழ்க்கையின் குறைநிறைகளை ஆராய்ந்து திருத்திச் செம்மைப்படுத்துகின்றது''. *(1)*

தத்துவம் என்பதும், இத்தகைய ஒன்றேயாகும். தத்துவமும் வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்தே உருவாகித் தோன்றுகின்றது; வாழ்க்கையைப் பற்றியதாக, வாழ்க்கை உணர்வுகளின் பிழிவாக, வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் உடையதாக , விளங்குகின்றது. வாழ்வின் குறைநிறைகளை உணர்ந்து திருந்தி உய்யமுயலும் சீரிய நல்லுணர்வே, சிறப்பாகத் தத்துவ ஞானம் என்று திறந்தெரிந்து பாராட்டப்பெறுகின்றது. இவ்வாற்றால் தெய்விகநலம் சான்ற கவிதைக்கும், மெய்யுணர்வாகிய தத்துவ ஞானத்திற்கும் இடையேயுள்ள, இயைபு ஒற்றுமைகளை யாவரும் இனிது உணரலாம்.

''சிறந்த தத்துவ ஞானியல்லாத எவரும், ஒரு பெருஞ் சீர்த்தி மிக்க கவிஞராக விளங்கியதில்லை'' *(2)* என்று, கோல்ரிட்ஜ் என்னும் அறிஞர் கூறுவர். ''ஓர் உயர்ந்த உண்மைத் தத்துவத்தினை, எவ்வாற்றாலேனும் விளக்காத கவிதையினை இயற்றும் ஆசிரியர் எவரையும், யான் மதிப்பதில்லை'' *(3)* என்று ஜேம்ஸ் லோவல் என்னும் அறிஞர் இயம்புவர். ''தத்துவத்திற்கே முதல் இடம், அதனை அடுத்தே அதன் உயர்ந்த விளைவாகிய கவிதைக்கு இடம்'' *(4)* என்று இராபர்ட் ப்ரவுனிங் என்னும் கவிஞர் குறிப்பிடுவர். ''தம்முடைய கவிதைகளைக் கற்பவர்பால் தத்துவ மனப்பான்மையைத் தூண்டித் தோற்றுவிக்கும் அளவைப்பொறுத்தே கவிஞர்களின் சிறப்பும் பெருமையும் அமைகின்றன'' *(5)* என்று எமர்சன் என்னும் பேரறிஞர்

---

*(1)* ''Poetry is made out of life, belongs to life, exists for life. It is important, therefore, to hold fast to this that poetry is at bottom a criticism of life; that the greatness of a poet lies in his powerful and beautiful application of ideas to life-to the question: How to live?''

—Matthew Anrold.

2. ''No man was ever yet a great poet without being at the same time a profound philosopher'' —S. T. Coleridge.

3. ''No poem ever makes me respect its author which does not in some way convey a truth of philosophy. —James Lowell.

4. ''Philosophy first and Poetry which is its highest outcome afterwards''.—Robert Browning.

5. ''The great poets are judged by the frame of mind they induce''. —Ralph Waldo Emerson.

மொழிவர். இங்ஙனம் கவிதைக் கலைக்கும் தத்துவக் கலைக்கும் இடையே உள்ள மிக நெருங்கிய தொடர்பினை, அறிஞர்கள் பலரும் வலியுறுத்திக் கூறுதல் காணலாம்.

## உபநிடதக் கதை

இவ்வாறு கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு எனினும், அவைகளுள் ஒன்றினின்று மற்றொன்றைத் தனியே பிரித்தெடுத்துக்காட்டுதல் அரிது. ஆதலின் திருவிசைப்பாப் பாடல்தொகுதியினின்று 'இதோ! தத்துவக் கருத்துக்களைக் காண்மின்கள்' என்று தனியே பிரித்தெடுத்துக் காட்டுதல் என்பது, எளிதின் இயலாத கடினமான ஒரு செயலேயாகும்.

தத்துவம் என்பது, தனி ஒரு பொருளாய் உருவொடு கூடி ஒளிர்வ தொன்றன்று. ''குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும் போல, ஈது காண்மின்''! என்று காட்டலாகாத பொருள் தத்துவம்! எல்லாம்வல்ல இறைவனைப்போல, அது கருதுவார் கருதும் உருவமும் இயல்பும் பெற்றுத் திகழ்வது. ஆதலின் திருவிசைப்பாப் பாடல்களில், தத்துவ நுட்பங்களைத் தனி ஒரு தொகுப்பாக அல்லாமல், அவரவர் தத்தம் மனப்பான்மைக்கும், சிந்தனைக்கும், வாழ்க்கைப் போக்கிற்கும் ஏற்பக் காண்டல் கூடும்.

இவ்வுண்மையினைக் குறிப்பிடுங்கால், உபநிடதத்திற் கூறப்படும் கதை ஒன்று, நினைவுக்கு வருகின்றது. ஒரு சமயம் தேவரும் அசுரரும் மனிதரும், பிரமனிடம் அறிவுரைபெறச் சென்றனர். பிரமன் எல்லோருக்கும் பொதுப்படத் 'த' என்ற ஒரே எழுத்தைக் கூறினார். அதனைக்கேட்ட தேவர்கள், ''நாம் காமம் மிக்கவர்கள். நமக்குச் சுகபோகங்களில் ஆசை மிகுதி. ஆதலின் நமக்குத் தமம் (புலனடக்கம்) தேவை என்று அறிவுறுத்துகின்றார்'' எனக் கருதிக்கொண்டனர். அசுரர்களோ, ''நாம் கோபமும் கொடுமையும் உடையவர்கள். ஆதலின் நமக்குத் தயை (இரக்கம்) என்னும் பண்பு வேண்டும் என்று போதிக்கின்றார்'' எனச் சிந்தித்துக் கொண்டனர். மனிதர்கள் ''நாம் உலோபிகள். பணப்பித்து மிகுந்தவர்கள். ஆதலின் தானம் (அறச்செயல்) புரியுங்கள் என்று நமக்குப் பணித்தருள்கின்றார்'' என்று உன்னித்து உணர்ந்து கொண்டனர் என்பது, அந்த உபநிடதக் கதை. 'த' என்னும் ஒரே எழுத்தொலிக்கு, அவரவர்கள் தத்தம் இயல்புக்கும் மனநிலைக்கும் ஏற்றபடி பொருள் செய்து கொண்டனர். அதுபோலவே நாமும் நம்முடைய இயல்பிற்கும் மனநிலைகளுக்கும் ஏற்றபடி, திருவிசைப்பாப் பாடல்களில், தத்துவநோக்குக் கொண்டு ஆராய்ந்து, பல நுட்பங்களை உணர்தல் கூடும். அம்முறையில், இங்கு ஒரு சில கருத்துக்களை மட்டும், இயன்ற அளவு முயன்று காண்போம்.

## 1. சோபான நெறி

இறைவன் உயிர்களைப் படிப்படியாக, முறைமுறையே ஆட்கொண்டருளி முன்னேற்றுகின்றான்; ஒரு தாய்க்குத் தன் குழந்தையின் மீது, எவ்வளவுதான் அன்பும் பரிவும் இருந்தாலும், அவள் அதற்குச் சிறிது சிறிதாகவே பாலூட்டியும், பொருந்தும் உணவு அருத்தியும், முறை அறிந்து அதனை வளர்த்து வருவாள். ஒரு சிறிய குழந்தையின் வாயில் ஒரு பெரிய இலட்டுருண்டையைத் திணிக்க முற்படாள். இருளிலேயே நெடுங்காலம் அழுந்திக்கிடந்தவனுடைய கண்கள், திடும் எனச் சூரியனது பேரொளியைக் காணநேரின், மிகக் கூசி இடர்ப்பட்டுப் பழுதடைந்துபோகும். ஆதலின் அவற்றிற்குச் சிறிது சிறிதாகவும், படிப்படியாகவுமே ஒளியைக்காட்டி யுணர்த்தி, நலப்படுத்துதல் வேண்டும். இம்முறைமைபற்றியே, இறைவனும் உயிர்களை அவற்றின் தகுதி நோக்கிப் படிப்படியாக ஆட்கொண்டருளுகின்றான்.

இவ் உண்மையினையே ''தையலார் மையலிலே தாழ்ந்து விழக்கடவேனைப், பையவே கொடுபோந்து பாசம் எனும் தாழ் உருவி உய்யும் நெறி காட்டுவித்திட்டு, ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே'' என மணிவாசகரும் அருளிச் செய்தார்.

இறைவன் இங்ஙனம் தன் அடியார்களைப் பையப்பைய, மெல்ல மெல்லப், படிமுறையின் ஆட்கொள்ளும் தன்மையினைச் 'சோபான நெறி' எனத் தத்துவ நூல்கள் சாற்றும். கண்ணப்பர் காளத்திமலையின்மீது ஏறிக் குடுமித் தேவரை அடைந்தமையினை,

''நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி
நேர்படச் செல்ல லுற்றார்''

எனச் சேக்கிழார் கூறியிருக்கும் திறனும், இங்கு நாம் சிந்திக்கற்பாலது. திருநாவுக்கரசர் பெருமானும் ''பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்கு அருளால் ஏணிப்படி நெறி இட்டுக் கொடுக்கும் ஐயாறன் அடித்தலமே'' எனத் திருவாய் மலர்ந்திருத்தல் காணலாம்.

இவ்வடிப்படையிலேயே, 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' என்பதுபோலச், சித்தாந்த சைவம் என்னும் தத்துவச் சிகரத்தின் உச்சியிற் சென்று நிற்கவிழைவோர், ''புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும், புகல்மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சைவத் திறத்தடைவர்; இதிற் சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்''' என்று, சிவஞான சித்தியார் என்னும் சைவச் சாத்திரநூல் சாற்றுகின்றது.

ஆசிரியர் மாதவச் சிவஞானசுவாமிகள், ''மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி, அவை நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி அல்லது மோட்சத்தைக் கொடா'' எனவரும் சிவஞானபோத ஏதுவினை விளக்கி யருளுங்கால்,

''முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும், ஆன்மாக்களின் அறிவு தூல அறி வாதலின் அவ்வாறு விளங்கமாட்டாது, தத் தமக்கு ஏற்ற சோபான முறையே, சிறிது சிறி தாக ஏகதேசமாய் விளங்கி விளங்கி மேம்பட்டு வந்தே, பின்னர் வியாபகமாய் விளங்கும்'' என் றும்;

''செம்பொன் மேருமால் வரையைத் தலைப்படலுறுவார், தென்றிசையினின்றும் வழிவினாய்க் கொண்டுசென்று, நாவலந் தீவிற் பாரதவருடம் எய்தி, அங்கிருந்து கிம்புருடவ ருடம்சென்று, அதன்பின் அரிவருடம் அடைந்து, அங்கிருந்து இளாவிருதம் சென்று, அதன்பின் இடையீடின்றி மேருமால் வரைக்கே சென்று சேர்தல்போல, வீடுபேறு விழைவோர் அனை வரும் அவ்வச் சமயந் தோறும் உள்ள மெய்ப் பொருள் நூல்களைக் கற்றுணர்ந்தும், அவ்வந் நெறிகளில் நின்றொழுகியுமே, இறுதியில் ஞானம் கைவரப்பெற்று வீடுபேறு எய்துவர்'' என்றும்; தமது சிவஞான போதப் பேருரையில் விளக்குவர். அப்பகுதிக்குச் சான் றாக அவர்,

''பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென்று ஏறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுறா வண்ணம்,
எந்தையும் தாயும் யானுமென் றிருப்பன்
எண்ணில்பல் ஊழிகள் உடனாய்,
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே''

என்னும் சுருவூர்த் தேவரின் திருவிசைப்பாச் செய்யுளையே, மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

## 2. திருவேடச் சிறப்பு

சிவபிரானது திருவருளைப் பெற விரும் புபவர் அனைவரும், சிவனடியார்களையும் சிவா லயத்தையும் சிவன் எனவே கொண்டு வழிபடு தல் வேண்டும் என்று, சிவஞானபோதம் சிவ ஞானசித்தியார் முதலிய நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. சிவனடியார்களை வழிபடுவது மட்டும் அன்றி, அவர்களின் திருவேடத்தையும் கூடச் சிவன் எனவே கண்டு வழிபடுதல் இன்றி யமையாததென்று, அந்நூல்கள் வற்புறுத்தி அறிவுறுத்துகின்றன.

ஆனால் இந்நாளில் ஒருசிலர் ''யாம் உண்மை அடியவர்களையே வணங்குவோம், போலிவேடம் பூண்ட பொய்யர்களை வணங் கோம்'' என்று கூறுவர். ஒருவரைப் பொய்யரா மெய்யரா என்று எங்ஙனம் ஆராய்வது? மெய் யரைப் பொய்யராகவும், பொய்யரை மெய்ய ராகவும், நாம் நம் அறியாமையால் மயங்கிப் பிறழ உணர்ந்துகொண்டால் என் செய்வது? மெய்யரா, பொய்யரா என்று அறிதலிலேயே காலத்தைக் கழித்துவிட்டால், நாம் வழிபாடு செய்வது எப்போது? எப்படி? இனி, பிறரைப் பொய்யரா மெய்யரா என ஆராய்வதற்கு நாம் யார்? நமக்கு என்ன தகுதி உள்ளது? நம்மை நாமே மெய்யரா பொய்யரா என்று அறிந்து கொள்ள வாய்ப்பில்லையே, பிறரை ஆராய்ந்து அறிவது எங்ஙனம்?

எனவே ''அடியார் என வருவோர், மெய் யரே ஆயினும் ஆகுக! பொய்யரே ஆயினும் ஆகுக! நாம் நீதிபதிகள் அல்லோம். எனவே அவ் ஆராய்ச்சியில் நாம் தலைப்படுதல் வேண் டாம். அவர்தம் நிலையினை இறைவன் அறிந்து கொள்வான். அதற்கு ஏற்ற பயனை அவர் களுக்கு அவன் தருவான். அவர்கள் அணிந்துள்ள கல்லாடையும், உருத்திராக்கமும், திருநீறும் சிவ சின்னங்கள். ஆதலின் அவ்வேடத்தை நாம் வணங்கி வழிபடக் கடவோம்'' என்று திரு நாவுக்கரசர் நமக்குத் தெளிவுறுத்தி அருள் கின்றார்.

''எவரேனும் தாம் ஆக; இலாடத்து இட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி, உவ ராதே அவர் அவரைக் கண்டபோதே உகந்து அடிமைத்திறன் நினைந்து, அங்கு உவந்து நோக்கி, இவர் தேவர் அவர் தேவர் என்று இரண்டு ஆட்டாது ஒழிந்து, ஈசன் திறமே பேணிக் கவராதே தொழுமின்; நும் நெஞ்சி னுள்ளே கன்றாப்பூர் நடுதறியப்பரைக் காண லாம்'' என்பது நாவுக்கரசர் நமக்குச் செய் யும் நல்லுபதேசம். (தொழுதல் வேறு, பழகு தல் வேறு; அன்பினாற் செய்யும் வெறும் தொழுகைக்கு, ஆராய்ச்சி வேண்டா! நெருங் கிப் பழகுதற்காயின், ஒருகால் ஆராய்ச்சி தேவைப்படலாம்).

## 3. சிவ சின்னங்கள்

இதனால், திருவேடம் என்னும் சிவ சின்னங்களின் சிறப்பையும், இன்றியமையா மையையும் யாவரும் உணரலாம். 'நனிநாகரி கம்' பெருகிவரும் இந்நாளில், நம்மிற் பலர் சமயச் சின்னங்கள் அணிவதற்கு அஞ்சுகின்ற னர்: அருவருக்கின்றனர். அவைகளை அணியச் சோம்பற்பட்டு எள்ளிப் புறக்கணிக்கின்றனர். சிவவேடம் பூண்டும், தீயராய் ஒழுகும் சிலரைக் கண்டு அருவருத்தே, அவர்கள் இங்ஙனம் செய் கின்றனர். வேடம் பூண்டோரது செயலின் புன் மையை, வேடத்தின்மீது ஏற்றி அதனைவெறுத் தல் முறையன்று. கற்றவர்கள் ஏதேனும் ஒரு குற்றம் புரியின், அதுபற்றிக் கல்வியையும் இழித்துப் பழித்தல் ஒல்லுமோ? அது போல் வதே இதுவும்!

மெய்ப்பொருள் நாயனார், மைபொதி விளக்கேயென்ன மனத்தினுட் கறுப்புவைத்துப் பொய்தவ வேடம்கொண்டு புகுந்த முத்தநா தன், வஞ்சமாகத் தம்மை வாளாற் குத்திக்

கொன்றபோதும், ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' எனத் தொழுது வென்றார். இவ்வாற்றால், அவர் சிவவேடத்தின் சிறப்புடைமை உணர்ந்து போற்றியமை தெளியலாம்.

சமய வாழ்வில் மட்டுமேயன்றி, உலகியல் வாழ்விலும், வேடம் மிகமிக இன்றியமையாததொன்றாக உள்ளது. ''ஒருவன் அணியும் ஆடை அவனை அறிவிக்கும்' (''Apparel oft proclaims the man'') என்பர் ஷேக்ஸ்பியர். சீருடையணியாத (Mufti) காவலருக்கும், சீருடை அணிந்துள்ள (Wearing the Uniform) காவலருக்கும் இடையே, உணர்வும் மதிப்பும் வேறுபடுதலை, நாம் எளிதில் கண்டுணரலாம்.

## 4. இராவணன் கதை

வேடத்தின் முதன்மையினையும் இன்றியமையாமையினையும் வலியுறுத்தும் இராமாயண நிகழ்ச்சி ஒன்றினை, இங்குக் குறிப்பிடுதல் தகும். சீதையின் மீது பொருந்தாக் காமம் கொண்ட இராவணன், அப்பிராட்டியைத் தான் அடைவதற்கு ஏதேனும் வழிகளைக் கூறுமாறு, தனது துணைவர்களை வேண்டினான். பலர் பலவகையான யோசனைகளைக் கூறினர். எதுவும் அவனுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. இறுதியில் ஒருவன் எழுந்தான். ''இராமனைப் போலவே வடிவம் எடுத்துக்கொண்டு சென்றால், சீதையை அடையலாம்'' என்றான். அதுகேட்ட இராவணன், ''இதனையா பெரியதொரு யோசனையாக எனக்குக் கூறினாய்? வேறு ஏதோ புதிதாகச் சொல்லப்போகின்றனை என்றன்றோ, யான் பெரிதும் எதிர்பார்த்தேன். நீ கூறிய இச் சூழ்ச்சி எனக்குத் தெரியாததோ? இச் சூழ்ச்சியினை இதுகாறும் நான் செய்யாமலும் இருப்பேனோ? சீதையை அடைய எண்ணி, யான் இராமனின் வடிவத்தைப் பலமுறை எடுத்துப் பார்த்திருக்கின்றேன். அவ்வடிவம் எடுத்த அளவிலேயே, இராமனுக்குத் தனிச்சிறப்பாக உரியபிறன்மனைவிழையாமை என்னும் இயல்பு, எனக்கும் அமைந்து விடுகின்றதே? அதன் பின்னர் யான் எங்ஙனம் சீதையைத் தேடிச் சென்று அடைதல் கூடும்?'' என்று கூறிச் சலித்துக்கொண்டான் இராவணன், என்பது கதை.

இவ்வாறே இராபர்ட் ப்ரவுனிங் என்னும் கவிஞர், தாம் இயற்றிய கவிதை ஒன்றில் ஒரு செய்தியைக் குறிப்பிடுகின்றார்: ஒரு மனிதன் போப்பாண்டவரிடம் சென்று ''தாங்கள்ஏன் இவ்வளவு அலங்காரம் செய்து கொள்ளுகின்றீர்கள்? தங்களுக்கு இத்தனை ஆடை அணிகலன்கள் எதற்கு? தாங்கள் இக்கோலம் பலவும் புனைவது ஏன்? தங்களுக்காகச் செய்யப்படும் இந்த ஆரவார ஆடம்பரங்கள் எல்லாம் எதன் பொருட்டு?'' என்று வினாவினான். அதற்கு அவர், நான் இதையெல்லாம் செய்துகொள்வதற்குக் காரணம் சொல்லுகின்றேன், கேள்: இவ்வேடத்தை அல்லது நாடகத்தின் நடிப்பைச் செய்துகொண்டேவருகையில், என்றேனும் ஒரு நாள் எனக்குத் தெரியாமலேயே என்னுள் இறைவன்பால் உண்மைப் பக்தி உதித்துவிடக் கூடுமன்றோ?' என்று விடையிறுத்தார் என அக்கவிதை கூறுகின்றது. இவற்றால் என்ன தெரிகின்றது? வேடத்திற்கும் பண்பிற்கும் மிக்க தொடர்பு உண்டு என்பதன்றோ?

ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள், தமது சிவஞானபோதப் பேருரையில் திருவேடத்தின் இயல்பினையும், சிறப்பினையும் பின்வருமாறு விளக்கி அருள்கின்றார்: ''காமக் கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை, சாந்து, அணிகலன் முதலியன, காமுகரை வசீகரித்து இன்பம் செய்யுமாறுபோல, திருநீறும் தாழ்வடமும் கல்லாடையும் ஆகிய திருவேடம், மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரையானே வசீகரித்து இன்பம் செய்யும்''. இதனை வலியுறுத்த அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள், பின்வரும் திருப்பல்லாண்டுச் செய்யுளாகும்.

''சேலுங்கயலும் திளைக்கும் கண்ணார் இளம்
கொங்கையிற் செங் குங்குமம்
போலும் பொடியணி மார்புஇலங்கும் என்று
புண்ணியர் போற்றிசைப்ப,
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே''

## 5. அறமும் மறமும்

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், உலக இலக்கியங்களுள் தலைசிறந்த ஒன்றாக மதிக்கப்பெறுகின்றது. அறநூல்களுள் தனிப் பெருஞ்சிறப்பிடம்பெற்று, அத்திருக்குற திகழ்கின்றது.''ஒருவன் செய்திகொன்றோர்க்கு உய்தி இன்றெனஅறம் பாடிற்றே ஆயிழை கணவ'' என்னும் புறநானூற்றுப்பாடல் அடிகளில், திருக்குறளை ''அறம்'' என்றே போற்றிச் சிறப்பித்துள்ளார், ஆலத்தூர்கிழார் என்னும் சங்ககாலப் புலவர்! அத்தகைய சிறப்புமிக்க திருக்குறள் ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன், ஆகுல நீர பிற'' என்றும்; ''அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்'' என்றும், அறத்திற்கு இலக்கணம் வகுக்கின்றது.

'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்பது, நம்முடைய முயற்சியினால் மட்டுமே நமக்கு எளிதில் கைகூடுவது அன்று. அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் என்னும் நான்கு தீய குணங்களைப் போக்கிக் கொள்ளுவதும், நம்மால் இயலுவதன்று. இவற்றிற்கு இறையருளின் துணையும் இன்றியமையாததாக உள்ளது. இறையருளின் துணை இருந்தாலன்றி, நாம் நம் மனத்தை அடக்கி ஆளவோ, தூய்மை செய்து கொள்ளவோ ஒரு போதும் இயலாது என்பது திண்ணம்.

ஆதலின், நமது சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்கள், அறத்திற்குச் சிறப்பிலக்கணம் ஆராய்ந்து அருளிச் செய்திருக்கின்றனர். ''இறைவனுடைய கட்டளையை நிறைவேற்றுதலே அறம் ஆகும். இறைவனது திருவருளின்

வயப்பட்டு, அன்புமேலிட்டுச் செய்யப்படுகின்ற செயல்கள் யாவும் அறச்செயல்கள்; இறைவனை மறந்து அல்லது புறக்கணித்துச் செய்யப்படுகின்ற செயல்கள் அனைத்தும் மறச்செயல்கள், அல்லது வீணான பயனில் செயல்களாகும்'' என்பது, நமது சமயச் சான்றோர்களின் கருத்து.

''காண்பவன் சிவனே ஆனால்,
அவனடிக்கு அன்பு செய்கை
மாண்பு அறம்; அரன்றன் பாதம்
மறந்துசெய் அறங்கள் எல்லாம்
வீண்செயல்; இறைவன் சொன்ன
விதி அறம்; விருப்பொன் றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே''

என்று சிவஞானசித்தியார் கூறுதல் காணலாம்.

இதுமட்டுமன்று, அறம் அல்லது மறம் என்பதனை, இதுதான் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுதல் இயலாது. சில சமயங்களில் அறமே மறமாகவும், மறமே அறமாகவும் மாறுபட்டு முடிவதும் உண்டு. அரனடிக்கு அன்பு இல்லாதவர், செய்யும் புண்ணியமும் பாவமாக முடியும். அரனடிக்கண் அன்புடையவர்கள் செய்கின்ற பாவமும் புண்ணியமாகிவிடும். தக்கன், வேதவேள்வி செய்தும் பாவியானான். சேய்ஞலூர் விசாரசருமர், தாதையைத் தாள் தடிந்த பெருங்குற்றம் புரிந்தார் ஆயினும், தொண்டர்க்கு நாயகமாம் சண்டேசப் பெரும் பதம் அளிக்கப்பெற்றார்.

ஆதலின் ''அரனடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவமாகும்; பரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்; வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி, நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாயிற்று'' என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது. இன்னோரனைய தத்துவ சாத்திர முடிவுகளுக்கெல்லாம், அடிப்படையும் சான்றுமாகப் பின்வரும் திருவிசைப்பாத் திருப்பல்லாண்டுப் பாடல் விளக்குதல் காணலாம்.

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கு
இவ்வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## 6. முத்தி வகைகள்

வீடுபேற்றின் இயல்பு பற்றி வெவ்வேறு சமயநூல் வெவ்வேறு வகையாகக் கூறும். நமது சமய தத்துவ நூல்களுள் சிவஞான தீபம் என்பது ஒன்று. சீவன் முத்தர்கள் மூன்று வகைகளில் வீடுபேறு அடைவர் என அந்நூல் கூறுகின்றது. பாசத்தில் அழுந்திய ஏனைய மக்களைப்போல, உடம்பினைப் பிணமாகும்படி விட்டுச் செல்லாமலும், தங்கள் உடம்பினைச் சிவலோகத்திற்கு உடன்கொண்டு செல்லாமலும், தம் உடம்பு கற்பூரம்போற் கரைந்துவிட, இருந்த இடத்திற்றானே சிவ நிறைவிற் கலந்துவிடுவது ஒருவகை. இவ்வாறன்றி உடலுடனேயே சிவலோகத்திற்குச் சென்று சேருவது மற்றொரு வகை. இவ்விரு திறமும் இன்றி இம்மண்ணுலகத்திற்றானே உடம்பினைவிட்டு நீங்கி, இறைவனின் திருவருளில் கலப்பது பிறிதொருவகை.

இம் மூவகைகளுள் முதலதற்குத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும்; இரண்டாவதற்கு நம்பியாரூரரும் சேரமான்பெருமாளும்; மூன்றாவதற்கு மெய்ப்பொருள்நாயனார் ஏனாதிநாயனார் முதலியவர்களும், முறையே உரிய எடுத்துக்காட்டுகள் ஆவர் என்று, சிவஞானதீபம் *(172)* என்னும் சிறந்த சாத்திர நூல் சாற்றுகின்றது. அந்நூலின் கூற்றுக்கு அரண்செய்யும் வகையில்,

''களையா உடலோடு
சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறா
வெள்ளானை மேற்கொள்ள,
முளையா மதிசூடி
மூவா யிரவரொடும்
அளையா விளையாடும்
அம்பலம்நின் ஆடரங்கே''

என்னும் திருவிசைப்பாப் பாடல், அமைந்திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.

## 7. காணும் உதவியும், காட்டும் உதவியும்

உயிர்களுக்கும் கடவுளுக்குமுள்ள உறவைக் குறித்து, வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகைகளிற் கூறுகின்றன. கடவுளும் உயிர்களும் பொன்னும் பணியும்போல் அபேதம் என்றும், இருளும் ஒளியும் போல் பேதம் என்றும், சொல்லும் பொருளும் போல் பேதாபேதம் என்றும், தத்துவ நூலறிஞர்கள் பற்பல வகைகளில், வெவ்வேறு வகைப்படக் கூறுவர்.

ஆனால் நமது சைவ சித்தாந்தமோ, கடவுள் உயிர்களுடன் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் இயைந்து நிற்கின்றான் எனக் கூறும். கடவுள், கலப்பினால் உடலின் உயிர்போல உயிர்களேயாய் ஒன்றாகவும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல உயிர்களின் வேறாகவும், உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம்போல உயிர்களோடு உடனாகவும் இயைந்து நின்று, அவற்றை இயக்கி வருகின்றார் என்று நமது சைவ சித்தாந்த நூல்கள் சாற்றுகின்றன.

உயிர்கள் நிலைப்பதற்கு இறைவன் உயிர்களோடு ஒன்றாய் நிற்கின்றான்; உயிர்கள் பொருள்களை அறியும்படி அறிவித்தற்கு இறைவன் அவற்றின் வேறாய் நிற்கின்றான்.

பொருள்களை அறியினும் அறிந்தவாறே அனுபவிக்கும் சுதந்திரம் உயிர்களுக்கு இல்லாமையால், பொருள்களை அனுபவிக்கும் வண்ணம் உயிர்களைச் செலுத்துதற்கு, இறைவன் உயிர்களோடு உடனாய் நிற்கின்றான். இல்லையேல், உயிர்கள் தாமே நிலைத்தலும், பொருள்களை அறிதலும், அனுபவித்தலும் இல்லையாய் முடியும்.

இறைவன் இங்ஙனம் உயிர்களுக்குச் செய்யும் உதவியினைக் காட்டும் உதவி என்றும், காணும் உதவி என்றும், இரண்டாகப் பெரியோர்கள் கூறுவர். உயிர்கள் ஒரு பொருளைத் தாமே அறியும் இயல்புடையன அல்ல. ஆதலின் இறைவனே உயிர்களுக்குப் பொருள்களைக் காட்டி அறிவிக்கின்றான். இது காட்டும் உதவி எனப்படும். இங்ஙனம் காட்டும் உதவி மட்டுமேயன்றிக் காணும் உதவி என்பதனையும், உயிர்களுக்கு இறைவன் செய்ய வேண்டி இருக்கின்றது.

கண் ஒரு பொருளைக் காணவேண்டுமாயின், அக்கண்ணினிடத்து இருக்கின்ற இருளை நீக்கி, விளக்கு அதற்கு ஒளியைத் தருதல் வேண்டும். அது மட்டுமேயன்றிக் காண்பதற்குரிய பொருளை மறைத்துள்ள இருளையும், அவ்விளக்கொளி நீக்குதல் வேண்டும். கண் விளக்கொளியோடு கூடினும், பொருள் இருளில் இருக்குமேயாயின், கண் அதனைக் காணுதல் இயலாது. விளக்கொளி கண்ணின் இருளை நீக்கிப்பொருள்களைக்காட்டுவதுபோல், இறைவன் உயிர்களின் அறியாமையை நீக்கிப் பொருள்களை அறியும் ஆற்றலை உயிர்களுக்குத் தருகின்றான். கண்ணுக்கு விளக்கொளியால் காணுந்தன்மை ஏற்படினும், பொருள் இருளில் இருப்பின், கண் அதனைக் காணுதல் இயலாமையின், கண்ணிற் கலந்த விளக்கொளியே, காண்பதற்குரிய பொருளிலும் சென்று படிந்து கலத்தல் வேண்டும். அதுபோல இறைவன் உயிர்களுக்கு அறியும் திறன் அளிப்பதுடன், அறியப்படும் பொருள்களிலும் சென்று ஒன்றிக் கலந்து நின்று, அவற்றினை உயிர்கள் அறியச் செய்வித்தலும் வேண்டும். உயிர்கள் பொருள்களை அறிய, இறைவனும் அவ்வுயிர்களோடு உடனிருந்து அப்பொருள்களைத் தானும் கண்டு அறிதல் இன்றியமையாதது. மாணவன் ஒரு நூலைப் படிப்பதற்கு உதவியாக, அவனோடு உடனிருந்து ஆசிரியரும் அந்நூலைப் படித்தல் போல்வது இது! இதனைக் காணும் உதவி என நூல்கள் கூறும்.

இங்ஙனம் இறைவன் உயிர்களுக்குக் காட்டும் உதவியும், காணும் உதவியுமாகிய இரண்டையும் செய்துவரும் திறனையே, அத்துவித சம்பந்தம் எனத் தத்துவ நூல்கள் கூறுகின்றன. அத்துவிதமாவது, பேதப்பொருள் இரண்டும், தம்முள் அபேதமாதற் குரிய சம்பந்த விசேடம். இதனையே ''அறிவொளிபோற் பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பு'' என உமாபதி பதிசிவம் குறிப்பிடுவர்.

சிவஞானபோதத்தில் காட்டும் உதவி ஐந்தாம் சூத்திரத்தினும், காணும் உதவி பதினோராம் சூத்திரத்தினும் விளக்கப்பெற்றுள்ளது. காணும் உதவி காட்டும் உதவியின் பின்னர்த்தாய் நிகழும் என்னும் உண்மையினை, இவ்வமைப்பு உணர்த்தி நிற்கின்றது. இறைவன் உடனாக நின்று, பொருள்களைத் தானும் கண்டாலன்றி உயிர்கள் அவற்றைத் காணுதல் இயலாது.

உயிர் ஒன்றினை அறிதல், இறைவன் உடனின்று அறிதலை அன்றி, அறிவித்தல் மாத்திரையான் உயிர்களுக்கு அமையாது என்னும் உண்மையை விளக்குவதற்குச் சிவஞானபோதப் பேருரையினை இயற்றியருளிய ஆசிரியர் மாதவச் சிவஞானசுவாமிகள், திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர் ''தொண்டனேன் விளம்புமா விளம்பே'' ''தொடருமா தொடரே'' ''நுகருமா நுகரே'' என்று அப்பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும் அருளிச் செய்துள்ள தொடர்களை எடுத்து, மேற்கோள் காட்டியிருத்தல் காணலாம்.

''ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே''

இங்ஙனம் சைவசித்தாந்தத்திற்கே தனிப் பெருஞ் சிறப்பாக உரிய, இவ்வரிய பெரிய தத்துவ உண்மையினை விளக்குகின்ற பகுதியில், சைவத்திருமுறைகளுள் ஒன்பதாவதாகச் சிறந்து திகழும் திருவிசைப்பாப் பாடல்களினின்றே, சிவஞானசுவாமிகள் மேற்கோள் காட்டியிருத்தல் ஒன்றே, திருவிசைப்பாவின் தனிப்பெருஞ் சிறப்பினை மலையிலக்கென விளக்கப் போதிய தகுந்த சான்றாகும்.

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால், திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் ஒன்பதாம் திருமுறையினைச் சாத்திர நோக்குக்கொண்டு ஆராய்ந்து நோக்கினாற் புலனாகக்கூடிய ஒருசில கருத்துக்களை மட்டும் இங்குக் கண்டோம். இது 'விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்'. எனவே 'சமுத்திரகலச நியாயம்' பற்றியும், 'தாலிபுலாகநியாயம்' பற்றியும், ஒருசில கருத்துக்களை மட்டுமே இங்குஇயன்ற அளவு காணமுடிந்தது. ''கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்?'' ''கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?''.

# திருக்குறள் வெளிப்படை

"பெரும் பேராசிரியர்"

திரு டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., M.O.L., Ph.D.

**திருக்குறளின் பழமை:**

திருக்குறள் காலத்தால் ஈராயிரம் ஆண்டுப் பழமைப்பட்டது என்றாலும், கருத்தாற் பழமையுடையதா? ஆம், ஓரளவு கருத்தாலும் பழமை வாடை கொண்டது. நால்வகை மதில்பற்றிக் கூறும் அரண் அதிகாரச் செய்திகளும், போர்குறித்த களச் செய்திகளும் வழக்கு விழுந்தன என்றே ஒப்பவேண்டும்.

கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (774)

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு (775)

எனவரும் வேல்மறப்போர் இன்றில்லை. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் (758) என்ற மறக்காட்சியும் இன்றில்லை.

**பழமை எவ்வளவு:**

காலங்கடந்த அறநூல் என்று போற்றினாலும், திருக்குறளில் பொச்சாப்பு, ஒருவந்தம், புத்தேளிர், மாண்ட, முதுக்குறைவு, உஞற்றுதல் போன்ற சொற்பழமைகள் உண்டு; அருங்கேடன், நன்னீரை, நிறைநீர, எனல் போன்ற இலக்கண வீழ்ச்சிகள் உண்டு; யாருள்ளித் தும்மினீர், இருட்டறையில் ஏதில் பிணம் தழுவல், சிவிகை பொறுத்தான், அவிசொரிந்து ஆயிரம் வேட்டல், போன்ற மரபு மறைவுகள் உண்டு. இவ்வாறுஎடுத்துக்காட்டினாலும்இரண்டாயிரம் ஆண்டுத் தொன்மை வாய்ந்த திருக்குறளில் பழமைகளும், வீழ்ச்சிகளும் ஓரிரு விழுக்காட்டிற்குமேல் இல்லை என்பதையும் ஒப்பவேண்டும். இதற்குக் காரணம் வள்ளுவர் காலத் தமிழ்மொழி, வழக்காயினும் செய்யுளாயினும் செந்தமிழாக இருந்த நிலையாகும். அதனாலன்றோ தொல்காப்பியமும், சங்கப் பனுவல்களும் இன்றும் விளங்குவனவாக உள்ளன! அவை பிறப்பாற் காலப்பழமை படிந்தனவேயன்றி, மொழிநடையால் இன்றும் சாலப்புதுமை தவழ்வன. இடைக்காலத்துத்தோன்றிய மயக்கு நடையைத் தமிழ் நூல்களோடு ஒப்புநோக்கின், இவ்வுண்மை வெளிப்படையாகும். பழமையான பிறமொழி உலக இலக்கியங்களோடு ஒத்திடினும், நம் தொன்மை இலக்கியங்களின் புதுமைப் பெருவாழ்வு புலப்படும். உலகிற் சிறந்த தொல்லிலக்கியங்கள் தம்மொழியைச் சாகடித்தன; நம் தொன்னூல்களோ எனின், கம்பர் உணர்ந்து பாடியது போலத் தமிழ் மொழியை 'என்றுமுள மொழி'யாக்கின.

**உரைப் பொடிகள்:**

திருக்குறளுக்குப் பலவுரைகள் வந்துள்ளன. காலந்தோறும் புதுவுரைகள் புறப்படுகின்றன. சில குறட்பாக்களுக்கு உரைவேற்றுமைகள் பல்கியுள. பாட வேறுபாட்டாலும், புணர்ச்சி முறையாலும், கொள்கைப்பிடிப்பாலும், தொகையாலும், இலக்கணத் தன்மையாலும், சொற்பொருளாலும், காலவிடையீட்டாலும், புலமைமிகையாலும், புலமைக் குறையாலும், நயப்பாட்டாலும், வேற்றுமைகள் எழுந்தன.

இலனென்னும் எவ்வம் உரையாமை, ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

என்ற குறளுக்கு எழுந்த உரைகளை நோக்கின், நயவுணர்வு தவிரப் பொருளுணர்வில் வேறுபாடில்லை என்பது வெளிப்படை. வேற்றுமையுரைகளாகப் பரந்து காணப்படும் இடங்களையெல்லாம் உராய்ந்து பார்ப்பின், அவ் வேற்றுமைகளிற் பல, சாரமிலாப்பொடிபோல, உரைப் பொடிகளாக வறிதுபடுவதைக் காணலாம்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (82)

அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான் (163)

சாவா மருந்தாகிய அமிழ்தமானாலும் தனித்து உண்ணக்கூடாது என்ற கருத்தும், ஒருவன் தனித்துண்ணுதலே சாவா மருந்து ஆகும் என்ற கருத்தும் பெரிய வேற்றுமைகளா? அறனும் ஆக்கமும் என்ற உம்மைத் தொகையும், அறத்தினால் ஆகிய ஆக்கம் என்ற மூன்றாம் வேற்றுமைத் தொகையும் என்ன பொருள் வேற்றுமையைச் செய்துவிட்டன.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் (605)

இக்குறளில் காமக்கலன் என்பதற்கு விரும்பி யேறும் மரக்கலம் எனவும், விரும்பிப் பூணும் அணிகலம் எனவும் பொருள்வேற்றுமை உண்டு. இவை கல்லும் பல்லும் போல முரண்பட்ட வேற்றுமைகள் அல்லவே! இவ்வுரைகள் மூலப் பொருளை மறையா.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

குடம்பை என்ற சொல்லுக்குப் பொருள் முட்டை என்பார் பரிமேலழகர்; கூடு என்பார் மணக்குடவர். இவற்றையெல்லாம் உரைக்கிளைகள் என்று கொள்ள வேண்டுமேயன்றி, மூலத்தை மறைக்கும் உரைத்திரைகள் அல்லது உரை மூடிகள் என்று பெரிது படுத்தலாகாது.

**கருத்துப் பூசல்கள்:**

திருக்குறளில் ஆசிரியர், காலம், அமைப்புப் பற்றித் தோன்றிய, தோன்றி வளர்ந்து வரும் ஆய்வுப் பூசல்கள் எண்ணிறந்தன. திருக்குறள் ஒருவர் செய்த தனிநூலா, பலர் செய்த தொகுப்பு நூலா எனவும், பாயிரம் எனப்படும் முதல் நான்கு அதிகாரங்களும் திருக்குறளுக்கு உரியனவா எனவும், காமத்துப் பாலை வள்ளுவர் எழுதினாரா எனவும், அதிகாரத் தலைப்புகளும், அதிகார வைப்பு முறையும், அதிகாரத்துள் குறள்வைப்பு முறையும் செய்தவர் யார் எனவும், கருத்தோட்டங்கள் உள. கடவுள், தெய்வம், வினை, உயிர், இம்மை, மறுமை, நரகம், வீடு, பிறப்பு, இறப்பு, துறவு ஊழ் முதலான கொள்கைகள் பற்றியும், சாதி, வேள்வி என்றின்ன ஆரிய வேதநாகரிகக் கலப்புப் பற்றியும், பிறப்பொழுக்கம், அந்தணர், பார்ப்பான், எழுபிறப்பு, அடியளந்தான், இந்திரன், அறுதொழிலோர் நூல், ஆதிபகவன், மலர்மிசை யேகினான் என்றிவற்றின் பொருள் பற்றியும், கருத்துப்பின்னல்கள் உள.

சொற்பழமை, இலக்கணவீழ்ச்சி, மரபு மாற்றம், உரைப்பான்மை, உரை வேற்றுமை, உரைப் பொடிகள், கொள்கைப் பூசல்கள், கருத்து மோதல்கள், கருத்துப் பிறழ்வுகள் என்றாங்குப் பல சிக்கல்கள் திருக்குறளுக்கு வந்து கொண்டிருக்கின்றன எனவும், இந்த இருட்டிரைகளை அகற்றி எல்லோரும் ஒப்ப விளக்கந் தந்தாலல்லது திருக்குறளில் தெளிவு பிறவாது எனவும், கண்டாங்கும் பட்டாங்கும் கற்றாரும் ஆய்வாளரும் மொழியாளரும் குறை பரப்பி வருகின்றனர். இவற்றைத் தெளிவிக்க வேண்டும், வள்ளுவர் நெஞ்சம் நேர்முகமாகத் தெரியவேண்டும். உரைவேற்றுமை குறைய வேண்டும் என்ற அவா எனக்கும் நிரம்ப வுண்டு. இந்நோக்கில் ஆராய்ச்சிகள் நெறிப்படல் வேண்டும் என்ற ஆராவிருப்பம் குறளன்பர்க்கெல்லாம் வேண்டும் எனினும், அழுந்திய ஆழமான ஓர் உண்மையை வலியுறுத்துவதற்காகவே இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

சிலர் நினைப்பதுபோல் கருத்துப்போர்கள் பலவிருப்பினும், மேலும் வளரினுங்கூட, அவையெல்லாம் திருக்குறளின் அடிப்படையறங்களையும், செயலுக்குரிய வாழ்க்கை வள்ளுவங்களையும், தில்லைமறை போலத்திரையிட்டு மறைக்கவில்லை. குறள்யாப்பு என்ற ஈரடிப்பாத்தியில் அறநெறிப்பயிர்கள் வெற்றிக் கொடிபோல வெளிப்படையாகவே இயல்புக் கண்ணாளர்க்கும் காட்சி தந்துகொண்டிருக்கின்றன. திருக்குறளில் வள்ளுவரின் எண்ணங்கள் வெளிப்படை; அவற்றைக் கற்பதற்கும் கேட்பதற்கும் இயல்பான வழக்குத் தமிழறிவு போதும். இதனால் உரைகளும் விளக்கங்களும் வேண்டா என்பது கருத்தன்று. அவை புலமையையும் அறிவையும் பெருக்குவன. இதுவே அவற்றின் பெரும்பயன்; அவை செயலைத் தூண்டா; செயலார்வத்தைப் பெருக்கா; நெஞ்சினை நேரடியாக இயக்கா; வாழ்வினை உணர்ச்சிப்படுத்தா; உள்ளத்துள் ஊடுருவிப்பாயா.

**குறள் வெளிப்படை:**

திருவள்ளுவர் தம் நூலின் விளக்கத்துக்குப் பிற்கால உரைகளை எதிர்பார்த்தோ கட்டுரைகளை எதிர்பார்த்தோ எழுதவில்லை. தம் நூல் தானே விளங்கும், விளங்க வேண்டும் என்ற வெளிப்படை நடையிற்றான் யாத்துள்ளார். மூலக்குறள்களைப் பன்முறை படிக்கப் படிக்க வள்ளுவர் நெஞ்சுக்கும் நம் நெஞ்சுக்கும் உணர்ச்சித் தொடர்பு நெருங்குவதை உணர்கின்றோம்; குறட் சொற்கள் உயிர் நடைபெற்று நம் உள்ளத்தில் பாய்வதை உணர்கின்றோம்; உரைகள், விளக்கங்கள் என்னும் தீண்டாமைகளைக் கடந்து குறள்வடிவாக இருக்கும் திருவள்ளுவரின் நெஞ்சத்தினை நம் செயல் நெஞ்சத்தால் தீண்டுகின்றோம். மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் என்பதுபோல, மூலக்குறளைத் தீண்டல் வாழ்வின்பம் ஆகும்.

உரையின்றி, விளக்கமின்றித் திருக்குறளின் மூலங்களை அறிந்துகொள்ள இயலாது என்ற ஒரு பெருந்தவறான பொருந்தாக் கருத்து, எப்படியோ மக்களுலகிற் பரவிக் கிடக்கின்றது. இது உரையின் குறையன்று, விளக்கத்தின் குறையன்று; கல்விமுறையின் குறையாகும். காலிருப்பினும் செருப்பின்றி நடக்கவியலாது என்ற கருத்து, இன்று இல்லையா? நடக்கக்

கூடாது என்ற கருத்துக்கூட, இன்று பரவக் காண்கின்றோம்!

திருக்குறள் தோன்றிய காலத்து, உரையும் உடன் தோன்றவில்லை. ஆயிரம் ஆண்டுகள் கழித்துத்தான், உரை பெருக்கெடுத்தது. மூலத்தைக் கற்கும் முறை வேறு; உரைகளைக் கற்கும் முறை வேறு; மூலத்தின் பயன் வேறு; உரையின் பயன்வேறு; மூலத்தைக் கற்கும் போது உரையாசிரியர்களை நினைக்கின்றோம் குறள் மூலத்தின் பயன் செயல்; குறளுரையின் பயன் விளக்கம். ஆதலின் வாழ்வு வேண்டின், செயலியக்கம் வேண்டின், வள்ளுவர்தம் உறவு வேண்டின், திருக்குறள் மூலங்களோடு தான், நமக்கு முதலுறவு வேண்டும். மூலக் குறள்கள், உரைகளைக் காட்டிலும் ஏன், உரைக் குரையைக் காட்டிலும் வெளிப்படை.

1. தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (7)

2. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று (103)

3. சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். (200)

4. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க் குப்
பொய்யா விளக்கே விளக்கு. (299)

5. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (467)

6. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (666)

7. கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

இவைபோலும் நூற்றுக்கணக்கான குறட்பாக்கள், தம் கருத்துக்களை இருட்படை செய்யாமல் ஒளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றின் பொருளை அறிதற்கும் மேற்கொள்ளற்கும் உரைகள் வேண்டுமா? எழுத்தறிவில்லாருகூடக் கேள்வியளவில் இவற்றின் கருத்துக்களை உணர்ந்து கொள்ளமாட்டார்களா? 'கற்றிலனாயினும் கேட்க' எனவும், 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' எனவும் அறிவுப்பறையறைந்த வள்ளுவர், கல்லாரும் கேட்டு விளங்கிக் கொள்ளுமாறுதானே, தம் அறநூலை வெளிப்படை நடையில் இயல்பாக எளிதாக யாத்திருப்பார்? ஆதலின் வாழ்வும் உணர்ச்சியும் செயலும் வளமும் விரும்பும் தமிழ்மக்கள், திருக்குறளை உரைகளினின்றும் விடுதலைப் படுத்தி, மூலக்குறள்களை நேரே தீண்டுவார்களாக. நீரை உறிஞ்சிவழிக் குடிப்பதைக் காட்டிலும் வாய் வைத்துக் குடிப்பதனால் வருஞ் சுவை பெருஞ்சுவையல்லவா?

# நிர்வாக அதிகாரிகள் நியமனம்

(15) தென்ஆர்க்காடு மாவட்டம், கடலூர் முதுநகர் அருள்மிகு ஐந்துகிணற்று மாரியம்மன் கோயில், திருவகீந்திரபுரம், அருள்மிகு தேவநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (2—9—1982).

(16) சென்னை-5, நாகப்பய்யர் தெரு அருள்மிகு ஆஞ்சநேயசுவாமிகோயில், திருவேட்டீசுவரன்பேட்டை அருள்மிகு திருவேட்டீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (2—9—1982).

(17) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வேப்பக்குடி—புதுக்குடி சதாசிவ ஐயர் அறக்கட்டளைகள், அருள்மிகு சிவன்—அய்யனார் கோயில்கள். தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம், சூலமங்கலம் அருள்மிகு கீர்த்திவாகீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (15—9—1982).

(18) தென்னார்க்காடு மாவட்டம், திட்டக்குடி வட்டம், கீழைஆதனூர் அருள்மிகு கோரீசுவரர்—வரதராசப்பெருமாள்—செல்லியம்மன்—அய்யனார் சந்நிதி—பிள்ளையார் கோயில்கள், ஷை திட்டக்குடி அருள்மிகு வைத்தியநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (15—9—1982).

(19) தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நாரணமங்கலம், அருள்மிகு வரதராசப் பெருமாள் கோயில், ஷை குடவாசல் அருள்மிகு கோணேசுவர சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (16—9—1982).

(20) பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், கலிவலசு அருள்மிகு பச்சை மரகதவல்லி பட்டீசுவர சுவாமி கோயில், சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (16—9—1982).

(21) தஞ்சாவூர் மாவட்டம் குடவாசல் வட்டம், நாரணமங்கலம் அருள்மிகு நாராயணேசுவரர் கோயில், குடவாசல் அருள்மிகு கோணேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கம்பர் வாழ்ந்த காலம்

'மகாவித்வான்'-'மகாமகிமோபாத்தியாய'

திரு பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

கம்பர்பெருமான் வாழ்ந்தது நாதமுனிகளின் காலத்தில் என்று சிலருடையவோ, பலருடையவோ கருத்தாகக் காண்கின்றது. அவர் கூரத்தாழ்வான் திருக்குமாரர் ஆகிய பராசர பட்டருடைய காலத்தில் வாழ்ந்ததோடு, அவருடைய காலட்சேப கோஷ்டியிலும் ஈடுபட்டிருந்து நுண்பொருள் பல கேட்டவர் என்னும் உண்மையை, அக்கம்பர் இயற்றிய சடகோபர் அந்தாதியைக் கொண்டும், அவர் இயற்றிய கம்பராமாயணம் கொண்டும் இங்கு மூதலிக்கின்றோம். சில ஆண்டுகட்கு முன்பு, பெருந் தமிழர்கள் நிரம்பிய கூட்டங்களில் இதுபற்றிச் சொற்பொழிவு ஆற்றி, அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்று உடன்படவும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் அதுபற்றி இங்குச் சுருக்கமாக வரைகின்றோம். முந்துற முன்னம் சடகோபர் அந்தாதியினின்று கேண்மின்:

''அந்தம் இலாமறை ஆயிரத்து
ஆழ்ந்த அரும்பொருளைச்
செந்தமிழ் ஆகத் திருத்திலனேல்
நிலத் தேவர்களும்
தந்தம் விழாவும் என்னாம்?
தமிழார் கவியின்
பந்தம் விழா ஒழுகும் குருகூர்
வந்த பண்ணவனே''

என்பது சடகோபர் அந்தாதியில் வருகின்ற ஒரு சிறந்த அழகிய செய்யுள்.

இதனால் நாம் தெரிந்து கொள்ளுவது என்னவென்றால், கம்பர் காலத்தில் விஷ்ணு ஆலயங்களில் திவ்வியப் பிரபந்த கோஷ்டிகள் மிகச் சிறப்பாக விளங்கினதாகத் தெரியவருகின்றது. ஆழ்வார் திவ்வியப்பிரபந்தங்கள் அருளிச் செய்யாவிடில் விஷ்ணு ஆலயங்களும்வைணவர்களும் அழகு இழந்து கிடக்க அன்றோ நேர்ந்திருக்கும் என்று, அனுபவ ரசிகராய் இதயம் பொங்கிக் கம்பர் அருளிச் செய்திருக்கின்றார்.

நாதமுனிகள் தமது காலத்தையெல்லாம் திவ்வியப்பிரபந்தத்தைத் தேடித் தொகுப்பதில் பெரிதும் செலவிட்டாரேயன்றி, அவற்றைப் பிரச்சாரம் செய்யப் பெரிதும் பாடுபட்டிலர். மேலையகத்தாழ்வார், கீழையகத்தாழ்வார் என்னும் இருவருக்குத் தாம் பெற்ற திவ்வியப் பிரபந்தங்களை உபதேசித்தருளி, அவர்கள் முகமாகத் தேவகானத்தில் சந்நிதிகளினுள்ளே சேவிக்கும்படி செய்தருளின அத்தனையே, நாதமுனிகளின் செயலாகும். ''அரையர் சேவை'' என்று இன்றைக்கு வழங்கும் பிரக்கிரியைதான் எம்பெருமானார் காலம்வரையில் நிகழ்ந்து வந்தது. எம்பெருமானார் காலத்தில்தான் திருவீதிகளில் திவ்வியப்பிரபந்தங்களைக் கோஷ்டியாகச் சேவிப்பது என்னும் வழக்கம் தொடக்கமாயிற்று. ஆகவேதான், எம்பெருமானார் வாழித் திருநாமத்தில், ''மாறன் உரைசெய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே'' என்று அனுசந்திக்கப்பட்டு வருகின்றது. அந்த வாழித் திருநாமம், ஆர்த்திப் பிரபந்தத்தில் பொய்யிலாத மணவாள மாமுனிகள் அருளிச் செய்தது. எங்கும் திவ்வியப்பிரபந்தச் சாத்து முறைகளில் ''சர்வதேச தசா காலேசு அவ்யா கத பராக்ரமா, ராமாநுஜாரியா திவ்யாக்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்'' என்று அனுசந்திக்கப் படுவதைக் கண்டால், இந்த இராமாநுசாரிய திவ்விய ஆக்ஞையானது, திவ்வியப்பிரபந்த கோஷ்டி நியமனப்பிரத்தியம் என்பது தெற்றென விளங்கும். இது தவிரவும் இயல்சாற்று சேவிக்கும்போது,

நன்றும் திருவுடையோம் நானிலத்தில்
எவ்வுயிர்க்கும்
ஒன்றும் குறையில்லை ஓதினோம்! - குன்றம்
எடுத்தான் அடிசேர் இராமா நுசன்தாள்
பிடித்தார் பிடித்தாரைப் பெற்று!

வாழியரோ தென்குருகை! வாழியரோ
தென்குருகை!
வாழியரோ தென்குறையல் மாநகரம் -
வாழியரோ
தக்கோர் பரவும் தடம்சூழ் பெரும்பூதூர்
முக்கோல் பிடித்த முனி

என்னும் இந்த இரு வெண்பாக்களை உலகமெங்கும் வைணவப் பெருமக்கள் அனுசந்தித்து வருவதனை ஆராய்ந்தால், எம்பெருமானார் காலத்தில்தான் திருவீதிகளில் கோஷ்டியாகத் திவ்வியப்பிரபந்தங்களைச் சேவிக்கும் வழக்கம், அவர்தம் திருவாணையால் ஏற்பட்டதென்பது இனிது விளங்கியே தீரும். ஆக நாதமுனிகள் காலத்தில், மேலே எடுத்துக் காட்டிய பாசுரம்

அவதரித்தது என்பதற்குப் பிரசக்தி ஒருசிறிதும் இல்லை என்பது உணரப்பெறும்.

இனி, கம்பராமாயணத்தினின்றும் சில சான்றுகள் காட்டுகின்றோம்: வைணவ சம்பிர தாயத்தில் ஆஞ்சநேயரைச் சிறிய திருவடி என்றும், கருடனைப் பெரிய திருவடி என்றும், சடாயு மகாராசரைப் பெரியவுடையார் என்றும், இங்ஙனே பலபல சிறப்புப் பெயர்கள் நிகழ்ந்து வருவது பிரசித்தம். சிறிய திருவடி என்னும் அனுமனைப் பெரும்பாலும் திருவடி என்றே வழங்குவர். இத்தகைய வியபதேசங்கள் எம்பெருமானார் காலத்திற்கு முன்னே கிடையவே கிடையாது என்று திண்ணமாகக் கூறலாம். எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் ஆகியோர் காலத்தில்தான் இப்பெயர்கள் வழங்கப்பெற்றன. இதனைச் சிறு விஷயமாகக் கருதிப் புறக்கணித்தல் ஆகாது.

மேலே கேன்மின்: கம்பராமாயணம் கிட்கிந்தாகாண்டம் முடிவில் ஆஞ்சநேயர் கடல் தாவப் புறப்பட்டதனைக் கம்பர் கூறும் செய்யுள் கேளீர்

''பொருவறு வேலை தாவும்
புந்தியான், புவனம் தாய
பெருவடிவு உயர்ந்த மாயோன்
மேக்குறப் பெயர்ந்த தாள்போல்,
உருஅறி வடிவின் உம்பர்
ஓங்கினன்; உவமை யாலும்
திருவடி என்னும் தன்மை
யாவர்க்கும் தெரிய நின்றான்''

இதன்கண் ''திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரியநின்றான்'' என்று கம்பர் பாடியுள்ளதனை நாம் விவரிக்க வேணுமோ? ஆஞ்சநேயர்க்குத் திருவடி என்னும் சிறப்புத் திருநாமம் வழங்கிவந்தமை, இங்கு மிகவும் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளதாயிற்று. நாதமுனிவரின் காலத்தில் ஆஞ்சநேயருக்கு இங்ஙனே ஒரு வியபதேசம் இருந்தது என்று காட்டமுடியுமோ?

இது மட்டுமேயன்று வேறொன்றும் இங்குச் சிந்திக்கத் தக்கது. அடைக்கலம் புகுந்த விபீடணனை ஏற்றருளும் சக்கரவர்த்தித் திருமகன் ஆகிய இராமபிரான் கூறியதாகக் கம்பர் பாடிய செய்யுள் இங்கு நாம் கருதுதற்குரியது.

''ஆதலான் அபயம் என்ற
பொழுதத்தே அபய தானம்
ஈதலே கடப்பாடு என்பது,
இயம்பினீர் என்பால் வைத்த
காதலால்; இனிவேறு எண்ணக்
கடவது என்? கதிரோன் மைந்த!
கோதிலா தவனை நீயே
என்வயிற் கொணர்தி என்றான்''

கம்பர் பாடிய கவின்மிகும் இச்செய்யுளின்கண், ஓர் இதிகாசம் குறிக்கொள்ளத்தக்கது; எம்பெருமானார் என்னும் இராமாநுசரைச் சிலர் கேட்டார்களாம் - ''விபீடணாழ்வானைச் சுக்ரீவன் முதலியோர் இராமகோஷ்டியில் புகுதவிடோம் என்கிறார்கள்; இராமபிரான் விபீடணாழ்வானைக் கைவிடமாட்டேன் என்கிறார்; இருவருடையவும் கருத்து யாதுகொல்?'' என்று. அதற்கு எம்பெருமானார் ''இருவரும் சரணாகத ரட்சணம் பண்ணப் பார்க்கிறார்கள்'' என்று விடையளித்தார். விபீடணன் 'இராகவம் சரணம் கத' என்றான் ஆகையாலே, அவன்பால் பரிவு உண்டாகி, இராமபிரான் அவனைப் பாதுகாக்கக் கருதியபடி. 'சுக்கிரீவம் சரணம் கத' என்று இராமபிரான் சுக்ரீவனைச் சரணாகதி பண்ணினபடியால், அந்தப் பெருமான்மீது பரிவு உண்டாகி, விபீடணனால் இராமபிரானுக்கு என்ன தீங்கு வருமோ என்று ஐயப்பட்டுச் சுக்ரீவன் அவனை விபீடணனைஏற்றுக்கொள்ளாதபடி தடைசெய்ய முற்பட்டான் என்று இராமாநுசர் விடையருளிச் செய்தாராம். இச் சிறந்த நுண்பொருள் பட்டர் கோஷ்டியில் சிறப்பாக எடுத்து உபந்நியசிக்கப்பட, அதைக் கேட்டிருந்த கம்பர் ''இயம்பினீர் என்பால் வைத்த காதலால்'' என்று பாடுவாராயினார். இது வான்மீகத்தில் எங்கும் கண்டதன்று. இத்தகைய நுண்பொருள் வளங்கள் கம்பராமாயணத்தில் ஆங்காங்கே காண்பதனாலும், கம்பர் நாதமுனிகள் காலத்தவர் அல்லர், பட்டர் காலத்தவரே என்று அறுதியிடத் தட்டில்லை.

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ்க் கோயில்களில் நல்ல நிர்வாகம் நடைபெறுதல் குறித்துப் பின்வருமாறு நிர்வாக அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :

(1) தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், புதுக்குடி அருள்மிகு திருச்சடேசுவரர் கோயில், ஷெ மாவட்டம் வெந்தயம்பட்டி அருள்மிகு தான்தோன்றீசுவர சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(2) திருநெல்வேலிச் சந்திப்பு, பேருந்து நிலையம் அருள்மிகு கல்யாண விநாயகர் கோயில், சிந்துபூந்துறை அருள்மிகு பாளையம் சாலைக்குமாரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(3) தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் நகரம், மஞ்சக்குப்பம் அருள்மிகு விநாயகர்—திரௌபதியம்மன்கோயில், ஷெ மாவட்டம் திருவகீந்திரபுரம் அருள்மிகு தேவநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

# திருநன்னிலத்துப் பெருங்கோயில்

திரு டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

''வலங்கிளர் மாதவஞ்செய்
மலை மங்கையொர் பங்கினனாய்ச்
சலங்கிளர் கங்கைதங்கச்
சடை ஒன்றிடை யேதரித்தான்
பலங்கிளர் பைம்பொழில்தண்
பனி வெண்மதி யைத்தடவ
நலங்கிளர் நன்னிலத்துப்
பெருங் கோயில் நயந்தவனே'',

என்று சுந்தரர் பெருமானால் போற்றிப் பரவப் படும் நன்னிலத்துப் பெருங்கோயில், கும்ப கோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் பெரு வழிப்பாதையில், முப்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நன்னிலம் பேருந்து நிலை யத்துக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஊருக்குள் அமைந்துள்ளது. இக்கோயில் மாடக் கோயிலாய் அமைக்கப்பட்டிருப்பதால் பெருந்திருக்கோயில் என்று சிறப்பித்து, அழைக்கப்படுகின்றது.

சிறிய கோபுரத்துடன் அமைந்த நுழை வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் படிக் கட்டுகளுடன் அமைந்த மாடக்கோயில் நம்மை வரவேற்கின்றது. வாயிலுக்கும், மாடக்கோயில் படிக்கட்டுகளுக்கும் இடையே இலேசாகப் புல்வளர்ந்த மண்தரை உள்ளது. படிக்கட்டுகள் மாடக்கோயிலின் இடப்புறம் அமைந்துள்ளன. பதினேழு படிக்கட்டுகளைக் கடந்து மேலே ஏறியதும் சிறிய விமானத்துடன் கூடிய உட் கோயில் ஒன்று நம்மை எதிர் கொள்கின்றது. இது பூட்டப்பட்டுள்ளது. இதனுள் தெய்வ வடிவங்கள் இல்லை யென்று குருக்கள் சொல்ல அறிந்தோம். இந்த உட்கோயிலை ஒட்டிச் செவ் வக வடிவத்தில் ஒருமண்டலம் அமைந்துள்ளது. இதற்குத் தெற்குப் பார்த்த வாயிலொன்றும் கிழக்குப் பார்த்த வாயிலொன்றும் உள்ளன. தெற்குப் பார்த்த வாயில் மூன்று படிகளுடனும் கிழக்குப் பார்த்த வாயில் நான்கு படிகளுடனும் அமைந்துள்ளன. இந்த மண்டபமும் உட்கோயி லும் அமைந்திருக்கும் மேடையைச்சுற்றி ஒரு சிறிய மதில் சுவர் கட்டப்பட்டுள்ளது. இந்த மதிலின் தெற்குப்புறம் மண்டபத்தின் வெளிச்சுவரிலுள்ள புரையில் நர்த்தன விநா யகர் வடிவம் ஒன்றுள்ளது. அதையடுத்துள்ள புரையில் தென்திசைக் கடவுள் வீற்றிருக்கின் றார். இச்சுவரின் மேற்குப்புறம் புரையில் லிங்கோத்பவரும் வடக்குப்புறச் சுவரிலுள்ள புரையில் நான்முகன் வடிவமும், அதையடுத் துள்ள புரைகளில் ஆடவல்லான், துர்க்கை வடி வங்களும் அமைந்துள்ளன. வடக்குப் புறச் சிறு மதிலும், கிழக்குப் புறச் சிறுமதிலும் கூடும் இடத்தில் ஒரு மணிமண்டபம் அமைந்துள்ளது.

செவ்வக வடிவில் அமைந்துள்ள பெரு மண்டபத்தில் தெற்கு வாயிலாய் நுழைந்ததும் எதிரே விமானத்துடன் கூடிய அறையொன்று உள்ளது. அதனுள் தெய்வ வடிவங்கள் இல்லா மல் வெறுமையாக உள்ளது. இம்மண்டபத்திற் கான கிழக்கு வாயிலுக்குக் கதவுகள் இல்லை. பெருமண்டபத்தை அடுத்து வாயிலுடன் கூடிய அர்த்தமண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்ட பத்தில் நந்தி மேற்குப் பார்த்தமுகமாக அமர்ந் துள்ளது. அர்த்த மண்டபத்தை அடுத்துக் கருவறை வாயிலில் இடதுபுறம் விநாயகரும் வலதுபுறம் முருகனும் அருள் செய்கின்றனர். கருவறையில் இறைவன் இலிங்க வடிவில் எழுந் தருளியுள்ளார். கிழக்குப் பார்த்த திருமுன் னில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு மது வனநாதர் என்று பெயர். இறைவன் திருவடி வத்துக்கும் பின்புறமுள்ள சுவரில் தேன் கூடு ஒன்று இருந்ததாகக் கூறுகிறார்கள். இப் போது அங்கு ஒன்றுமில்லை. கருவறையின் விமானம் அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந் துள்ளது.

இம்மேடைக் கோயிலை விட்டுக் கீழிறங்கி னால் படிக்கட்டுக்களை ஒட்டி ஒரு சிறிய திண்ணையின் மீது இலிங்கம் அமைக்கப்பட் டுள்ளது. அதற்கு ஓலைக்கூரை வேயப்பட்டுள் ளது. அதையடுத்து, விமானத்துடன் கூடிய சிறிய தொரு உட்கோயிலில் கிழக்குப் பார்த்த முகமாக அகத்திசுவரர் வீற்றிருக்கிறார்.

வெளித் திருச்சுற்றில் கோயில் வாயிலை ஒட்டிப் பிள்ளையார் சிலை ஒன்றும், மேற்குப் பார்த்த நிலையில் நந்தி ஒன்றும் அமைந்துள் ளது. வெளித்திருச்சுற்றில் தெற்குப் புறத்தில் தென்திசைக் கடவுளும், மேற்குப் புறத்தில் இடப்புற ஓரத்தில் விநாயகரும், வலப்புற ஓரத்தில் திருமகளும் சிறிய விமானத்துடன் கூடிய தனித்தனி உட்கோயில்களில் உள்ளனர். இவ்விரண்டு உட்கோயில்களுக்கும் நடுவே முரு கன் தன் இருமனைவியருடனும் ஒரு தனிச் சிறுகோயிலில் எழுந்தருளியுள்ளார். வடக்குப் புறத்தில் சண்டிகேசுவரர் திருமுன் உள்ளது.

கோபுரவாயிலை ஒட்டிக் கிழக்குப்புறத் திருச்சுற்றில் வலதுபுறமாக ஒன்பான்கோள், கால-பைரவர், சனீசுவரர் முதலிய கடவு ளர்க்குத் தனித்தனியாகச் சிறுசிறு மண்டபங்கள்

அமைக்கப்பட்டுள்ளன. இடதுபுறம் மடைப் பள்ளி உள்ளது. வலது புறத்தில் அகத்தீசுவரர் கோயிலுக்கும் இச்சிறு மண்டபங்களுக்கும் இடைப்பட்ட நிலத்தில், விமானத்துடன் கூடிய காரைக்கட்டிடம் ஒன்று உள்ளது. இதில்தான் மதுவனநாயகி அம்மன் கோயில் கொண்டுள்ளார். கூடுபோன்ற அமைப்புடன் கூடிய முன் மண்டபமும், சிறிய அர்த்த மண்டபமும், அதையடுத்து அம்மன் திருமுன்னும் இக்காரைக் கட்டிடத்தில் அமைந்துள்ளன. இக்கோயிலின் வெளிச்சுவர் பல இடங்களில் சிதிலமாகி நிற்கிறது. வடக்கு புறச்சுவர் பெரும்பாலும் விரிசல் விட்டு, 'விழுந்து விடுவேன்' என்பது போல் அச்சுறுத்திக் கொண்டு உள்ளது. இச் சுவரில் புதிய திருப்பணிக்கான அடையாளக் கல்லொன்று பதிக்கப்பட்டுள்ளது. கல் பதிக்கப் பட்டதுடன் சரி, திருப்பணி ஏதும் நடக்கவில்லை என்று ஊரார் வருத்தமுடன் கூறியது வேதனையாக இருந்தது.

இக்கோயில் இறைவனைச் சுந்தரர் பெருமான் பாடியுள்ளார். ''சேடுயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்கணான் செய்கோயில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே'' என்ற சுந்தரரின் பதிகவரிகள், இம்மாடக் கோயிலை எழுப்பியவன் கோச்செங்கட் சோழனே என்பதை உறுதி செய்கின்றன. இக்கோயில் இப்போது செங்கல் திருப்பணியாய் அமைந்துள்ளது. இக்கோயிலில் இருந்து இரண்டு கல்வெட்டுக்கள் இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று இக்கோயில் மடைப் பள்ளியில் உள்ள கல்லில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்துத் தமிழ்க் கல்வெட்டான இது கி.பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டைச்சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இதில் நாரணன் என்பவர் நன்னிலம் கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்கப் பன்னிரண்டு கழஞ்சு பொன் கொடுத்த செய்தியும், அதனை மூன்று பேர் பெற்றுக் கொண்டு (வட்டிக்கு) விளக்கெரிக்க ஒப்புக்கொண்ட செய்தியும் கூறப் பட்டுள்ளது. இக்கல்வெட்டு சிதைந்துள்ளதால் மன்னரின் பெயரும் காலமும் அறியக்கூடவில்லை. இன்னொரு கல்வெட்டும் தமிழில், இக்கோயில் கருவறையிலுள்ள தூணில் செதுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் சிதைந்துள்ளதால் இதிலுள்ள செய்தியை அறியக்கூடவில்லை.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்து, நூற்றிருபத்தாறு இடங்களுக்குப் பயணம் செய்த அப்பர் அடிகளும், இருநூற்று முப்பது இடங்களுக்குப் பயணம் செய்த சம்பந்தரும் இத்தலத்தைப் பாடவில்லை. இதற்கு வெகு அருகிலுள்ள திருப்புகலூர், திருமருகல் திருச்செங்காட்டங்குடி போன்ற தலங்களைப் பாடியுள்ளார். எனவே சம்பந்தர், அப்பர்காலத்தில் இக்கோயில் பழுதுபட்டுக் கவனிப்பாரற்றுப் போயிருக்க வேண்டும். பல்லவர்களை முறியடித்துச் சோழப் பேராட்சியைத் தமிழகத்தில் துவக்கிய ஆதித்தசோழன் காலத்தில் இக் கோயில் திருப்பணி நடந்திருக்கவேண்டும். அன்பில் செப்பேடுகள் ஆதித்தன் காவிரியின் இருபுறமும் உள்ள மண்டபங்களைக் கற்றளிகளாக்கிய செய்தியைச் சொல்கின்றன. இக் கோயில் மடைப்பள்ளிக்கல்லில் காணப்படும் அரசன்பெயர் தெரியாதகல்வெட்டின் காலமும் கி.பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு என வரையறுக்கப்பட்டுள்ளது இங்கு எண்ணத் தகுந்தது. ஆதித்தன் காலமும் இக்கல்வெட்டின் காலமும் ஒத்துப்போகின்றது. இத்துடன் பல கல்வெட்டுக்கள் இக்கோயிலில் இருந்திருக்கலாம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் தன் பயணத்தின்போது இக்கற்றளியைக் கண்டு இங்குள்ள இறைவனைப் பாடியுள்ளார். பிற்காலத்தில் இக்கற்றளியும் சிதைந்து போய் இப்போதுள்ள செங்கல் திருப்பணி நடந்திருக்கவேண்டும். திரு அரிசிற்கரைப் புத்தூர் என்னும் அழகார் திருப்புத்தூர்க் கோயிலுக்கும் இதுபோலவே நடந்தது இங்கு எண்ணத்தகுந்தது. இவ்வூரிலும் கோச்செங்கணான் கட்டிய கோயில், முதலாம் இராசராசன் காலத்தில் கற்றளியாக்கப்பட்டு, பின் இந்நூற்றாண்டின் துவக்கத்தில் சிதைந்த நிலையில் இருந்த அக்கற்றளி முழுவதுமாக இடிக்கப்பட்டு, இப்போதுள்ள புதிய திருப்பணி நிலை கொண்டது. எனவே நன்னிலம் கோயிலும் கோச்செங்கட் சோழனால் செங்கல் திருப்பணியாகக் கட்டப் பட்டு, பின் ஆதித்த சோழனால் கற்றளியாக் கப்பட்டு, மீட்டும் பிற்காலத்தில் செங்கல் திருப் பணிக்குள்ளாகியிருத்தல் வேண்டும்.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளையுடைய இவ்வழகிய மாடக்கோயில் இன்று சுற்றுச்சுவர்கள் அனைத்தும் சிதிலமான நிலையில், திருச்சுற்று முழுவதும் செடிகளும் கொடிகளும் காடாய் மண்டிக் கிடக்க, பாழடைந்தாற் போன்றதொரு தோற்றத்துடன் விளங்குவதை மாற்றி, பழம் பொலிவையும், சிறப்பையும், பெருமையையும் இக் கோயிலுக்கு ஏற்படுத்தி வளர்க்க வேண்டியது தமிழர்தம் தலையாய கடமையாகும்.

# "அஞ்சினாற் பொலிந்த சென்னி"

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

''அஞ்சினால் இயற்றப் பட்ட
ஆக்கைபெற்று, அதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப் பட்டு, இங்கு
உழிதரும் ஆத னேனை,
அஞ்சினால் உய்க்கும் வண்ணம்
காட்டினாய்க்கு, அச்சம் தீர்ந்தேன்;
அஞ்சினாற் பொலிந்த சென்னி,
அதிகைவீ ரட்ட னீரே''

## முன்னுரை

இத் திருநேரிசைச் செய்யுள், திருநாவுக்கரசர் பெருமானால், திருவதிகை வீரட்டானத்திற் பாடப்பெற்ற, நான்காம் திருமுறையில் அமைந்து விளங்குகின்றது. ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை'' என்பன போல வருகின்ற திருக்குறள்கள் பலவற்றிற் போல, இத்திருநேரிசைச் செய்யுளிலும், சொற்பொருட் பின்வரும்நிலை என்னும் அணி, அழகுற அமைந்திருக்கின்றது.

இஃது ''அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி, அஞ்சிலே ஒன்று ஆறாக, ஆரியற்காக ஏகி, அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு, அயலார் ஊரில் அஞ்சிலே ஒன்றை வைத்தான்; அவன் எம்மை அளித்துக் காப்பான்'' எனவரும் கம்பராமாயணச் செய்யுளை நினைப்பிக்கும் வகையில், அஞ்சு (ஐந்து) என்னும் எண்ணுப்பெயர், நான்கு அடிகளிலும் விரவி வர இயன்றுள்ளது.

## ஐயப்பாடு

இதன்கண், முதல் மூன்று வரிசைகளிலும் அமைந்துள்ள 'அஞ்சு' என்னும் சொல், முறையே ஐம்பூதம்-ஐம்பொறி-ஐந்தெழுத்து-என்பனவற்றைக் குறிக்கும் நிலையிற் பெரிதும் தெளிவுறப் பயின்று வந்துள்ளது. ஆனால் நான்காம் அடியிற் பயின்றுள்ள 'அஞ்சு' என்னும் எண்ணுப்பெயர், எவற்றைக் குறிப்பிடுகின்றது என்பது தெளிவாகப் புலப்படவில்லை. ஒரு சிலர் 'ஆன் அஞ்சும் ஆடினான் காண்' என்றும், 'அஞ்சு கொலாம் அவர் ஆடின தாமே' என்றும், ஆங்காங்கே பல இடங்களில் தேவாரப் பாடல்களிற் பாடப்பெற்றிருப்பதனால், 'ஆன் அஞ்சு (பஞ்ச கவ்வியம்) கொண்டு ஆட்டப் பெறுதலினாற் பொலிந்த சென்னி' என்று பொருள் கொண்டுள்ளனர். அதில் தவறு ஏதும் இல்லையாயினும், 'ஆன் அஞ்சு' ஆட்டப்பெறுதலால், சிவபெருமானின் திருமேனி முழுவதுமே பொலிவுறுவதாகக் கொள்ளாமல், அவர்தம் சென்னி மட்டுமே பொலிவதாகக் கூறுவது பொருந்துமோ? என்ற ஐயப்பாடு நேர்கின்றது.

## வேதத்திற்கு வேதமே பிரமாணம்

இந்த ஐயப்பாட்டினை நீக்கிக் கொள்ள, 'வேதத்திற்கு வேதமே பிரமாணம்' ஆகும் என்னும் முறைமை பற்றி, அப்பர் பெருமான் அருளிச் செய்த தேவாரத் திருப்பாடல்களை முழுவதாக ஓதி ஆராயும்பொழுது, ஒரு சிறிது ஒளியும் தெளிவும் ஏற்படுகின்றன.

'அஞ்சினாற் பொலிந்த சென்னி' என்னும் தொடரால், சிவபெருமானின் சென்னியில் ஐந்து பொருள்கள் இடம்பெற்றுத் திகழ்கின்றன என்று தெரிகின்றது. அந்நிலையில், சிவபெருமானின் சென்னியைப் பொலிவிக்கும் ஐந்து பொருள்கள் யாவை? என்ற சிந்தனை எழுகின்றது. அச் சிந்தனையின் பயனாக, நமது சிவபெருமானின் சென்னியில் ''கொன்றை மலர்-வெண்தலை - கங்கைநதி-அரவு-பிறை'' என்னும் ஐந்து பொருள்கள், நிலையாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றுள்ளன என்பது விளங்குகின்றது. இவ் விளக்கத்திற்குத் துணை செய்வது, திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்துள்ள பிறிதொரு திருப்பாடல் ஆகும்.

## திருவொற்றியூரர் திருமுடி

சிவபெருமானின் திருமுடியாகிய சென்னி, தன்கண் சூடப்பெற்றுள்ள கொன்றை மலரால், முல்லை நிலமாகவும்; வெண்தலையினால், மயானம் என்னும் சுடலைக் களரியாகவும்; கங்கை நதியினால், அது சென்று சேரு

கின்ற பெரிய கடலாகவும்; பாம்பினால் அது வாழ்கின்ற புற்றாகவும்; பிறைச் சந்திரனால், அது தங்கியுள்ள ஆகாயம் என்னும்வான வெளியாகவும்; ஒருசேரத் திகழ்கின்றதாம். 'பலபடப் புனைவு அணி' என்னும் அணிநலம் அமைய, இக்கருத்தினைப் பின்வருமாறு பாடியருள்கின்றார் திருநாவுக்கரசர்!

''அங்கட் கடுக்கைக்கு முல்லைப்
 புறவம்; முறுவல்செய்யும்
பைங்கண் தலைக்குச் சுடலைக்
 களரி; பருமணிசேர்
கங்கைக்கு வேலை ; அரவுக்குப்
 புற்று; கலைநிரம்பாத்
திங்கட்கு வானம் திருஒற்றி
 யூரர் திருமுடியே''

திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த இனிய இத் திருப்பாடலால், சிவபெருமானின் திருமுடியாகிய சென்னியில் கொன்றை மலர்— பைங்கண் வெண்தலை—கங்கை நதி—வாளரவு—இளம்பிறை என்னும் ஐந்து பொருள்கள், நிலையாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றுள்ளமை தெற்றெனத் தெரிகின்றது.

''பாம்புரிஞ்சி, மதிகிடந்து, திரைகள் தங்கப்,
 பனிக்கொன்றை, சடைவைத்தார்....'' (1)

''தலையேநீ வணங்காய்—தலை
 மால தலைக்கு அணிந்து,
தலையாலே பலிதேரும் தலைவனைத்
 தலையே நீ வணங்காய்'' (2)

என்பன போன்ற பாடல்களாலும், நமது இறைவனின் திருமுடியில் இவ் ஐந்து பொருள்களும் செவ்விதின் இடம்பெற்றுத் திகழ்தல் தெளியப்படும்.

**''கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற**
 **பாம்பு;ஒரு பால்மதியம்**
**தொடக்குண்டு இலங்கும்; அலங்கும் திரைக்**
 **கங்கை; சூடும் கொன்றை;**
**வடக்குண்டு கட்டுஅத் தலைமாலை;**
 **வாளால் மலைந்த வெம்போர்**
**கடக்கும் விடைத்திரு ஏகம்பர்**
 **கற்றைச் சடைமுடியே''**

என்று, பட்டினத்தடிகள் பதினொன்றாம் திருமுறையில், திருஏகம்பர் திருவந்தாதியிற் பாடியுள்ள பாடலும் இதனை வலியுறுத்தும்.

## ''அஞ்சினாற் பொலிந்த சென்னி''

(1) கொன்றைமலரால், சிவபெருமானே பிரணவப் பொருளாகத் திகழ்கின்றார் என்பதும்; (2) பைங்கண் வெண்தலையால், சிவபெருமான் சர்வ சங்கார காரணனாய் நித்தியத்துவம் என்னும் அழியாத் தலைமைநிலை பெற்றுப் பிறங்குபவர் என்பதும்; (3) 'நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தான்' என்றபடி, ஆயிரமாம் முகத்தினோடு பெருகிவந்த மாயிருங் கங்கை யாற்றைத் தம் சடையில் ஏற்றுப் பொதிந்து கொண்டு அடக்கியதால், சிவபெருமான் அளவிலாப் பேராற்றல் உடையவர் என்பதும்; (4) அருவருக்கத்தக்க கொடிய வாளரவினையும் ஏற்று அணிந்து மகிழ்ந்ததனால், சிவபெருமான் எத்தகைய சிற்றுயிர்க்கும் இரக்கம்காட்டியருளும் கருணைத்திறம் மிக்கவர் என்பதும்; (5) தன்பாற் புகல்அடைந்து அடைக்கலம் புகுந்த சந்திரனின் குற்றங்களையெல்லாம் பொறுத்தருளி, அவன் தமது காலில் வீழ்ந்து பணிந்து வணங்கியபோது, அவனைத் தம் தலையின்மேல் எடுத்து அணிந்துகொண்டு காத்தருளியதனால், அடைக்கலம் புகுந்தவரையெல்லாம் ஏற்றுப் போற்றிப் பாதுகாத்தருளிப்பெரிதும் தண்ணளி புரிந்தருளும் தன்மையர் சிவபெருமான் என்பதும்; பிறவும் விளங்குகின்றன.

இங்ஙனம் தம் சிறப்பியல்புகள் பலவும் உலகமக்களுக்குவிளங்கும் வண்ணம், இவ் ஐந்து பொருள்களையும், தமது சென்னியில் ஏற்று அணிந்து கொண்டிருத்தலினாலேயே, சிவபெருமானது சென்னியினை ''அஞ்சினாற் பொலிந்த சென்னி'' என்று, திருநாவுக்கரசர் பெருமான் பாடியருளினர் எனக் கூறுதல் பொருந்தும்.

## முடிவுரை

எனவே, மேற்குறித்த திருநாவுக்கரசரின் திருநேரிசைச் செய்யுளுக்குப் பின்வரும் பொருள் கொள்ளுதல் நேரிதாகும்.

''நிலம் நீர் தீ வளி வெளி என்னும் ஐந்து பூதங்களால் அமைக்கப்பெற்ற உடம்பினை அடைந்து, அதன் உள்ளே வாழ்கின்ற மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகளால் துன்புறுத்தப்பட்டு, இவ்வுலகத்தில் அலைந்து திரிந்து வருந்திக் கொண்டிருக்கின்ற அறிவில்லாதவன் ஆகிய எனக்கு, நமசிவய என்னும் திருவைந்து எழுத்தினால், வாழ்க்கையை நடத்திச் செலுத்துகின்ற முறையினை உணர்த்தித் தெரிவித்தருளிய நின்னுடைய திருவருளால், யான் என்னுடைய அச்சங்கள் நீங்கப் பெற்றேன்; கொன்றைமலர் வெண்தலை கங்கைநதி வாளரவு இளம்பிறை என்னும் ஐந்து பொருள்களால், அழகுபெற்ற சென்னியை உடைய, திருவதிகை வீரட்டானப் பெருமானே'' என்பது,இப்பாடலின் இனிய பொருள் ஆகும்.

''அஞ்சினால் இயற்றப் பட்ட
 ஆக்கைபெற்று, அதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப் பட்டு, இங்கு
 உழிதரும் ஆத னேனை,
அஞ்சினால் உய்க்கும் வண்ணம்
 காட்டினாய்க்கு, அச்சம் தீர்ந்தேன்;
அஞ்சினாற் பொலிந்த சென்னி,
 அதிகைவீ ரட்ட னீரே''

—திருநாவுக்கரசர்

oo—oo—oo oo—oo—oo

# திருப்பாசுரப் பொருள்நலம்

ந.ரா. முருகவேள், M. A., M. O. L.

**முன்னுரை :**

திருப்பாசுரம் என்பது, திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகங்களுள், தலைசிறந்த ஒன்று. ''வாழ்க அந்தணர்'' எனத் தொடங்கும் பாடலை முதலாகக் கொண்டது, இத் திருப்பதிகம். ''பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்து'' என்று, இப்பதிகத்தில் வந்திருத்தல் காணலாம். சேக்கிழார் சுவாமிகள் இதனை 'மெய்ப்பாசுரம்' (2743) என்று வியந்து போற்றி யருளிச் செய்தார். சைவசித்தாந்தச் சான்றோர் ஆகிய அருள்நந்தி சிவாசாரியசுவாமிகள், இதனைத் தாம் இயற்றி யருளிய இருபாஇருபஃது என்னும் சித்தாந்த சாத்திர நூலில், ''பாண்டியன் கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்'' என்று சிறப்பித்துப் பாராட்டியுரைத்திருக்கின்றார்!

இத் திருப்பதிகம் எழுதப்பெற்ற ஓலையேடே, வைகையாற்று நீரின் வெள்ளத்தில் எதிரேறிச் சென்றது! மருவுறும் பிறவியாற்றில் மயங்கி அமிழாமல் மாதவர்களின் மனமானது, எங்ஙனம் உலகியலில் எதிர்நீந்திச் சென்று முத்தியாகிய கரையை அடைகின்றதோ, அதுபோல இப்பதிகம் எழுதிய ஏடும், உண்மைப்பொருள் இது என்று உலக மக்களுக்கு உணர்த்தி, வையையாற்றின் வெள்ளத்தை எதிர்த்தேறிச் சென்றது.

> ''திருவுடைப் பிள்ளை யார்தம்
> திருக்கையால் இட்ட ஏடு,
> மருவுறும் பிறவி யாற்றில்
> மாதவர் மனம்சென் றாற்போல்,
> பொருபுனல் வைகை யாற்றில்
> எதிர்த்துநீர் கிழித்துப் போகும்;
> இருநிலத் தோர்கட் கெல்லாம்
> இதுபொருள் என்று காட்டி''

என்று, இந்நிகழ்ச்சியைக் குறித்துப் பெரிய புராணம் விளக்கியிருத்தல் காணலாம்.

இங்ஙனம், இப்பதிகம் எழுதிய ஏடு வெள்ளத்தை எதிர்த்துச் சென்று சேர்ந்த இடமே, திருவேடகம் என்னும் தலமாகப் பெயர்பெற்றுத் திகழ்கின்றது. ''வைகை நீர் ஏடுசென்று அணைதரும் ஏடகம்'' என்று, ''வன்னியும் மத்தமும்'' எனத் தொடங்கும் பதிகத்தின் இறுதிப் பாடலில் வந்திருத்தல், இவ்வுண்மைக்குச் சான்று பகரும். மேலும்,

> ''தெற்றென்று தெய்வம் தெளியார்
> கரைக்கு ஓலை தெண்ணீர்ப்
> பற்றின்றிப் பாங்கெதிர்வின் ஊரவும்
> பண்பு நோக்கில்.....''

என்று இப்பதிகத்தின் பதினொன்றாம் பாடலில்வரும் குறிப்பும், ஈண்டு எண்ணி இன்புறுதற்குரியது.

இத்திருப்பதிகம் ஏனைய எல்லாப் பதிகங்களினும் மிக்க சிறப்புடையதாதல் கருதியே, ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள், இதற்கு மிக விரிவான முறையில் இருபத்து நான்கு செய்யுட்களால், சிறந்த இனிய உரை விளக்கங்களைச் செய்திருக்கின்றார்கள். இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்த்த திருப்பாசுரத்தின் பொருள் நலங்களை, ஈண்டு நாம் இயன்றவரையிற் சிறிது கண்டு மகிழ முயல்வோமாக!

## (1) வாழ்க அந்தணர்

> வாழ்க அந்தணர், வானவர், ஆன்இனம்!
> வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
> ஆழ்க தீயது! எல்லாம் அரன் நாமமே
> சூழ்க! வையக மும்துயர் தீர்கவே!

பொழிப்புரை:

அந்தணர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! பசுக் கூட்டங்கள் வாழ்க! குளிர்ந்த நீர் ஆகிய மழை பொழிக! அரசனும் உயர்ச்சி யுறுக! தீயது ஆகிய அயல் நெறிகளின் தொகுதி, வலிமையற்று அடங்குக! மக்கள் எல்லாரும் சிவபிரானின் திருப்பெயர் ஆகிய திருவைந்தெழுத்தை ஓதி வழிபடுக! உலகமும் துயரங்கள் தீர்ந்து, நலம் பெறுக.

சிறப்புரை:

திருப்பாசுரம் என்னும் இச்சிறந்த திருப்பதிகத்தின் மெய்ம்மொழிப் பயன், உலகுயிர்கள் யாவையும் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு எய்துதலேயாம். ஆதலின், உலகுயிர்களின் நலங்குறித்துச் சிவவேள்விகளும், சிவார்ச்சனைகளும், இடையறாது நிகழ்தல் வேண்டும் என விரும்பி, ''வாழ்க அந்தணர்-வானவர்-ஆன் இனம்'' என்று திருஞானசம்பந்தர் அருளிச் செய்வாராயினர். இதனை ''அந்தணர் வாழ்க-வானவர் வாழ்க-ஆனினம் வாழ்க'' எனத் தனி தனியே கூட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

*(1)* 'வாழ்க' என்றே முதற்கண் அமையத் தம்முடைய திருப்பாசுரத்தினைத் தொடங்கியிருத்தல், திருஞானசம்பந்தரின் அருள் கனிந்த திருவுள்ளத்தின் நல்லியல்பைப் புலப்படுத்துகின்றது.

(2) பரார்த்தமாகிய வேத வேள்விக்குரிய வைதிகர்களும், ஆகம வேள்விக் குரிய சிவ வேதியர்களும், ஈண்டு அந்தணர் எனப்பட்டனர். சிவபாத இருதயர், நமிநந்தியடிகள், திருநீலநக்கர், புகழ்த்துணையார் போன்ற சான்றோர்கள் எனக் கொள்ளினும் பொருந்தும். பரிமேலழகர் 'அழகிய தட்பத்தினை யுடையார்' எனக் குறிப்பிடுதலைத் தழுவி, முனிவர்கள் எனவும் கொள்ளலாம். பின்னர்த் தேவர்கள் வாழ்த்தப்படுதலால், இனம்பற்றி, 'அந்தணர்' என்றது ஈண்டு முனிவர்களைக் குறிப்பதாகக் கொள்ளுதல் அமையும்.

(3) உலக உயிர்கள் அனைத்தின் நலத்தையும் கருதி வேள்வியும் வழிபாடுகளும் இயற்றுதல் குறித்து அந்தணர்களையும், அவற்றையெல்லாம் இறையருள் வழிநின்று ஏற்றுச் செலுத்துதல் பற்றி வானவர்களையும், வேள்வி வழிபாடுகட்கு உரிய ஆனைந்தையும் திருநீற்றையும் அளித்துத் துணைபுரிதலால் ஆனினங்களையும் வாழ்க என்று, திருஞானசம்பந்தர் முறையே வைத்து வாழ்த்தியருளினார்.

(4) இதனை, ஆசிரியர் சேக்கிழார்சுவாமிகள் ''அந்தணர்-தேவர்-ஆன் இனங்கள் வாழ்க என்ற இந்த மெய்ம்மொழிப் பயன், உலகம் இன்புறச் சந்த வேள்விகள் முதல், சங்கரர்க்கு முன்வந்த அர்ச்சனை வழிபாடு மன்ன ஆம்'' (2720) என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

(5) உலகுயிர்களெல்லாம் தழைத்து வாழ்வதற்கு வேள்விகளின் நற்பயனாய், மழையானது இன்றியமையாது வேண்டப்பட்டு விளங்குவதாதலால், ''வீழ்க தண்புனல்'' என்றார். ''வேள்வி நற்பயன் வீழ்புனல் ஆவது. நாளும் அர்ச்சனை நல்லுறுப்பு ஆதலால்'' (2721) என்பது, பெரியபுராண விளக்கம்.

(6) வேள்விகள் முதலியன இடையூறு இன்றிச் செவ்விதின் நடைபெறுவதற்கும், உலக மக்களெல்லாம் நெறிமுறையே அறத்தாற்றின் வாழ்வதற்கும் காரணமாகத் திகழ்தல் பற்றி ''வேந்தனும் ஓங்குக'' என்றார். ''ஆளும் மன்னனை வாழ்த்தியது, அர்ச்சனை மூளும் மற்றிவை காக்கும் முறைமை'' (2721) என்பது காண்க.

(7) ''வேந்தன்'' என்றது ஈண்டு, நின்றசீர் நெடுமாறர் ஆகிய கூன்பாண்டியன் என்னும் மன்னனைக் குறித்து நின்றது. தற்கால வரலாற்று அறிஞர்கள், மாறவர்மன் அரிகேசரி (கி.பி. 600-660) என்னும் பாண்டியனாக இவரை வழங்குவர். 'வேந்தனும்' என்பதில் உள்ள உம்மை, முன்பு அவர் சமண சமயச் சார்பினராக இருந்ததனைச் சுட்டியதாகக் கொள்ளலாம்.

(8) 'ஓங்குக' என்றது, அவ்வேந்தனின் உயிர்ச் சார்பான நலங்களுக்கு மட்டுமேயன்றி, உடற்சார்பான நலத்துக்கும்கூட, ஆக்கம் பயக்கும் ஏதுவாயிற்று. அவர்தமக்கு முன்பு இருந்த கூன் நீங்கப்பெற்று, நின்றசீர் நெடுமாறர் ஆயினார். இதனை ''எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்று எழுதும் ஏட்டில், தம்பிரான் அருளால் வேந்தன் தன்னை முன் ஓங்கப்பாட, அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னும் சீர்த்திச் செம்பியன் செங்கோல் என்னத் தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே'' (745) எனச் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்குதல் கொண்டு தெளியலாம்.

(9) ஒரு சிலர் இப்பாடலைப் பாடுங்கால் ''ஆழ்க தீயதெல்லாம்'' எனப் பாடுவர். அது தவறு. 'தீயது' என்பது ஒருமை. 'எல்லாம்' என்பது பன்மை. ஆதலின் 'தீயதெல்லாம்' என்று இயைத்தல் பொருந்தாது. எனவே ''ஆழ்க தீயது'' என்று மட்டுமே, ஒரு தொடராகக் கொள்ளுதல் வேண்டும். இதற்குப் பொருள்: ''வேத சிவாகமங்களுக்குப் புறம்பாக உள்ள தீய அயல் நெறிகளின் தொகுதி வலிமையற்று அடங்குக'' என்பது. ''ஆழ்க தீயது என்று ஓதிற்று, அயல்நெறி வீழ்க என்றது'' என்பது பெரியபுராணம்.(2722)

(10) மேற்கூறியபடி 'எல்லாம்' என்பதனைத் தனியே வேறாகப் பிரித்து ''எல்லாம் அரன் நாமமே சூழ்க'' என இயைத்து ஒரு தொடராகக் கொள்ளுதல் வேண்டும். அரன் நாமம்—சிவபெருமானின் திருவைந்தெழுத்து. சூழ்தல், ஓதித் தியானித்து வழிபடுதல். எனவே 'எல்லாம்' என்றது ஈண்டுத் திருவைந்தெழுத்தினை ஓதி வழிபடுவதற்குரிய மக்கட் பிறவியினரை மட்டுமே குறிக்குமாயினும், சேக்கிழார் சுவாமிகள் தமது பரந்து விரிந்த திருவுள்ளப் பாங்கினால், ''தொல்லுயிர் யாவையும்'' எனப் பொருள் காண்கின்றார். ''வேறு எல்லாம் அரன் பெயர் சூழ்க என்றது, தொல்லுயிர் யாவையும் அஞ்செழுத்து ஓதி வளர்கவே'' பெரியபுராணம் (2722).

(11) இவ்வுலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது. சம்பந்தர் தம் முதற் பதிகத்திலேயே 'துயர் இலங்கும் உலகு' எனக் குறிப்பிடுகின்றார். புறநானூறு என்னும் பழந்தமிழ் இலக்கியமும் ''இன்னாது அம்ம இவ்வுலகம்'' எனப் புகலுகின்றது. துன்பம் என்பதற்கு இவ்வுலகில் துன்னுவது என்றும், இன்பம் என்பதற்கு இவ்வுலகில் இல்லாதது என்றும் அறிஞர்கள் விளக்கம் (Etymological Derivation) கூறுவர். எனவே, நம் துயர் தீர்தல் மறுமையிலேயே மட்டும் இயலும் எனப் பொதுவாகப் பல சமயங்களும் (unworldly and other worldly religions) வற்புறுத்துவது உண்டு. ஆனால் ஞான சம்பந்தரோ, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் (Optimistic assertion), என்று நமக்கு அறிவுறுத்தி உறுதிகூறுவர்.

(12) எனவே, அவர்தம் நோக்கும் வாக்கும் ஓர்த்துணரவல்ல சேக்கிழார் சுவாமிகள், 'மறுமையில் மட்டுமேயன்றி இம்மையிலும் உலகுயிர்கள் துயர்தீர்க (இன்பம்நிறைக) என''வையபமும் துயர் தீர்க''என்னும் தொடருக்குப் பொருள் விரித்துரைக்கின்றார். இதன்படி ''வையகமும்'' என்பதில் ''வையகம்' என்பது இகம் ஆகிய இம்மை வாழ்க்கையைக் குறித்து நிற்க, உம்மை எதிரது தழீஇய எச்சவும்மையாய்ப் பரம் ஆகிய மறுமை வாழ்க்கையைச் சுட்டி நின்றது. ''சொன்ன வையகமும் துயர் தீர்கவே என்னும் நீர்மை, இகபரத்தில் துயர் மன்னி வாழ் உலகத்தவர் மாற்றிட,

முன்னர்ஞானசம்பந்தர் மொழிந்தனர்'' என்பது சேக்கிழார் பெருமானின் விளக்கம் (2723).

(13) திருப்பாசுரத்தின் முதற்பாடலாகிய ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்னும் இப்பாடல், பண்டைப் பழம்பெருந்தமிழ் நெறியே பற்றி எழுந்ததொன்றாகும். அந்தணர் (முனிவர்) வானவர் ஆனினம் மழை அரசன் உலகம் என்னும் அறுவகைப் பொருள்களையும் வாழ்த்துதல், பண்டைத் தமிழ் மரபாகத் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. இஃது அறுமுறை வாழ்த்து எனப்படும்.

''அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப''
—தொல். புறம், 81

(14) இனி, இவ்வொரு திருப்பாடலிற்றானே எத்துணைப் பொருள் நுட்பங்கள் அமையப் பெற்றுள்ளன என்பது, கருதி மகிழ்தற்குரியது. 'வாழ்க அந்தணர்' என்றதனால் வாழ்த்தும், 'எல்லாம் சூழ்க' என்றதனால் வணக்கமும், 'அரன் நாமமே' என்றதனாற் சாதனமும், 'துயர் தீர்கவே' என்றதனாற் பயனும் கூறியவாறாதல் காண்க.

(15) இம்மட்டுமோ! ''அரன்'' என்றதனால் சங்காரகாரணன் ஆகிய முதல்வனே முதல்வன் என்ற பதியுண்மையும் இலக்கணமும், ''எல்லாம் சூழ்க-வையகமும் துயர்தீர்க'' என்றதனாற் பசுக்களின் உண்மையும் இலக்கணமும், ''தீயது-துயர்'' என்றதனாற் பாசங்களின் உண்மையும் இலக்கணமும், குறிப்பால் உணர்த்தப்பெற்றன. இத்தகைய நுண்பொருட் குறிப்புக்களால், இத் திருப்பாசுரமானது, பின்னே தோன்றிய சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுக்கும், அவர்தம் நூல்களுக்குமெல்லாம் ஒரு சிறந்த முன்னோடியாகத் திகழ்ந்தமை தெரியலாம்.

## (2) அரிய காட்சியர்

**அரிய காட்சிய ராய்த்தமது அங்கைசேர்**
**எரியர்; ஏறுகந் தேறுவர்; கண்டமுங்**
**கரியர்; காடுறை வாழ்க்கையர்; ஆயினும்**
**பெரியர்; ஆர்அறி வார்அவர் பெற்றியே?**

பொழிப்புரை:

சிவபிரான், உயிர்களின் பாசஞான பசுஞானங்களுக்கு உணர்வரிய தன்மையுடையவர். இஃது அவர்தம் சொரூப இலக்கணம் (சிறப்பியல்பு). எனினும், பக்குவம் மிக்க அடியவர்களுக்குத் தடத்த இலக்கண (பொதுவியல்பு) நிலையில், அவர் தம் அழகிய கையிற் பொருந்திய நெருப்பினை யுடையவராயும், காளை மாட்டினை விரும்பி ஏறுபவராயும், கருமை நிறம் பொருந்திய கண்டம் உடையவராயும், சுடுகாட்டில் தங்கிவாழும் வாழ்க்கையுடையவராயும், எளிமைத்தன்மை யுடையவராகவும் விளங்குவார். இங்ஙனம் எளிவந்தருளும் பல அடையாள நிலைகளை யுடையவராயினும், அவர் இவற்றிலெல்லாம் அடங்கிநிற்பவர் அல்லர்! விண்முதலாகப் பரந்த ஐம்பூதங்களும் பலவுயிர்களும் பல அண்டங்களும் ஆகிய யாவையும், அவர்தம் பெருவடிவில் 'இல்நுழை கதிரின் துன்னணுப் புரைய' அடங்கிக் கிடக்கும். அத்துணைப் பெரிய அவர்தம் பெற்றிமைகளை ஆராய்ந்துணர வல்லார் யாவர்? ஒருவரும் இலர்.

சிறப்புரை:

இறைவன் காட்சிக்கு உரியவனாயின், அழிபொருள் ஆவன்; எவ்வாற்றானும் காட்சிப்படான் எனின், அத்தகைய இறைவனாற் பயன் இல்லை. 'அறிபொருள் அசித்து, அசத்தாம்; அறியாதது இன்றாம்' என்பது சிவஞான சித்தியார். எனவே, இறைவன் பசுஞான பாச ஞானங்களால் அறியப்படாமல், பதி ஞானம் ஒன்றாலேயே அறியப்படுவன் என்பது உணர்த்தக் 'காட்சியரியர்' என்னாது 'அரியகாட்சியர்' என்றார். இப்பாடலின் பொருளை ஆசிரியர் சேக்கிழார் பெருமான், மூன்று (826,827,828) திருப்பாடல்களால் விளக்கியருளியுள்ளார்.

## (3) சிந்தியா எழுவார் வினைதீர்ப்பர்

**வெந்த சாம்பல் விரைஎனப் பூசியே,**
**தந்தை யாரொடு தாய்இலர்; தம்மையே**
**சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்;**
**எந்தை யார்அவர் எவ்வகை யார்கொலோ?**

பொழிப்புரை:

ஊழி முடிவில் எல்லாப் பொருள்களும் அழிந்து வெந்து நீறாகி ஒழிய, அவற்றின் சாம்பரைச் சந்தனமாகிய நறுமணப்பொருள்போலத் தமது திருமேனியிற் பூசிக்கொண்டு, தாமே எல்லா உயிர்களுக்கும் தந்தையும் தாயுமாக அமைந்து, தமக்கொரு தந்தையும் தாயும் இல்லாதவராக விளங்குபவர் சிவபெருமான். வைகறையில் தம்மையே சிந்தித்துக் கொண்டு துயிலெழுபவர்களுடைய இருவினைப் பொய்ம்மை வல்வினைகளை, அவர் போக்கியருள் புரிவார். அத்தகைய எம்முடைய தந்தையார் ஆகிய சிவபெருமான், இவ்வுலகப் பொருள்களை வகைப்படுத்திக் கூறுமாறு போல, நம்மால் இவ்வகையினர் என்று கூறப்படும் நிலையினர் அல்லர்.

சிறப்புரை:

இறைவன் எல்லாமாய் அல்லவுமாய், 'ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்றில்லை' எனத் தக்க நிலையில் திகழ்பவர் ஆதலின், அவர்தம் இயல்பினை நம்மனோர் ஆராய்ந்து வரையறுத்துக் கூறுதல் இயலாது என்பது, இப்பாடலின் கருத்து. இதனைச் சேக்கிழார் நான்கு (829, 830,831,832) பாடல்களில் விளக்கியருளியிருக்கின்றார். ''எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ?'' என்றதன் பொருட் குறிப்பை,

''எந்ததான் இன்னன் என்றும்,
இன்னதாம், இன்ன தாகி
வந்திடான், என்றும் சொல்ல,
வழக்கொடு மாற்றம் இன்றே''

என அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுளில் (144) விளக்கியருளிச் செய்திருத்தல் காணலாம். ''எப்பொருட் கூற்றினும் முந்தையோரை, எக்கூற்றின் மொழிவது?'' எனச் சேக்கிழார் சுவாமிகளும், இத் தொடரின் பொருளை விரித்

துரைத் தருளினார். ஒரு சிலர் ''வெந்த சாம் பல் விரையெனப் பூசியே, சிந்தியா எழுவார் வினை தீர்ப்பர்'' எனவும், கொண்டுகூட்டிப் பொருள் கொள்வர்.

## (4) கேட்பான்புகில் அளவில்லை

**ஆட்பா லவர்க்கு அருளும் வண்ணமும்,**
**ஆதி மாண்பும்,**
**கேட்பான் புகில் அளவில்லை;**
**கிளக்க வேண்டா;**
**கோட்பா லனவும், வினையும்**
**குறுகாமை, எந்தை**
**தாட்பால் வணங்கித் தலைநின்று**
**இவை கேட்க! தக்கார்.**

பொழிப்புரை:

ஆளாகும் பான்மையுடைய அடியவர்க்குச் சிவபெருமான் அருள்புரிகின்ற திறங்களையும், அவர்தம் அளவற்ற மாட்சிமைகளையும் பற்றி, வினவவும் விடையிறுக்கவும் தலைப்பட்டால், அதற்கு ஓர் எல்லை இல்லையாய் முடியும். ஆதலின் நீவிர் அவைகளைப் பற்றித் தன் முனைப்பு உணர்வோடு ஆராய்ச்சி செய்யப் புகுதல் வேண்டா. அநாதியே செம்பிற் களிம்பு போலச் சகசமாய் உயிர்களைப் பற்றிக் கொண்டு நிற்கும் மூல ஆணவமலமும், பண்டைப் பழவினையாகிய மூலகன்மமும், நம்மை அணுகி நலியாதிருத்தற் பொருட்டு, எந்தையா யாகிய சிவபிரானின் திருவடிகளைத் தகுதியுடைய அன்பர்கள் அடைந்து பணிந்து, ஞான நிட்டை கைகூடியுணரப்பெற்று உய்வார்களாக.

சிறப்புரை:

மருத்துவன் பிணியின் நிலையும் இயல்பும் அறிந்து, பிணியாளர்களுக்குப் பல்வேறு வகைகளில் ஏற்றபெற்றி மருத்துவம் செய்தலைப் போலவே, இறைவன் அடியார்களின் இயல்பும் தகுதியும் நோக்கி, அவர்களை அவரவர்கட்கு ஏற்ற முறைகளில் ஆட்கொண்டு அருள் புரிகின்றான். ஆதலின் ''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம்'' என்றார். சம்பந்தர்க்கு ஞானப்பால் அளித்ததும், அப்பர்க்குச் சூலைநோய் உண்டாக்கியதும், சுந்தரர்க்கு ஒரு மணத்தைச் சிதைவு செய்து இரு திருமணங்களைச் செய்து வைத்ததும், மாணிக்கவாசகர்க்குக் குருவடிவில் வந்து திருவைந்தெழுத்தை உபதேசம் புரிந்ததும் ஆகிய அருளிச் செயல்கள், ஈண்டு நாம் எண்ணியுணரத்தக்கன. அவைகள் இங்ஙனம் வெவ்வேறு வகைகளில் நிகழ்ந்தமைக்குரிய காரணங்களை இறைவனே அறியவல்லன் அல்லது, நம்மனோர் அவற்றை ஆராய்ந்தறிதல் இயலாததும், வேண்டப்படாததுமாகும் என்பது கருத்து. ''பாண்டியன் கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானம் ஆட்பா லவர்க்கருள் என்பதை அறியே'' எனவரும் இருபா இருபஃது செய்யுளின்கண், அருள்நந்தி சிவாசாரியசுவாமிகள், இப்பாடலைச் சிறந்தெடுத்துக் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது. ஆதி-சிவபெருமான். கேட்பான்புகில்-ஆராயத்தலைப்பட்டால். கிளக்கவேண்டா-தன்முனைப் புணர்வுடன் ஆராய முற்பட வேண்டுவதில்லை. கோட்பாலன-மூல ஆணவமலம். தக்கார்-தகுதியுடைய அன்பர்கள். இப்பாடலின் பொருளை இரண்டு(833,834) செய்யுட்களால் சேக்கிழார் பெருமான் விளக்கியருள்கின்றார்.

## (5) மிக்குச் சோதிக்க வேண்டா

**ஏதுக்க ளாலும் எடுத்த**
**மொழியாலும் மிக்குச்**
**சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன்**
**எங்கள் சோதி!**
**மாதுக்கம் நீங்கல் உறுவீர்!**
**மனம்பற்றி வாழ்மின்!**
**சாதுக்கள் மிக்கீர்! இறையே**
**வந்து சார்மின்களே!**

பொழிப்புரை:

காரணங்களாலும் உதாரணங்களாலும் மிகுதியாக ஆராயத் தலைப்படுதல் வேண்டா. எங்கள் சிவபிரான் புறத்தே நெருப்பில் தோன்றும் ஒளியாயும், அன்பின் உறைப்பினால் அகத்தே அழுந்திக்காண உள்ளே எழுகின்ற சோதியாயும், ஒளிவீசித் திகழ்கின்றான். அவனை மனத்திற் பற்றித் தியானித்து வாழ முற்படுங்கள்! அதனாற் பிறவியாகிய துன்ப நெறியினின்று நீங்கி விடுபடுதலைப் பெறுவீர்கள்! சாதுக்கள் ஆகிய பெரியோர்களே! விரைவில் வந்து சார்வீர்களாக!

சிறப்புரை:

ஏதுக்கள் - காரணங்கள் ( Reasons ). எடுத்தமொழி - உதாரணம் (Example); பிரதிஞ்ஞை (Proposition, Thesis) எனவும், மேற்கோள் (Citations) எனவும் கொள்ளுதலும் பொருந்தும். மிக்கீர்-பெரியோர்களே. இறையே -விரைவில். தனக்கு ஒப்புமையில்லாத இயல்பினன் ஆதலின், சிவபிரானின் தன்மைகளை ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும், அனைய பிற அளவைகளாலும் அளந்தறிதல் இயலாது என்பதும்; சிவபிரான் கருதலளவை கொண்டு நம்மால் அளந்தறிய ஒண்ணாதவன் எனினும், அன்பினிற் காணும் அடியவர்களுக்குக் காட்சியளவையில் தோன்றி நின்று அருள்புரிவான் என்பதும்; இப்பாடலின் கருத்து.

1. ''சுடர்விட்டு உளன்'' என்பதற்கு ''ஆன்ற அங்கிப் புறத்தொளியாய், அன்பில் ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றவன்'' எனச் சேக்கிழார்சுவாமிகள் பொருள் விளக்குகின்றார்.

2. ''மனம் பற்றி வாழ்மின்'' என்பதற்கு ''ஆதிச் சுடர்ச் சோதியை அன்பின் அகத்துள் ஆக்கிப் போதித்த நோக்குற்று ஒழியாமற் பொருந்தி வாழ்ந்து, பேதித்த பந்தப் பிறப்பின் நெறி பகர்மின்'' என்பது சேக்கிழார் சுவாமிகள் விரிவுரை.

3. ''மனம் பற்றி வாழ்மின்'' என்பதே 'ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி' (நாடுக) என ஆசிரியர் மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பெற்றது. சிவோகம்பாவனையின் தன்மையும், அது பிறவி நீக்கும் முத்தி சாதனம் ஆமாறும், இத்தொடரால் உணர்த்தப் பெற்றன.

4. **சாதுக்கள்:** தம்மை முழுவதும் இறைவன்பால் ஒப்படைத்துத் தமக்கென ஒரு செய

அும் இல்லாதவர்களாகத் திருவருள் நெறியில் நிற்கும் சான்றோர்கள். ''வேண்டும் வேட்கைய எல்லாம் விமலர்தாள் பூண்ட அன்பினிற் போற்றுவோர்'' என்பது பெரியபுராணம். இப் பாடலின் பொருளை, நான்கு (835, 836, 837, 838) செய்யுட்களால் சேக்கிழார் விளக்கியுள்ளார்.

## (6) அருள்அல்லது நாட்டல் ஆமே?

ஆடும் எனவும், அருங்கூற்றம்
 உதைத்து வேதம்
பாடும் எனவும், புகழ் அல்லது
 பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக்
 கேட்டீர் ஆகில்,
நாடுந் திறத்தார்க்கு அருள்அல்லது
 நாட்டல் ஆமே?

பொழிப்புரை:

சிவபிரான் ஐந்தொழிற்கூத்து ஆடுவான் என்றும், ஆற்றல்மிக்க கூற்றுவனை உதைத்தான் என்றும், வேத சிவாகமங்களை அருளிச் செய்து பாடுவான் என்றும், கூறப் பெறும் செயல்கள் எல்லாம், தனக்குப் புகழ் பெருகும்படி அவன் செய்தனவோ? அன்றி உயிர்களின் இறப்பும் பிறப்பும் ஆகிய துன்பங்களை நீக்குதற் பொருட்டு அவன் செய்தனவோ? என்று, பிறவிக்கு அஞ்சி, வீடுபேறு காதலித்து, நீவிர் ஆராய்வீர்களானால், இங்ஙனம் ஆராயும் தகுதிபெற்ற அன்பர்களுக்கு, இவைகளெல்லாம் உயிர்களின் துன்பம் நீக்குதலாகிய அருள் காரணமாக நிகழ்வன என்று கூறுவதேயன்றி, வேறு பிறிதொரு காரணத்தைக் கூறி நாட்டுதல் இயலுமோ?

சிறப்புரை;

இறைவனின் செயல்கள் யாவும், உயிர்களின் நலங்கருதி, அருள் காரணமாகவே நிகழ்வன என்பது, இப்பாடலின் கருத்து.

(1) இத்தேவாரப் பாடலில் உம்மைகள் இரண்டே வந்திருப்பினும், ஆடுதல்-கூற்று உதைத்தல்-வேதம் பாடுதல் என இறைவனின் செயல்களுள் மூன்று, ஈண்டுக் குறிப்பிடப்பெற்றனவாகக் கொள்ளுதல் வேண்டும் என்று விளக்க, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ''ஆடும் என ஆம் திருப்பாட்டின் அமைத்த மூன்றும்'' என அத்தொடர்ப்பொருளை விரித்துரைத்து விளக்கிக் காட்டியருளினார். 'எனவும்' என்பதனை'அருங்கூற்றம் உதைத்(த)து' என்பதுடனும் கூட்டுக.

(2) இங்ஙனமே ''புகழல்லது பாவம்... பிறப்பும் அறுக்கும்'' என்னும் தொடரின் பொருள் விளங்காமல், நமக்கு மயக்கம் விளைதலின், அத்தொடரின் பொருள் நம்மனோர்க்கு எளிதில் விளங்கும்படி, ஆசிரியர் சேக்கிழார்பெருமான் ''நீடும் புகழோ? பிறர் துன்பம் நீக்குதற்கோ? ''என்று தெளிவுபடுத்தி அருளிச் செய்தார். ''புகழோ..அறுக்குமோ?'' என ஓகார வினா இரண்டிடத்தும் விரித்துக் கொள்க, கேடு-இறப்பு.

(3) இவ்வாறே, ''அருள் அல்லது நாட்டலாமே?'' என வினாவடிவில் அமைந்துள்ள தொடரின் கருத்துப் பொருளைச் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் முறையில், ''இவை செய்தது ஈசர் கூடும் கருணைத் திறம்'' என்று தெளிவுற எடுத்து மொழிந்தருளினார் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள். 'அருள் என்றே நாட்டல் வேண்டும்' என்பது கருத்து.

(4) இறைவன் ஐந்தொழிற் கூத்து ஆடுதல், உலகம் கண்டு சிந்தித்து உணர்ந்து உய்யும் பொருட்டாகலானும்; மார்க்கண்டேயர்க்காகக் கூற்றுவனை உதைத்தமை, அவர் பொருட்டு மட்டுமேயன்றி, உலகமக்கள் அதன் உண்மையுணர்ந்து கொண்டு தம்மை வந்து அடைந்து பிறப்பு இறப்புத் துன்பங்கள் நீங்குதற்காகலானும்; வேதம்பாடுதல் உலக மக்கள் விதிவிலக்குகளை உணர்ந்தொழுகி நலம்பெறற்பொருட்டாகலானும்; இவையெல்லாம் உயிர்களின் பொருட்டு இறைவன் தன் அருள் காரணமாக இயற்றியனவே என வற்புறுத்தி, ''ஈசர் இவை செய்தது கூடும் கருணைத்திறம்'' என்று இனிது விளக்கப்பெற்றது.

## (7) அறிவார்சொலக் கேட்டும்அன்றே?

கடிசேர்ந்த போது மலரான
 கைக்கொண்டு, நல்ல
படிசேர்ந்த பால்கொண்டு, அங்கு
 ஆட்டிடத், தாதை பண்டு
முடிசேர்ந்த காலை அற வெட்டிட,
 முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம், அறிவார் சொலக்
 கேட்டும் அன்றே?

பொழிப்புரை:

மணம் பொருந்திய அன்றலர்ந்த மலர்களைக் கொண்டும், பசுக்கள் தாமே நல்ல முறையில் அன்பு பெருகிச் சொரிந்த பாலைக் கொண்டும், விசாரசருமர், தாம் மண்ணியாற்றின் மணலால் அமைத்த சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டி வழிபாடு செய்ய, அது கண்டு பொறாது இலிங்கத் திருவுருவினைச் சிதைக்க முற்பட்ட தந்தையாகிய எச்சதத்தன் கால்களை யறும்படி வெட்டிவீழ்த்த, அஃது ஒருபாதகச் செயலாக இருந்தும், அதனைச் செய்த விசாரசருமர் முக்கண் மூர்த்தியாகிய சிவபெருமானின் திருவடிகளைச் சேர்ந்து, முற்காலத்தில் சண்டேசுரபதம் பெற்றார் என்னும் வரலாற்றினை, அறிவுடைய பெரியோர்கள் சொல்லுதலை, நாம் கேட்டு உணர்கின்றோம் அன்றோ?

சிறப்புரை:

கடி-மணம். போது-மலர்; அப்பொழுது மலர்ந்தமலர். நல்லபடி சேர்ந்த-பசுக்கள் தாமே சொரிந்த. பண்டு-முற்காலத்தில். முடிசேர்ந்த-மணற் சிவலிங்கத்தின்மீதுபட்ட. காலை-எச்சதத்தனின் கால்களை. அற-அறும்படி, முழுவதும். திருப்பாசுரத்தின் முன்னைய திருப்

பாடல்களால் வேத சிவாகமங்களிற் கூறப்பெறும் பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையும் இலக்கணமும், வீடுபேற்றிற்குரிய சாதனமும், அவற்றின் பயனுமாகிய கருத்துக்கள் உணர்த்தப்பட்டன. இனிவரும் பின்னைய திருப்பாடல்களில், மேற்கூறிய கருத்துக்களைப் புராண வரலாறுகள் கொண்டு விளக்கியருள்கின்றார் திருஞானசம்பந்தர்.

இப்பாடலின் பொருளைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு சிறப்புற எடுத்துத் தெளிவித்துரைக்கின்றார்.

''கருதும் கடிசேர்ந்த எனும்திருப்
பாட்டில், ஈசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க்
கோறல், முத்தி
தருதன் மையதாதல், சண்டீசர்தம்
செய்கை; தக்கோர்
பெரிதும் சொலக்கேட் டனம்
என்றனர் பிள்ளையார்தாம்''

என்பது பெரியபுராணச் செய்யுள். சித்தம் சிவமாயின சிவநேசர்கள் செய்யும் செயல்களெல்லாம், தவமே யாகும் என்பது இப்பாடலின் கருத்து. ''சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்'' ''பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம்'' (திருவாசகம்). ''பாதகத்துக்குப் பரிசு வைத்தான்'' (திருப்பல்லாண்டு), ''பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே'' (சித்தியார்) எனப் பல இடங்களிலும் வரும் அருளுரைகள், ஈண்டுக் கருதியுணர்தற்குரியன.

''அரனடிக் கன்பர் செய்யும்
பாவமும் அறம தாகும்;
பரனடிக் கன்பி லாதார்
புண்ணியம் பாவம் ஆகும்;
வரமுடைத் தக்கன் செய்த
மாவேள்வி தீமை யாகி,
நரரினிற் பாலன் செய்த
பாதகம் நன்மை யாய்த்தே''

என இப்பாடலின் பொருளை இனிது வடித்தெடுத்து, உடன்பாடு எதிர்மறை எனும் இருதிறத்தானும், சிவஞான சித்தியார் செய்யுள் தெளிவித்திருத்தல் காண்க.

## (8) சூதன் ஒலி மாலை

**வேத முதல்வன் முதலாக விளங்கி, வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்,
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே, கலிக்கோவை
சொல்லே!**

பொழிப்புரை.

வேதங்களாற் குறிக்கப்படும் முதல்வன் ஆகிய சிவபெருமான், முழுமுதற் பரம்பொருளாகத் திகழ்ந்து, உலகுயிர்கள் துன்பப் படாதிருத்தற் பொருட்டும், உலக மக்கள் படித்துணர்ந்து போற்றி ஏத்துதல் செய்து உய்தற் பொருட்டும், அருளிச் செய்தவை புராணங்கள்; பூத முதல்வன் எனத் திகழும் சிவபிரான்ஆகிய முதல்வனையே முழுமுதற் பொருள் என்று தெளிவுற விளக்குவன, சூதமுனிவர் அறிவுறுத்திய நூல்வரிசையாகிய புராணங்கள் என்று தெரிந்துகொண்டு, அவற்றை நீவிர் முறையே ஓதி யுய்க!

சிறப்புரை:

இத் திருப்பாடல், புராணங்களின் இயல்பும் சிறப்பும் இவையென விளக்குகின்றது. வேத முதல்வன்-பூதமுதல்வன்-சிவபெருமான். ஏதம்-துன்பம். முதலாப்பொலிந்த-முழுமுதற் பொருளாகக்கொண்டு விளங்குகின்றன. சூதன்-சூதமகாமுனிவர். ஒலிமாலை - நூல்வரிசை. கலிக்கோவை-புராணங்கள். சொல்-ஓதுக.

உலகம் துன்பப்படாதிருத்தற்பொருட்டும், முழுமுதற் பொருளின் இயல்பை யுணர்ந்து கொண்டு வழிபட்டு உய்தற்பொருட்டும், புராணங்கள் சிவபிரானால் முதற்கண் அருளிச் செய்யப்பெற்றன என்பதும்; புராணங்கள் சிவபிரானின் முழுமுதற் றன்மையினைச் செவ்விதின் எடுத்து விளக்குவன என்பதும்; பின்னர் அவற்றைச் சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு அறிவுறுத்தியருளினார் என்பதும்; புராணங்களை நாம் ஏற்றபெற்றி போற்றியுணர்ந்து ஓதுதல் வேண்டும் என்பதும், இப்பாடலில் இனிது விளக்கப்பெற்றுள்ளன.

''வேத முதல்வன் எனும் மெய்த்
திருப்பாட் டினில்நேர்
ஆதி யுலகோர் இடர்நீங்கிட
ஏத்த ஆடும்
பாதம் முதல்ஆம் பதினெண்
புராணங்கள் என்றே
ஓதுக என்றுரை செய்தனர்! யாவும்
ஓதா துணர்ந்தார்''

எனச் சேக்கிழார் சுவாமிகள், இப்பாடலின் பொருளை இனிதெடுத்து விளக்கியிருத்தல் காணலாம்.

''உயர்ந்த உண்மைகளை, ஒன்றும் அறியாத பாமர மக்களும் உணர்ந்து கொள்ளும்படி எளிய இனிய கதைகளால் சுவைமிக விளக்குகின்ற சிறப்பினை யுடையவை புராணங்கள்.''* ஆதலின் அவற்றினைச் சிறந்தெடுத்துத் திருஞானசம்பந்தர் இப்பாடலில் போற்றிக் கூறியருளினார்.

## (9) போர் ஆழி ஈந்த புகழ்

**பாராழி வட்டம் பகையால்,
நலிந்து ஆட்ட, வாடிப்
பேராழி யானது இடர்கண்டு,
அருள்செய்தல் பேணி,
நீராழி விட்டுஏறி, நெஞ்சு
இடம் கொண்டு, அவர்க்குப்
போராழி ஈந்த புகழும்,
புகழ் உற்ற தன்றே**

---

* "The puranas contain the truth dressed up in myths and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in metaphysics is achieved in India". —Dr. S. RADHAKRISHNAN

பொழிப்புரை:

வட்டமாகிய கடல் சூழ்ந்த உலகமானது, அசுரர் ஆகிய பகைவரால் நலிவுறுத்தி அலைக் கப்பட, வாட்டமுற்றுப் பெரிய திருப்பாற் கடலிற் பள்ளிகொண்டுள்ள திருமால்படும் துய ரத்தைப் பார்த்து, அவருக்குத் தாம் அருள் செய்தலை விரும்பி, அவர் திருப்பாற் கடலை விட்டுத் திருவாரூர்க்கு வந்து, தம்மை உள்ளத் தின்கண் அமைத்து வழிபாடு நிகழ்த்த, அவ் வழிபாட்டிற்கு மகிழ்ச்சியுற்றுச் சிவபிரான் அவ ருக்குப் போர் புரிவதற்குரிய சுதரிசனம் என் னும் சக்கரத்தினைக் கொடுத்து அருள் புரிந்த புகழும், சிவபிரானின் ஏனைய புகழ்ச் செயல் களுடன் ஒன்றாக வைத்துப் புராணங்களிற் சிறப்புறப் புகழப்பெற்றிருக்கின்றது அன்றோ?

சிறப்புரை:

சிவபிரானின் அருள்பெற்றே, தேவரும் மூவரும் யாவரும், தத்தம் தொழிலைத் திறம் படச் செவ்விதிற் செய்து போதருவர் என்னும் உண்மை, இப்பாடலில் வலியுறுத்தப்பெறுகின் றது. திருமால் சக்கரம் வேண்டிச் சிவபிரானை வழிபட்டுப் பெற்ற இடம் திருவீழிமிழலை என வும் கூறப்பெறும். திருமால் சிவபிரான்பால் சக்கரம்பெற்ற செய்தியினை,

''பாவுற்ற பாராழி வட்டத்
திருப்பாட்டின் உண்மை ;
காவற் றொழிலான் எனும் கண்ணனும்
காவல் பெற்றது,
யாவர்க்கும் மேலாய ஈசன்
அருள்ஆழி பெற்று
மேவுற்ற சீர்உற்றது என்றனர்
வேத வாயர்''

எனச் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்கி யிருக்கும் திறம், அறிந்து இன்புறுதற்குரியது. பார்ஆழிவட்டம்-கடல் சூழ்ந்த உலகம். பேராழி யானது-பெரிய திருப்பாற்கடலிற் பள்ளிகொண் டுள்ள திருமாலினது. அருள்செய்தல் பேணி- அருள் செய்யப்பெறுதலை விரும்பி. நீராழி விட்டு ஏறி நெஞ்சிடம் கொண்டவர்-திருமால். போர் ஆழி-போர் புரிவதற்குரிய சக்கரம்.

## (10) ஆலாலம் உண்டு அருள் செய்தது

மாலா யவனும், மறைவல்ல
நான்மு கனும்,
பாலாய தேவர், பகரில்,
அமுதூ ட்டல் பேணிக்,
காலாய முந்நீர் கடைந்தார்க்கு,
அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு, அங்கு அமரர்க்கு
அருள்செய்த தாமே

பொழிப்புரை:

திருமாலும், வேதங்களில் வல்ல பிரம தேவனும், அவர்களின் பக்கல் சேர்ந்த தேவர் களும், அமுதம் உண்ணுதலை விரும்பி, காற்றி னால் அலைக்கப்படும் திருப்பாற்கடலைக் கடையமுற்பட, அங்ஙனம் கடையுங்கால் தம் மால் தாங்குவதற்கு அரியதாகி வெளிப்பட்ட ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினைச் சிவ பிரான் தாமே உட்கொண்டு, அங்கே, அத் தேவர்களை இறவாமற் காத்துஇரக்கம் காட்டி அருள்புரிந்த சிறந்த செயலுக்கு, இணையாக வேறொரு பிற செயலும், சொல்லப்புகில், உள தாமோ? இல்லை.

சிறப்புரை:

சிவபிரானின் அருளிச் செயல்கள் பலவற் றுள், அப்பெருமான் ஆலாலம் என்னும் நஞ் சினையுண்டு தேவர்களையெல்லாம் காத்தரு ளிய அருஞ்செயல், பெருஞ்சிறப்பினதாய்த் திகழ்வதொன்றாகும்.

புராணங்களுட் கூறப்பெறும் சிவபிரானின் முழுமுதற் றன்மையினை விளக்கும் வரலாறு களுள், ஒரு குழிசிச் சொன்றிக்கு ஓர் அவிழ் பத மாம் என்னும் முறைமை(தாலி புலாக நியாயம்) பற்றி, இரண்டு வரலாறுகளைக் குறிப்பிட்டு, அவற்றின் நுண்பொருள்கள் இவை எனத் திருஞான சம்பந்தர் தேற்றியருள்கின்றார்.

''மாலா யவன்என வரும்திருப்
பாட்டில், மாலும்
தோலா மறைநான் முகனும்
தொடர்வாம் அமரர்
ஏலா வகைசுட்ட நஞ்சுண்டு,
இறவாமை காத்த
மேலாம் கருணைத்திறம், வெங்குரு
வேந்தர் வைத்தார்''

எனச் சேக்கிழார் சுவாமிகள் தெளிவுறுத்திப் பாடுவது போல, இப்பாடல் சிவபிரான் ஆலா லம் உண்டருளிய செயலைக் குறிப்பிட்டு, அவர்தம் சிறந்த கருணைத் திறத்தினை விரித் துரைத்து விளக்குகின்றது.

## (11) பெற்றொன்று உயர்த்த பெருமான்

அற்றன்றி அந்தண் மதுரைத்
தொகை ஆக்கினானும்,
தெற்றென்று தெய்வந் தெளியார்
கரைக்கு ஓலை, தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வின் ஊரவும்,
பண்பு நோக்கில்,
பெற்றொன் றுயர்த்த பெருமான்
பெருமானும் அன்றே

பொழிப்புரை:

அத்தகையதே அல்லாமல், அழகிய குளிர்ந்த மதுரை மாநகரின்கண், தமிழ்ச்சங்கம் அமைத்து வளர்த்த, பாண்டியர் குலத்தே தோன்றிய மன்னன் (நின்றசீர் நெடுமாறர்), தெற்றென்று தெய்வம் தெளிந்து கொள்ளவும், தாம் மட்டும் அங்ஙனம் தெளிந்துகொள்ள விரும்பாதவர்களாகிய சமணர்கள், தம்முடைய வாதத்திற்கு எல்லையாக வகுத்து உடன்பட்டுக் கொண்ட படியே, 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகம் எழுதப்பெற்ற இவ் வோலையானது, தெளிந்த வைகையாற்றின் நீரில், பற்றுக்கோடு யாதும் இன்றி, முறைப்படி

அதனை எதிர்த்து மேல் நோக்கிச் செல்லும் திருவருட் செயலை ஆராய்ந்து தெளிந்தால், எருதினைக் கொடியாக உயர்த்தியுள்ள சிவ பெருமான் ஒருவன் மட்டுமே பெருமான் (தலைவன்) ஆவான்! ஏனையர் அல்லர்.

சிறப்புரை;

ஆதலின் அத்தகைய ஒப்புயர்வற்ற சிவ பெருமானின் சிறப்பியல்புகளை அறிந்து கொண்டு, அப்பெருமானை வழிபடும் அன்பைப் பெறுதலே சிறந்த ஞானம் ஆகும் என்பது கருத்து. அற்றன்றி-அத்தகையதே அல்லாமல். தொகை-சங்கம். மதுரைத்தொகை-மதுரைத் தமிழ்ச்சங்கம். 'ஆக்கினானும், தெய்வம் தெளி யாரும் தெற்றென்று' (தெளிய) எனக் கூட்டுக. 'தெற்றென' எனற்பாலது'தெற்றென்று' எனத் திரிந்து நின்றது. பண்புநோக்கில்-திருவருட் செயலை ஆராய்ந்தால், 'பெருமானும்' என்ப தில், உம்மை தேற்றேகாரப் பொருளில் வந்தது. எனவே 'பெருமானே பெருமான்' எனக் கொள்க. அன்று-அல்லர்.

''ஆனஅற் றன்றி அந்தண் மை எனும்
திருப் பாட்டில், கூடல்
மாநகர்ச் சங்கம் வைத்தவன்,
தேறத் தேறா
ஈனர்கள் எல்லைக்கு இட்ட ஏடு
எதிர்ந்து செல்லில்,
ஞானம் ஈசன்பால் அன்பே
என்றனர் ஞானம் உண்டார்''

எனவரும் பெரியபுராணப் பாடலில், ஆசிரி யர் சேக்கிழார் சுவாமிகள் ''ஞானம் ஈசன்பால் அன்பே'' என வற்புறுத்துதல்தான், இப்பாட் டிற்குத் திருஞான சம்பந்தர் கருத்தாக விளக்கி யிருத்தல் காணலாம்.

## (12) வானோர் உலகாள வல்லர்

**நல்லார்கள் சேர்புகலி ஞான
சம்பந்தன், நல்ல
எல்லார்களும்பரவும் ஈசனை
ஏத்து பாடல்,
பல்லார்களும் மதிக்கப் பாசுரம்
சொன்ன பத்தும்
வல்லார்கள், வானோர் உலகாளவும்
வல்லர் அன்றே !**

பொழிப்புரை:

கற்றும் கேட்டும் சிந்தித்தும் தெளிந்த, மெய்யன்பர்கள் வாழ்கின்ற திருப்புகலி எனப் படும் சீர்காழியில் தோன்றிய, திருஞானசம்பந் தன் (ஆகிய யான்), நல்லவர்கள் ஆக உள்ள எல்லோரும் புகழ்ந்து பணிகின்ற சிவபிரானைத் துதிக்கின்ற முறையில், பாடல் வடிவில், பல வகைப் பட்டவர்களும் மதித்து வியக்கும்படி, பல நுண்பொருள்களை அமைத்துக் கூறிய பாசுரங்கள் பத்தையும், கற்றுணர்ந்துபாடவல்ல வர்கள், இம்மண்ணுலகை மட்டுமேயன்றி, அவ் விண்ணுலகையும்கூட, ஒரு சேர ஆளவல்ல சிறப்பினை அடைவார்கள்.

சிறப்புரை:

இது, திருஞானசம்பந்தர் தமக்குரிய வழக் கம் போலத் திருக்கடைக் காப்பாகப் பாடி யருளியது. இப்பதிகம் பன்னிரண்டு பாடல் களைக் கொண்டதாக இருப்பினும், பொதுமை முறை பற்றிப் பத்து என்றே, குறிப்பிட்டருளி னார்.

விநாயகப் பெருமானை மும்மதத்தன் எனவும், முருகப்பெருமானைப் பன்னிரண்டு கண்ணுடைய பரமன் எனவும், கூட்டியோ குறைத்தோ ஏற்றபெற்றி சான்றோர்கள் வழங் கும் முறைமைபோல், இதனையும் கொள்க. (ஏனைய யானைகளைப் போல விநாயகருக்குப் பீஜமதம் இல்லையாதலின், விநாயகர்க்குரிய மதங்கள் இரண்டே என்பர் சிலர். ஒருசிலர் ஞானமதம் என்பதனைப் பீஜமதத்திற்குப் பதி லாகக் கூட்டி, விநாயகர்க்கு மும்மதம் கொள் வர். சிவபிரானைப் போலவே முருகனுக்கும் முகத்திற்கு மூன்று கண்களாக மொத்தம் பதி னெட்டுக் கண்கள் உண்டு என்று வண்ணச்சர பம், தவத்திரு தண்டபாணிசுவாமிகள் அவர்கள் தம் பாடல்களிற் குறிப்பிடுவர்.)

## முடிவுரை :

திருப்பாசுரம் என்னும் இச் சிறந்த திருப் பதிகத்திற்குத் தமது பெரிய புராணத்தில் இரு பத்து நான்கு பாடல்களால் விரிவுரை வகுத் தருளிய சேக்கிழார் சுவாமிகள், ''பணியுமாம் என்றும் பெருமை'' என்னும் திருமொழிக்கு இலக்கியமாகவும், தம்முடைய பணிவும் பிற சான்றாண்மை நலங்களும் தோன்றுமாறும், பின்வரும் கருத்து அமைந்த உருக்கம் மிக்க சிறந்த பாடலை அருளிச் செய்துள்ளார்.

''திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாசு ரத்தின் பொருளை, யான் முற்ற முடிய அறிந்து விளக்கினேன் இல்லை. சிறியவன் ஆகிய என் னுடைய அறிவுக்கு, அவர்தம் திருவடிகள் துணையாக இருந்து உணர்த்தியருளியபடி, யான் அறிந்த அளவில், ஒரு சிறிது கூறி, மேலும் விரித்து விளக்கிக் கூற ஆற்றலின்மையினால், அன்புஒன்றே கொண்டு, திருஞானசம்பந்தர்க்கு யான் என் வணக்கங்களைச் செலுத்திக் கொண் டேன்'' என்னும் கருத்து அமைய,

''வெறியார் பொழிற் சண்பையர்
வேந்தர் மெய்ப்பாசுரத்தைக்
குறியேறிய எல்லை அறிந்து
கும்பிட்டேன் அல்லேன்!
சிறியேன் அறிவுக்கு அவர்தம்
திருப்பாதம் தந்த
நெறியே, சிறிது யான் அறிநீர்மை
கும்பிட்டேன் அன்பால்''

என்று சேக்கிழார் சுவாமிகள் அவர்களே, மிக வும் பணிவு தோன்றும்வண்ணம் குறிப்பிட்டுக் கொள்கின்றாரெனின், நம்மனோர் எம்மாத் திரம்?

ஆதலின், நாமும் சேக்கிழார் சுவாமிகள் அவர்களின் திருமொழியினையே விதந்தெடுத்து வழிமொழிந்து கூறிக்கொண்டு, நம்முடைய புல்லிய வணக்கங்களைத் திருஞானசம்பந்தப் பெருமானின் பொன்னடிகளிற் செலுத்தித் தொழுது, உய்ய முயல்வோமாக!

***

# கம்பனும் இறைமையும்

திரு. டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், M.A., Ph.D.,

இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

R. RAJU,
Dy Commissioner H.Q
(Retired)
HR&CE Administration D

ஐம்புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதவற்றை உணரவும் உணர்த்தவும் உறுதுணையாக அமைவது, மனிதனை மனிதனாக்கும் பிற உயிரினங்களிலிருந்து மேன்மைப் படுத்தும் மனமே. அறிவுக்கு எட்டாத, அறிவைக் கடந்த இந்த ஆற்றலுக்குக் கடவுள் - இறைவன் எனப் பெயர் அளித்துத் தேடலைத் தொடர்கின்றது மனம்.

மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அப்பேராற்றல், இயற்கை கடந்த பெரும் சக்தி, அதுவே இயற்கையையும் தன்னையும் படைத்ததாகக் கொள்ளுகின்றான். தன் ஆற்றலையும் அதற்கு அதீதமாக இருக்கக் கூடிய ஆற்றலையும் வேறுபடுத்திப் பார்க்கின்றான். அங்கு இறைமை பற்றிய எண்ணங்கள் முகிழ்க்கின்றன.

மனிதன் எல்லாவற்றையும், எல்லா உயிரினங்களையும் அடக்கி ஆளுகின்றான். ஆனால் அவன் இயற்கைக்கு அடங்கி நிற்கின்றான். ஐம்பூதங்களை, அவற்றால் ஆகிய இயற்கையை அடக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை. ஐம்பூதங்களையும் இயக்கி, அணுமுதல் திமிங்கிலம் வரை உள்ள எல்லாவற்றையும் படைத்துக் காத்து நடத்தி அருள் புரிகின்ற பேரருளாகிய ஆற்றாலை இறைவனாகக் கற்பித்துத் தன் மனத்தில் இருத்துகின்றான். அவ்வாற்றலை மனிதன் தன் ஐம்புலன்கள் பகுத்தறிவு இவற்றின் அடிப்படையில் அமைந்த கற்பித ஆற்றலால் புனைகின்றான். இறைவனுக்குப் பல வடிவங்கள் கொடுத்தான்; உருவங்கள் சமைத்தான்; கருவிகள் அமைத்தான்; காரணங்கள் கற்பித்தான்; கதைகள் படைத்தான்; கோயில்கள் ஆக்கினான். சமயங்களையும் இவனே தோற்றுவித்தான்; கொள்கைகள் நிறுவினான்; கோட்பாடுகள் வகுத்தான். வழிபாடுகள் நிகழ்த்தினான்.

சிவன் திருமால் கணபதி முருகன் கொற்றவை போன்ற அறுவகைக் சமயக் கடவுளரை, ஐவகை நிலத் தெய்வங்களை, கல்விக்குக் கடவுள், பொருளுக்கு இறைவி, காதலுக்குத் தெய்வம் எனவும் பலவற்றை மனிதன் தன் கற்பனைச் சக்திக்குத் தக்கபடிதோற்றுவித்தான். கற்பிதங்களே பின் இயல்பாக நிறுவப்பட்டன; நிலைத்துவிட்டன.

இவை எவ்வாறாயினும் இறைவன்-இறை-இறைமை என்ற பேராற்றல் ஒன்றுதான். அதனைப் பல கோணங்களில் அணுகிக் காண முயன்றனர் பக்தர்களும், தத்துவ ஞானிகளும், கவிஞர்களும். அவருள் கம்பனும் ஒருவன். அவன் சிறந்த பக்தன் . உயர்ந்த தத்துவ ஞானி. மாபெருங் கவிஞன். அவன் கண்ட கோணத்திலிருந்து, அவன் கொண்ட எண்ணங்களிலிருந்து இறைமை பற்றிய அவன் கற்பனைகளை நாம் தெளிய இயல்கின்றது.

மனிதன் தன் சிற்றறிவின் கற்பனையை விடக் கவிஞனின் கற்பனை ஆற்றல் மிக்கது. மனிதனுக்கு முகிழ்க்கும் கற்பனைகள் ஒரு எளிய நிலையோடு சாதாரணமாக அமைகின்றன; அதீதத்தைக் கற்பிக்கும் கவிஞனின் கற்பனையும் அதீதமாகவே செல்கின்றது. இராமனை இறைவனாகவும் இறைவனின் திரு அவதாரமாகவும் கொண்டு படைக்கும் கவிஞன் காப்பியம் எங்கிலும் இறைமை பற்றிய எண்ணங்களைத் தூவியுள்ளான். வாய்ப்பு ஏற்படுமிடத்து எல்லாம் இராமனின் இறைத் தன்மையை வெளியிடுகின்றான். காப்பியத் தலைவன் இறைவன் என்பதால் பிறபாத்திரக் கூற்றிலும் அவ் இறையியல்பினை வெளிப்படுத்துகின்றான். தூணிலும் துரும்பிலும் பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை உணர்ந்து கற்பிக்கின்றான் கம்பன்.

முதற்பாடலே இறைமையின் முழுவடிவைப் பற்றித்தான் பேசுகின்றது. உலகத் தோற்றம் உலக நிலைபேறு உலக அழிவு அனைத்தும் குழந்தை விளையாட்டாக அமைகின்றன இறைவனுக்கு. சாட்டையில்லாப் பம்பரமாக உலகை ஆட்டுவிக்கின்றான். அவனே உலகைப் படைக்கின்றான், பாதுகாக்கின்றான், பின் அழிக்கின்றான். இவ்வாறு உலகம்தோன்றியதிலிருந்து இன்றுவரை தோற்றம்-மறைவு, பிறப்பு-இறப்பு, உயர்வு-தாழ்வு போன்றவை இடையறாது நிகழ்ந்து கொண்டே யிருக்கின்றன. விளையாட்டின் விதிமுறைகள்போல் ஆண்டவனின் விளையாட்டிலும் சில விதிகள் முறைகள் அமையத்தான் செய்கின்றன. வருவது இது என அறியாது மாந்தர் தத்தளிக்க, இறைவன் திட்டமிட்டு விளையாடுகின்றான்.

இவற்றை எல்லாம் நோக்கிய கம்பன் அவன் உணர்ந்த இறைமையை இவ்வாறு தருகின்றான்.

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலாவிளை யாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

ஐம் பூதங்களுக்கும் அப்பாற்பட்டுத் தனித்து, அனைத்தையும் ஆண்டு, மேல்நிற்கும் ஆற்றலாக இங்கு இறைவனைக் காட்டுகின்றான். பூதங்களோடு பூதங்களாகக் கலந்து உலகோடு உலகாக இணைந்து, பாதங்களே அவையாகப் படிவம் அளப்பரியதாகப் பரந்து விரிந்து இருக்கும் இறைமையை நினைக்கின்றான் கவிஞன். உலகு என்பதனையே மனிதனால் ஒரு பார்வையில் முழுமையாகக் காணவோ கருதவோ இயலாது. ஈரேழு பதினான்கு உலகம் எனப் புராணம் கூறுவனவும் தேவருலகு, பாதாளம் என்பனவும் மனிதன் இன்றும் கண்டதில்லை. இறைவனின் ஆட்சி வேதம் கூறும் இவ் எல்லா உலகங்களிலும் பரந்துள்ளது. பரமன் கடலில் பள்ளி கொண்டுள்ளதாக அமையும் புராண உண்மையை ஏற்றுக்கொள்ண்டு, ஒரு பூதத்தில் உறையும் அவன் ஆற்றலையே பொறுத்துக்கொள்ள இயலாதபோது ஐம்பூதங்களிலும் அவன் உறைந்தால் என்னாகும் என நினைக்கின்றார்.

வேதங்கள் அறைகின்ற
உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னின்
படிவங்கள் எப்படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி
ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப்
பூதங்கள் தொறும் உறைந்தால்
அவை உன்னைப் பொறுக்குமோ?
*(2563)*

உலகம் தன்னில் உட்கொள்ளுதற்கு அரிய இறைவனையே கதைத் தலைவனாகக் கொண்டு காப்பியம் புனையப் பட்டதால் இறைமைச் செய்திகள் மிகுதியாகப்பொருந்துகின்றன. விராதன், சரபங்கன் போன்ற பல பாத்திரக் கூற்றுகள் வாயிலாகவும் கவிஞனின் ஆளுமை வெளிப்பாடாகவும் இறைச்செய்திகள் இணைகின்றன.

அவைகளுக்கும் எண்ணிக்கைக்கும் அப்பாற்பட்டு நிற்பவன் இறைவன். அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் போன்ற கொள்கைகளை நாம் இங்கு நினைக்கலாம். எத்தகைய கருத்துக்கும் உட்பட்டும் அமைகின்றான் அவன். ஒன்று எனக் கூறுவோருக்கு ஒன்றும், பல என்போருக்குப் பலவும் ஆகின்றான். இல்லை என்போருக்கு இன்மையும், உண்டு என்போர்க்கு உண்மையும் ஆக அமைகின்றான். யானையைத் தொட்டுணர முயன்று தோல்வியுற்ற குருடர் போன்று, பார்ப்போன் அல்லது கருதுவோன் அல்லது நினைப்போன் நிலைக்கு ஏற்ப அவன் கொள்ளும் இறைமைப் பண்பும் தன்மையும் இயல்பும் வேறுபட்டு அமைகின்றன. முழுமையாக அவனை உணர்ந்தார் எவரும் இல்லை.

ஒன்றே என்னின் ஒன்றே ஆம்
பல என்று உரைக்கின் பலவேஆம்
அன்றே என்னின் அன்றே ஆம்
ஆமே என்னின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம்
உளது என்று உரைக்கின் உளதேஆம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பம்மா
(யுத்-க.வா)

அருவமாகவும் அருவுருவமாகவும் உருவமாகவும் நாம் இறைவனைக் காண்கின்றோம். தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என அவனை நினைக்கும்போது, அனைத்தும் உலகத்தின் ஒவ்வொரு அணுவும் கூறுகளும் பகுதிகளும் படைப்புகளும் உருவங்களும் அவனாகவே அமைந்து விடுகின்றன. நன்மையும் நல்லறிவும் அவனேயாகித் தீமையை அழிப்பவனும், நல்வினை நோக்கி நல்லாரைக் காப்பவனும் தீயாரைக் கடிபவனும், தீமையோ என ஐயுறும் மாயையை இடைக்காலத்துத் தந்து தடுத்தாட் கொள்பவனும் ஆகப் பலநிலைகளிலும் இறைவனை உணரும்போது அவன் எல்லாமும் ஆகின்றான். தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற பழங்கொள்கையை உட்கொண்டு அனைத்தும் தன்னால்-தன்னுள் உறையும் இறைவனால் நிகழ்கின்றது எனும் நிலையில், தன்னை உணர்தலே தலைவனை உணர்தல் ஆகின்றது. இந்திரன் இராமனைத் துதிக்குமிடத்து அவன்வாயிலாக இக்கருத்துக்களை வெளித் தந்து இறைமையை உணர்த்துகின்றான் கவிஞன்.

ஒன்று ஆகி மூலத்து உருவம் பல ஆகி
உணர்வும் உயிரும் பிறிதாகி ஊழி
சென்று ஆசறும் காலத்து அந் நிலையது ஆகி
திறத்து உலகம் தான் ஆகி செஞ்செவே
நின்ற
நன்றுஆய் ஞானத் தனிக் கொழுந்தே எங்கள்
நவை தீர்க்கும் நாயகமே நல்வினையே
நோக்கி
நின்றாரைக் காத்தி அயலாரைக் காய்தி
நிலை இல்லாத் தீவினையும் நீதந்தது
அன்றே *(2616)*

முன்னோர் கருத்தும் மதக் கொள்கைகளும், உலகியல் அறிவும், சிந்தனை ஆற்றலின் வெளிப்பாடுகளும் இறைமை பற்றிய பல கற்பனைகளைக் கம்பனுக்கு அளித்துள்ளன.

இராமனின் ஏவல் கேட்க வந்த வருணன் அவனை வழிபட்டுப் போற்றிப் புகழுமிடத்து இறைமைப்பண்புகளைத் தருகின்றான் கவிஞன். வான்மீகி இராமனை மனிதனாகவும், துளசிதன் ஆளுமை வெளிப்பாட்டிற்கு ஏற்ப அவை ஒரு முனிவனின் இயல்புகள் பொருந்தவும் படைக்க, கம்பன் இராமனைக் காப்பியம் முழுவதிலும் முப்பொருளினும் மேலாய பரம்பொருளாகவே படைக்கின்றான் என்ற திறனாய்வாளர் கருத்து இங்குக் கருதப்பட வேண்டும். இயற்கை இறந்த தன்மைகள் பொருந்திய மனிதனாகவோ மீவியல்பு ஆற்றல் மிக்க மானுடனாகவோ அன்றி இறையியல்பு உருவாய்

இறை-மனிதனாக, அனைத்துச் செயலும் வல்ல வனாக அனைத்து ஆற்றலும் உள்ளவனாக இராமனைக் காட்டுகின்றான். மும்மூர்த்திக்கும் முதல்வனே அவன் என்ற நிலையில் எல்லாமாக அவன் காட்டப்படுகின்றான்.

ஆழிநீ ஆனலும் நீயே
அல்லவை எல்லாம் நீயே
ஊழிநீ உலகும் நீயே
அவற்று உறை உயிரும் நீயே.(6656)

காட்டுவாய் உலகம் காட்டிக்
காத்து அவை கடையில் செந்தீ
ஊட்டுவாய் உண்பாய் நீயே
உனக்கும் ஒண்ணாது உண்டோ?
தீட்டு வான் பகழி ஒன்றால்
உலகங்கள் எவையும் தீய
வீட்டுவாய் நினையின் நாயேற்கு
இத்தனை வேண்டுமோ தான்?

இராமனின் இறைமையை உணர்ந்தவன் வருணன். மறைகளுக்கு முதல்வன் அவனே; உலகுக்கு ஒளிதந்து இருள்நீக்கிப் புரந்தளிக்கும் ஆதவனும் அவனே; சோதி வடிவான அவனே, ஆதிமூலமே என அழைத்த யானைக்கு அருளியவன், எல்லார் நெஞ்சங்களிலும் வீற்றிருக்கின்றான். அண்டசராசரங்களைப் படைத்தளித்த நான்முகனை உந்திக் கமலத்தில் தாங்கிய இவனே, அவன் நெஞ்சக் கமலத்திலும் வீற்றிருக்கின்றான். எங்கும் நிறைந்த இறைவனை அண்ட சராசரங்களிலும் அவற்றை ஆக்கியவனிலும் காண்கின்றான். ஒளி எங்கும் நிறைதலாலும் இருளை நீக்கலாலும் இறைவனை ஒளியாக நினைக்கின்றான்.

கண்டவான் கிரண வாளால்
தயங்கு இருட் காடு சாய்க்கும்
மண்டலத்து உறையும் சோதி
வள்ளலே மறையின் வாழ்வே
பண்டை நான் முகனே ஆதி
சராசரத்து உள்ளப் பள்ளப்
புண்டரீ கத்து வைகும்.
புராதனா போற்றி போற்றி (6659)

இறைவனைத் தொடர்பற்று நம்மிலிருந்து வேறுபட்டு நிற்கும் ஒரு பொருளாக ஆற்றலாகக் கொள்ளுவதோடு அமைந்து விடவில்லை நமது தத்துவ ஞானிகள். நம்மோடு தொடர்புடைய உறவாக, நாம் உணரும் அன்பு, பாசம் இவற்றோடு சார்த்தியும் அவனைக் காட்டினர். உணர்ந்ததனை வைத்து உணராததனையும் உணர்த்தும் போது தெளிவு கிடைக்கின்றது. இறைவனைத் தந்தையாக குருவாக தோழனாகக் கண்ட சமயங்கள், அச்சத்துடனின்றி அன்புடன் இறைவனை அணுகின. அநீதி கண்டு சினந்து சீறும் இறைவன் மனுக்குலத்தை அழித்துவிடாதபடிச் செய்கின்றது இந்தத் தொடர்பும் அதன் காரணமாகவே எழும் அன்பும் அருளும். சதுமுகன் கணை ஏவி, மீண்டும் அம்பேந்தி நிற்கும் இராமன்முன் தோன்றிய வருணன் இறைவனின் இவ் அருளியல்பை எடுத்து மொழிந்து தன்னைக் காத்துக் கொள்கின்றான்.

அன்னை நீ அத்தன் நீயே
அல்லவை எல்லாம் நீயே
பின்னும் நீ முன்னும் நீயே
பேறும் நீ இழவும் நீயே
என்னை நீ இகழ்ந்தது என்றது
எங்ஙனே ஈசன் ஆய
உன்னை நீ உணராய் நாயேன்
எங்ஙனம் உணர்வேன் உன்னை(666)

உலகுக்கும் உயிர்களுக்கும் தாயாக அமைகின்றான் இறைவன். தாய்க்கும் குழந்தைக்கும் இடையே நிலவுகின்ற உறவைக் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே அமையும் உணர்வாகக் கொள்ளுகின்றனர். அன்பும் பிழை பொறுக்கும் பண்பும், குறை நீக்கும் இயல்பும் இறைவனைப் போன்றே தாய்க்கும் உரியன. தாய்ப்பசுவும் கன்றும் பிரித்துப் விடப்படினும் அவை மீண்டும் ஒன்றையொன்று அறியும் இயல்பின என்பர். ஒரு தொழுவில் நூறு பசுக்கள் நிற்க, அவற்றின் கன்றுகளைப் பிரித்துப் பின்புவிடின், ஒவ்வொரு கன்றும் நேராகத் தன் தாயிடமே செல்லும் என்பர். தாய் தன் கன்றினை அறிந்து கொள்ளும் தன்மை அமைவது போன்று, இளமையான அக் கன்றும் தன் தாயை அறிந்து கொள்ளும் இயல்புடையதாக அமைகின்றது. உயிரினங்களில் ஐயறிவுபடைத்த விலங்கு நிலை இவ்வாறு அமைய, ஆறறிவு படைத்து, மாக்களிலிருந்து தம்மை மாறுபடுத்திக் கொண்ட மக்களிடமோ இத்தன்மை காணப்படவில்லை. தன்னை உருவாக்கி உலவவிட்ட தாயான இறைவனை அறிந்தானில்லை மனிதன். இறைவன் தன் குழந்தையான மனிதனை அறிந்திருக்க, இவன் அறியாமை மாயையாகிக் கண்களை மறைக்கின்றது. இறைவனைத் தன் தாயாக அவன் உணரும்போதே சென்றடைய முடிகின்றது எனக் கற்பிக்கின்றான் கவிஞன்.

தாய் தன்னை அறியாத கன்று இல்லை
தன் கன்றை
ஆயும் அறியும் உலகின் தாய் ஆகின்ஐய
நீ அறிதி எப் பொருளும் அவை உன்னை
நிலை அறியா
மாயை இது என் கொலோ வாராதே
வரவல்லாய் (2570)

தம்பி துணைவனான இராமனுக்கு, அவன் நிலையையே தேவர்கள் உணர்த்தும் நிலை அமைகின்றது. அரசகுலத்தில் பிறந்ததால், தான் இறையவதாரம் என, உணராதே அமைகின்றான் வரதன். வருணன், துதிக்கும்போது, 'ஈசன் ஆய உன்னை நீ உணராய்' என்று கூறுதல் இங்கு நினைக்கத்தக்கது. பிரம்மாத்திரம் காரணமாக மயங்கிக் கிடக்கும் இளவலை இறந்தான் என நினைந்து அரற்றி அழுகின்றான் இராமன். தம்பியுடையான் படைக்கஞ்சான் என இருந்தவன், இளையோன் இறந்தான் எனக் கருதித் தானும் மாய்வனோ என்று அஞ்சிய தேவர் அவன் இறைவன் என்பதை அவனுக்கே உணர்த்துகின்றனர்.

வாராதே வரவல்லவன் இறைவன். அவன் வருவது போன்று வராமலும் இருக்க வல்லன். அரக்கர் குலம் அழிதலை விழைந்த தேவர்கள்,

என்று மால் அப்பணி செய்ய அவதரிப்பான் என ஏங்கிக் காத்திருக்கின்றனர். வருவான் வருவான் என எண்ணிப் பார்த்திருந்த அவர்கள், இனி வரான் என நினைத்தபோது வந்தான் பரமன். தேவர் மனம் களித்தனர். அவர்கள் மகிழ்வு மிக, இராமன் தாடகையை வதைத்தான், மாயமானைக் கொன்றான்; இலங்கைக்கும் வந்து போர் தொடங்கிவிட்டான். ஆனால் தேவர் அவனைத் தெருட்டுகின்றனர். அவன் மாயையை அகற்றுகின்றனர். (8667)

இறைவன் அகத்தும் இருக்கின்றான். புறத்தும் இருக்கின்றான். தான் படைத்த பொருளனைத்தின் உள்ளும் உளன், வெளியினும் உளன்; தான்உருவாக்கிய அண்டங்கள் அனைத்திலும் நிறைந்துள்ளான். இக்கருத்தினைத் தேவர்கள் உவமையுடன் இராமனுக்குத் தெளிவுறுத்துகின்றனர். சிலந்தி வலை பின்னுகின்றது. அதன் வயிற்றிலிருந்து உருவாகும் பொருள் ஒன்றே அவ்வகையாகப் பின்னப்படுகின்றது; வேலை முடிந்ததும் அவ் வலையிலேயே தங்குகின்றது சிலந்தி. இறைவன் தன்னிலிருந்தே உலகை - அண்டங்களைப் படைக்கின்றான். பின் அவற்றிலேயே நிலவுகின்றான். எனவே எல்லாப் பொருளின் உள்ளும் புறமுமாக அவனே அமைகின்றான். கம்பனின் கற்பனை உள்ளம், இறைமைக்குச் சிலம்பியியற் படிமம் கண்டு இவ் விளக்கத்தைத் கின்றது.

அண்டம் பலவும் அனைத்து உயிரும்
அகத்தும் புறத்தும் உளஆக்கி
உண்டும் உமிழ்ந்தும் அளந்து கிடந்தும்
உள்ளும் புறத்தும் உளைஆகிக்
கொண்டு சிலம்பி தன் வாயின்
கூர்நூல் இயையக் கூடுஇயற்றி
பண்டும் இன்றும் அமைக்கின்ற
படியை ஒருவாய் பரமேட்டி (8665)

கண்ணன் மண்உண்ட வாயில் உலகை யசோதை கண்ட காட்சி இங்கு நினைத்தற்குரியது. உண்டும் உமிழ்ந்தும் நூல் விட்டுச் சிலந்தி வலைபின்னல் இங்கு இயைவுறுகின்றது.

## சங்க இலக்கிய மாண்பு

அகமும் புறமும் அளாய பொருளாய்த்,
திகழும் அறிவின் தெளிவாய், — நிகரில்இன்பத்
தேன்அமிழ்தாய், இன்பம் தெவிட்டாத சங்கநூல்,
வான்அமிழ்தும் கைப்பிக்கும் மற்று. (1)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச், சொற்பொருள்கள் நன்றாய், —விலைவரம்பின்(று),
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்,
தெள்ளுசங்க நூலின் திறம். (2)

கருத்துயர்வு, நல்லியற்கைக் காட்சி நுணுக்கம்,
திருத்தமிகு வாழ்க்கைத் திறங்கள், — பொருத்தமிகு
தூய கலைத்திறமை, தொல்வரலாற் றுக்குறிப்பும்,
மேவிஒளிர்ம் சங்கநூல் மிக்கு. (3)

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யுணர்வு வானில் — உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்கு
இல்லை கவிதையிற்போல் இன்பு. (4)

—ந. ரா. முருகவேள்.

# பரிபாடல் காட்டும் பக்தி நிலை

''பெருஞ்சொல்மணி''–''புலவர்''

திரு. தா. சுப்பிரமணியம், காஞ்சிபுரம்.

உலகம் யாவையும் படைத்தும், காத்தும், கரந்தும், மறைத்தும் அருளும் ஆடல் ஐந்தும் இறைவன் அருட் செயல்கள் என்பதை, அறிவு சான்ற பெருமக்கள் நன்கறிவர். இவ்வுலகமே இறையருளால் தோன்றியது என்பதை உணரின் இறையருள் என்று தோன்றியது என்ற ஆய்வு நமக்குத் தேவையில்லை.

பாடல் சான்ற புலனெறி வழக்கத்தைப் பரிபாடலும் கலித்தொகையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம், இறைநிலை குறித்துத் துறை வகுத்து, கந்தழி கொடிநிலை எனச் சுட்டியதோடு நின்றுவிட்டது. சங்க இலக்கியங் களில் ''நீலமணி மிடற்றொருவன் போல'', ''ஆலமர் செல்வன்'', ''முக்கட் செல்வன்'' எனச் சில தொடர்கள் பயின்று வ கின்றனவே யன்றி, இறையருள்பற்றி விளக்க நிலை இல்லை. பத்துப்பாட்டில் முருகு, இறையருள் பெற ஆற்றுப்படுத்துகிறது. ஆயினும் தொகை நூல்களுள் பரிபாடல் போன்று, மன்பதை அனைத்திற்குமான விரிந்த பக்குவப்பட்ட பக்தி நிலையை வேறு நூல்களில் காண இயல வில்லை. கலித்தொகையில், உவமைவாயிலாக அருட்கருத்துக்கள் சில சுட்டப்படுகின்றன வேயன்றி, விரிவான விளக்கம் இல்லை. ஆகவே, சைவ வைணவ சமயங்களின் தோற்று வாயாக – பன்னிரு திருமுறைகள்–திவ்வியப் பிர பந்தங்கள் ஆகியவற்றுக்கு மூலவிளக்க நூலா கப் பரிபாடலை நாம்கொள்ளலாம்.

கடுவன் இளவெயினனார் என்ற புலவர் திருமாலையும் செவ்வேட் பரமனையும் பாடி, சமயங்கடந்த சமரச நிலைக்குச் சான்றாக விளங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். மேலும், சங்ககாலத்தில் அறம் பொருள், இன்பம் ஆகிய மூன்றை மட்டுமே கூறி, சிந்தையும் மொழியும் செல்லா நெறித் தாகிய அந்தமில் வீடு பேற்றைத் துறவு முதலிய காரண வகையாற் சுட்டிச் சென்றனர். பரி பாடல் மட்டும், கற்றதனாலாய பயன் வாலறி வன் நற்றாள் தொழல் என்னும் செந்நெறியை விளக்கும் தெய்வ நூலாக அமைந்தது, செந் தமிழ் செய்த தவப்பயனேயாம்.

அருவமாகவுள்ள பரம்பொருளை அடைய உருவ வழிபாட்டிற்கு வாயிலாக மட்டுமின்றிப் பல அருள் வரலாற்றிற்குத் தோற்றுவாயாகவும் பரிபாடல் வழிகாட்டுகிறது. ஐம்பூதங்கள் அவற் றாலாகிய உலகம் உயிர்கள் உய்தற்குரிய பண்பட்ட வாழ்க்கைமுறை மக்கள் வேண்டத் தக்கன, விலக்கத்தக்கன, பக்திநெறி, முத்தி நிலை ஆகியவற்றைத் திட்ப நுட்பமாக விளக்கு கிறது, பரிபாடல்.

## பரங்குன்றம் இமயக்குன்றம் நிகர்க்கும்

சூர்மார்பும் குன்றும் துளைத்த கூர் வேலோய்! உருள்கின்ற கடப்பமலர் மாலையை அணிந்த கந்தப் பெருமானே! பார்வதி திரு மணத்திற்குக் கயிலையில் யாவரும் வந்து கூடி யது போன்று, நின் திருப்பரங்குன்றத்திற்கு மூவரும் தேவரும் மற்றும் யாவரும் வருதலால் இப்பரங்குன்றம் இமயக்குன்றம் நிகர்க்குமெனப் பரிபாடல் போற்றுகிறது. திருப்பரங்குன்றில் முழக்கும் முரசொலி, மதுரையம்பதியிலுள்ள மன்றங்களில் எதிரொலிக்கின்றதாம்.

## மதுரை மாநகர் அமைப்பும் சிறப்பும்

திருமாலின் உந்திக் கமலத்தினின்றும் தோன்றிய தாமரை மலர்போல் விரிந்து மதுரை மாநகர் விளங்குகின்றது என்று அழகுணர்வு தோன்றக் கூறியுள்ள கவிநயம் சுவைத்து இன் புறத்தக்கதாகும். தெருக்கள், தாமரை அக விதழ்களைப்போலச் சூழ அமைந்துள்ளன என் றும், நடுவண் அமைந்துள்ள அரண்மனை, தாமரை மலரின் பொகுட்டு (கொட்டை) என வும், அந்நாளில் சூழ்ந்து நிறைந்துள்ள மக்கள், அப்பொகுட்டைச் சூழ்ந்துள்ள மகரந்தங்கள் எனவும், அம் மகரந்தங்களின் மணத்தால்

(வள்ளல் தன்மையால்) ஈர்க்கப்பட்டுவரும் வண்டுகள் பரிசிலர் எனவும், உருவகம் செய்துள்ள அணிநயம் ஆழ்ந்துணர்ந்து சுவைக்கத் தக்கதாகும்.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீறூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்;
தாதுண் பறவை அனையர் பரிசில்வாழ்நர்''.

## உவமை அழகு

மதுரை மாநகரத்து மக்கள் ஆண்களும், பெண்களும் ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டு சுற்றமும் நட்பும்சூழ, பல்வேறு வாகனங்களில் ஏறிக்கொண்டு, பன்னிரு தடந்தோள் வள்ளற் பெருமான் எழுந்தருளியுள்ள பரங்குன்றை வழிபடுவதற்காக, மேட்டு நிலத்தை நோக்கிச் செல்கின்ற காட்சியைக் காட்டவந்த நப்பண்ணனார் என்ற புலவர் பெருமான் கூறும் அற்புதமான உவமை நம்மை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்துகிறது. ''அறம்பல செய்த மக்கள், அதன் பயன்துய்ப்பான் வேண்டி, தேவர் உலகம் செல்வது போல இருக்கின்றது'' எனக்குறிப்பிடுகின்றார்.

''அறம்பெரி தாற்றி அதன்பயன் கொண்மார்
சிறந்தோர் உலகம் படருநர் போல''

(பரி:19-பாடல்)

## குடும்பக் காட்சி

விழாக் காணத் திருப்பரங்குன்றிற்குக் குடும்பம் குடும்பமாகச் செல்லும் பெருங் கூட்டத்தினரிடையே, ஓர் குடும்பத்தின் தனிக் காட்சியை நம் அகக்கண்முன் மிக அருகில் கொண்டுவந்து காட்டுகின்றார். 'கணவன், மனைவி, கைக்குழந்தை ஆகியவர்களுடன், அவர்களை ஈன்ற இருமுதுகுரவர்கள் (தாய், தந்தை, மாமியார், மாமனார்) மற்றும் அன்பான சுற்றத்துடன் பூசலின்றிப் பக்திப் பெருக்குடன் அம்மலையைத் திசைநோக்கிக் கையால் தொழுது செல்கின்றனர்' என்று கூறும் பரிபாடல் வரிகள் நம் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ளத்தக்கன.

''தைய லவரொடும் தந்தா ரவரொடும்
கைம்மக வோடும் காத லவரோடும்
தெய்வம்பேணித் திசைதொழுதனர் சென்றார்''

(பரி: 15 பாடல்)

## பாண்டியன் பரங்குன்றைத் தொழுத காட்சி

மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம். அறிவின் மாட்சிமைப்பட்ட பாண்டிய மன்னர், தம் பட்டத்து அரசியருடனும் மற்றும் ஆட்சிக்குக் கண்கள் போன்று விளங்குகின்ற அமைச்சர்களுடனும், படைத்தலைவர்களுடனும், அரசனால் சிறப்பிக்கப்பெற்ற சான்றோர் பெருமக்களுடனும் சென்று, அறுமுகச் சிவமாம் திருமுருகன் எழுந்தருளி இருக்கும் திருப்பரங்குன்றை வலம் வந்து போற்றித் தொழுங் காட்சியை அழகிய உவமைச் சிறப்புடன் கூறியிருப்பது அறிவுடையோர் ஏற்றுப் போற்றத் தக்க தொன்றாகும்.

மக்கட்கு வழிகாட்டியாக விளங்கும் அறிவு சான்ற பாண்டிய மன்னன், அணிகலன் பூண்டதம் தேவியாருடனும் ஐம்பெருங்குழு, எண்பேராயத்துடனும் பரங்குன்றின் புகழ் பாடிக் கொண்டு மலையை வலம் வருதல், சந்திரன் நட்சத்திரங்களுடன் சேர்ந்து மேருமலையை வலம் வருதல் போன்று காட்சியளிக்கிறது என்று கூறியிருப்பது படித்தறிந்து இன்புறத் தக்கதாகும்.

''சுடரொடு சூழ்வரு தாரகை மேருப்
புடைவரு சூழல் புலமான் வழுதி
மடமயி லோடும் மனையவ ரோடும்
கடனறி காரியக் கண்ணவ ரோடும், நின்
சூருறை குன்றிற் றடவரை ஏறிமேல்
பரடு வலர்திரி பண்பிற் பழமதிச்
சூடி யசையும் சுவல்மிசைத் தானையிற்
பாடிய நாவிற் பரந்த வுவகையின்
நாடும் நகரும் அடைய அடைந்தனைத்தே''

(பரி: 19)

## மன்னனும் மற்றுளோரும் போற்றல்

தேவருலகில் தோன்றிய தெய்வ யானையை மணந்ததுடன், மண்ணுலகில் குறக்குடியில் தோன்றிய வள்ளியையும் மணந்ததால், உயர்ந்தோங்கிய தவநெறியுடையோர் போற்றுதலைக்கேட்டு இன்புறுதல் போன்று எங்கள் ஓவ்வா வாழ்த்தினையும் பரங்கருணைத் தடங் கடலாக விளங்குகின்ற தேவரீர் ஏற்றருள்வீர் என நம்புகிறோம்.

திருப்பரங்குன்றில் விளங்கும் திருமுருகப் பெருமானே! நீர் அணிந்திருக்கும் ஆடையும் கடப்ப மலர்மாலையும் செந்நிறமுடையன. ஞானசக்தியாகிய வேலும் ஒளிவடிவாய் விளங்குகின்றது. நின் திருமுகமும் மேனியும் ஆயிரங்கோடி சூரியர் ஒருங்கு தோன்றினாற் போன்று அருட்சோதி வடிவாய் விளங்குகின்றன. உலகிற்குத் துன்பந் தந்துவந்த சூர்மாவினை வேரொடு சாய்த்தனை, மாயாத் தன்மை உடைய கிரௌஞ்ச மலையை உடைத்தனை. ஆயினும், அருள் சுரக்கின்ற இப்பரங்குன்றமலையில், புலவர்கள் போற்றும் புகழ்சால் கடம்பமர்ந்திருக்கும் அழகிய காட்சி கண்டு, மக்களொடு யாங்களும் நாள்தோறும் நின் திருவடி மலர்களைத் தொழுது ஏத்துகின்றோம். எங்கள் வாழ்த்தினையும் ஏற்றருள்வீராக.

"குறப்பிணாக் கொடியைக் கூடியோய் வாழ்த்துச்
சிறப்புணாக் கேட்டி செவி;
விரிகதிர் முற்றா விரிசுடர் ஒத்தி;
எவ்வத் தொவ்வா மாமுதல் தடிந்து
தெவ்வுக் குன்றத்துத் திருந்துவேல் அழுத்தி
அவ்வரை உடைத்தோய்நீ, இவ்வரை மருங்கிற்
கடம்பமர் அணிநிலை பகர்ந்தேம்,
உடங்கமர் ஆயமோ டேத்தினம் தொழுதே

(பரி: 10)

## பரிபாடல் காட்டும்பக்தி நிலை

திருவருளை அடையத்தக்கோர், அடையத் தகாதார் என இருவகையினரையும் படம் பிடித்துக் காட்டுகிறது, பரிபாடல். (1) நின் திருவருளை நம்பி ஏற்றுக்கொண்டு விருப்பத் துடன் அந்நெறியில் வழுவாது நின்று ஒழுகு வோர், (2) திருவருளில் அழுந்தி நிற்போர், (3) சீவன் முத்தர்கள் ஆகிய முத்திறத்தவரும் போற்றுதற்கு உரியவர்கள் என்றும்: (1) உயிர்க் கருணையற்ற கோபமுடையவர், (2) அறநெறி நெறிக்கு எதிரான பிற நெறியில் உழல்பவர், (3) கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனக்கொண்டு மறுபிறப்பில்லை என்று கூறும் அறிவற்ற உலகாயதர் ஆகிய மூவகையின ரும் திருவருளை எய்தார் என்றும் பட்டியல் போட்டுக் காட்டுகின்றது பரிபாடல்.

## வேண்டத்தக்க வரங்கள்

இறையருளில் தோய்ந்து நிற்போர், இவ் வுலக நிலையாமை, யாக்கை நிலையாமையை நன்குணர்ந்து, புலன்வழி இன்பம் தரும் பொன்னையும், பொருளையும் போகத்தையும் விரும்பாது, ஐம்புலன்கள் ஆரச்சுவைத்தாலும் செம்பதுமத் தாளிணையே விழைவர் என்பதற் கேற்ப, இறையன்பும், சிறந்த அறமாம் சிவ புண்ணியச் செயலும், அந்தமில் இன்பந்தரும் இறையருளுமே வேண்டினர் என்பது, இன் றைய உலகம் சிந்தித்துச் சிரமேற் கொள்ளத் தக்கவையாகும்.

''தேர்போன்று உருள்கின்ற கடப்ப மலர் மாலையை அணிந்த பெருமானே! யாங்கள் நின் திருவடி நிழலை எய்த வேண்டி, அடி யேங்கள் நின்பால் வேண்டுவன, நுகரப்படும் பொருளும், அவற்றைத் தரும் பொன்னும் இன்பமும் அல்ல. எமக்கு வீடு பயக்கும் நினது திருவருளும், அவ் அருளைப் பெற யாங்கள் செலுத்த வேண்டிய அன்பும், அவ்விரண்டால் வரும் அறமும் ஆகிய இம்மூன்றையுமே அளித்து அருளல்வேண்டும்''

---

# திருத்தணிகை ஆபற்சகாய விநாயகர்

பண்ணியம் ஏந்தும் கரம்தனக் காக்கிப், பால்நிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி, அரதனக் கலச வியன்கரம் தந்தைதாய்க் காக்கிக்,
கண்ணில் ஆணவவெங் கரிபிணித் தடக்கிக், கரிசினேற் கிருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற் சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்

—கச்சியப்ப முனிவர்,
திருத்தணிகைப் புராணம்.

விநாயகர், ஐந்து திருக்கைகளை உடையவர். ஆதலின், 'ஐங்கரன்' என்றும், அவருக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. பொதுவாகக் கடவுளர் யாவருக்கும் நான்கு கைகளே இருக்கும். ஏனைய கடவுளருக்கு உள்ள நான்கு கைகளோடு, துதிக்கையாகிய நீண்ட பெரிய ஐந்தாவது கையையும், கொண்டவர் விநாயகர். இங்ஙனம் ஐந்து கைகள் கொண்டிருப்பது, விநாயகரின் சிறப்பியல்பை உணர்த்தும். அவர் தமது கைகளுள் ஒன்றில், தம்பொருட்டு மோதகம் என்னும் சுவை உணவு வைத்திருக் கின்றார்; மற்றொரு கையில் தேவர்களைக் காப்பதற்காகப் படைக்கலம்போலத் தந்தம் ஏந்தியிருக்கின் றார்; பிறிதொரு கையில், தம்முடைய தாய் தந்தையார் ஆகிய உமைப் பிராட்டியையும் சிவபிரானை யும் வழிபடுவதற்காக, நீர்க்கலசம் தாங்கியிருக்கின்றார். ஏனைய இரண்டு கைகளிலும் உயிர்களாகிய நம்மை, ஆணவ மலமாகிய யானையானது பற்றி நலிவுறுத்தாது இருக்குமாறு செய்தற்பொருட்டுப், பாசமும் அங்குசமும் வைத்துக் கொண்டிருக்கின்றார். தமக்கும் தேவர்க்கும் தாய் தந்தையர்க்குமாக ஒவ்வொரு கையையே பயன்படுத்தும் விநாயகர், தம்மை வழிபடும் அடியவருக்குத் தீங்கு அகற்றி, நலம் விளைவிக்கும் குறிக்கோளுடன், இரண்டு கைகளைக் கொண்டிருப்பது, அடியவர்களின் பக்கலில் அவருக்குள்ள பெருங்கருணைத் திறத்தினைப் புலப்படுத்துகின்றது. அத்தகைய ஆபற்சகாய விநாயகர் திருவடிகளை வணங்கி மகிழ்வோம்.

திருத்தணிகையில் உள்ள விநாயகருக்கு, ஆபற்சகாய விநாயகர் (ஆபத்து நேரும்பொழுது வந்து சகாயம் புரிபவர்) என்று பெயர். விநாயகர் ஐந்து திருக் கைகளைக் கொண்டிருத்தல், அவர்தம் ஐந்தொழில் புரியும் ஆற்றலை யுணர்த்தும் அடையாளமாகவும் கொள்ளப் பெறும். கலசம் ஏந்திய கை, படைப்புத் தொழிலையும்; மோதகம் ஏந்திய கை, காத்தல் தொழிலையும்; அங்குசம் ஏந்திய கை, அழித்தற் றொழிலையும்; பாசம் ஏந்திய கை, மறைத்தற் தொழிலையும்; தந்தம் எந்திய கை, அருளல் தொழிலையும், குறிக்கின்றன. இனி விநாயகரின் ஐந்து கைகளும், திருவைந்தெழுத்து மந்திரத்தை உணர்த்துவதாகவும் பெரியோர்கள் கூறுவது உண்டு. அங்குசம் ஏந்திய வலக்கை சிகரம். பாசம் ஏந்திய இடக்கை வகரம். ஒற்றைத் தந்தம் ஏந்திய வலக்கை யகரம். மோதகம் ஏந்திய இடக்கை நகரம். துதிக்கை மகரம். இவ்வாறு கொள்ளுங்கால், விநாயகரின் ஐந்து கைகளிலும், சிவாயநம என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் அமைந்து விளங்குதல் தெளியலாம்.

—ஆசிரியர்

# நம்மாழ்வார்

[திரு புலவர் அ. தேவராசன், காஞ்சிபுரம்]

பாண்டியநாட்டில், தாமிரபரணி நதிக்கரையில் உள்ள திருக்குருகூரில், வேளாளர் குலத்தில், திருமாலுக்கே தொண்டுபூண்டு ஒழுகும் குடும்பத்தில், திருவழுதிவளநாடர் என்னும் பரமபாகவதர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது பரம்பரையில் பொற்காரியார் என்னும் சான்றோர் ஒருவர் வாழ்ந்திருந்தார். பொற்காரியார் தமது புதல்வரான காரியாருக்குத் திருமணம் செய்யக் கருதி, மலைநாட்டில் திருவண்பரிசாரம் என்னும் திருத்தலத்தில் வாழ்ந்து வந்த திருவாழ்மார்பர் என்னும் திருமால் அடியவரின் திருப்புதல்வியான உடைய நங்கையார் என்பவரை மணம்பேசி முடித்து, அவ் ஊரிலேயே மிகச் சிறப்பாகத் திருமணம் செய்துவைத்தார். அந்த மணமக்கள் திருக்குருகூரில் சில ஆண்டுகள் இல்லறத்தை நல்லறமாக இனிது நடத்திவந்தனர்.

ஒரு நாள் மாமனாரான திருவாழ்மார்பரின் வேண்டுகோட்கு இணங்கி, காரியார் தம்முடைய மனைவியான உடைய நங்கையாருடன், திருவண்பரிசாரத்திற்குச் சென்று, அங்குச் சிலகாலம் வாழ்ந்திருந்து, மறுபடியும் திருக்குருகூருக்குத் திரும்பி வரும் வழியில், திருக்குறுங்குடியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் நம்பி எம்பெருமானைச் சேவித்து ''அடியோங்களுக்கு ஒரு நல்ல மகப்பேற்றை அளித்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். திருக்குறுங்குடி நம்பியும் ''நாமே வந்து பிறக்கின்றோம்'' என்று அர்ச்சகரின் வாயிலாக வரம் அளித்தருளினார். நம்பியிடமிருந்து மாலை மற்றும் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு காரியார் திருக்குருகூருக்கு எழுந்தருளி வாழ்ந்து வருகையில், உடையநங்கையார் கருத்தரித்தார். எம்பெருமான் பாரெல்லாம் உய்யும்படி சேனைமுதலியாரை நம்மாழ்வாராக வந்து அவதரிக்கும்படி நியமித்தார். அதன்படி அவர் திருக்குருகூரில் உடையநங்கையார் திருவயிற்றில், கருவிலேயே திருவுடையவராக வந்து அவதரித்து அருளினார்.

இங்ஙனம் ஆழ்வார் அவதரிப்பதற்கு முன்னமே ''சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்; நின்றால் மரவடியாம்'' என்றபடி அடிமைசெய்யும் திருவனந்தாழ்வான், இவர் மீது மழை வெயில் முதலியன படாமல் பாதுகாப்பதற்காகத் திருக்குருகூரில் ஒரு புளிய மரமாக அவதரித்து வளர்ந்திருந்தான்.

நம்மாழ்வார், பிறந்த நாள் தொடங்கி அழுவது, தாய்ப்பால் உண்பது முதலிய உலக நடைக்கு ஒத்த செயல்கள் எதையும் செய்யாமல் இருந்து வந்தார். ஆயினும் பகவத் அநுபவத்தினால் வாட்டமில்லாது நன்கினிது வளர்ந்து வந்தார். அவ் அதிசயத்தைக் கண்ட தாய் தந்தையர் எம்பெருமான் மேலே பாரத்தை வைத்து, பிறந்த பின் பன்னிரண்டாம் நாள், திருக்குருகூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பொலிந்துநின்ற பிரான் திருமுன்னர்க் குழந்தையை எடுத்துச் சென்று பிரானைச் சேவிக்கப் பண்ணிவைத்து, அப்பெருமான் திருமுன்பே அந்தத் தெய்வக்குழந்தையானது உலக நடைக்கு மாறாக இருந்ததனால் 'மாறன்' என்று திருநாமம் சாற்றினார்கள். அருகிலே திருவனந்தாழ்வான் அவதாரமாக இருந்த திருப்புளியாழ்வார் அடியிலே, ஆணிப்பொன்னால் செய்த அழகிய வண்ணச் சிறுதொட்டிலிலே கண்வளர்த்தி, அவரைத் தங்கள் பிள்ளையாகக் கருதாமல் "எங்கள் குடிக்கரசே" என்று பெரிதும் அன்புடன் போற்றி வந்தார்கள். எம்பெருமானும் சேனைமுதலியாரை அனுப்பிவைத்து, அவருக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களையும் செய்வித்து, எல்லாப் பொருள்நலங்களையும் உபதேசிக்கும்மாறு செய்து, மயர்வற மதிநலம் அருளினான்.

கருவில் இருக்கும்போது குழந்தைகளின் அறிவை மறைக்கும் சடவாயுவைப் பிறக்கும்போதே தம்மை மேலிடாதபடி ஊங்காரத்தாலே அதட்டி ஓட்டியவர் ஆதலால், இவருக்குச் சடகோபர் என்னும் பெயரும் வழங்கலாயிற்று. நம்பெருமாள் ஆகிற திருவரங்கநாதனால், ''நம்மாழ்வார்'' என்று பெரிதும் பரிவுகூர்ந்து அருளிச் செய்யப்பெற்றதனால், இவருக்கு நம்மாழ்வார் என்னும் திருப்பெயரும் ஏற்படுவதாயிற்று. பொலிந்து நின்றபிரான் திருவுள்ளம் உவந்து வழங்கியருளிய மகிழமாலையைத் தரித்ததனால், 'நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன்' என்று தானே அருளிச் செய்தபடி, இவருக்கு மகிழ்மாலை மார்பினன் என்றும் வகுளாபரணர் என்றும் பெயர்கள் அமைந்தன. பிற மதங்கள் ஆகிற மதயானைகளைத் தமது

திவ்வியப் பிரபந்தங்களில் அருளிய தத்துவநுண் பொருள்களால் செருக்கடக்கி, அவற்றிற்கு அங்குசம் என்னும் கருவிபோல இருந்ததனால், இவருக்குப் பராங்குசர் என்னும் புகழும் ஏற்பட்டது.

இத்தகைய ஆழ்வார் இவ்வுலகில் தம்மைப் போன்ற இறையருள் அனுபவம் உடைய சீடனைக் காணாமயைாலே, பதினாறு வயதுவரை வாய் திறவாமலே இருந்தார். அப்போது மதுரகவியாழ்வார் இவரைச் சந்தித்து வாய் திறக்க வைத்து, இவருக்குச் சீடரானார். பரவாசுதேவனும், வியூக மூர்த்திகளும், விபவ மூர்த்திகளும், அந்தர்யாமி எம்பெருமானும், திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாமூர்த்திகளும், திருப்புளியாழ்வார் அடியிலேஎழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாருடைய நெஞ்சு என்னும் உட்கண்ணுக்குக் காட்சியளித்தார்கள். அவ் எம்பெருமான்களுடைய சொரூப ரூப குண விபூதிகளையெல்லாம் அநுபவித்து, அவ்வனுபவத்தால் உண்டான பெருமகிழ்ச்சி உள்ளடங்காமல் பொங்கிவழிந்து, நம்மாழ்வார் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு திவ்வியப் பிரபந்தங்களை அருளிச் செய்தார். இவற்றுள் நூறு பாசுரங்கள் கொண்ட திருவிருத்தம் ரிக் வேதாசாரம் ஆகவும், எண்பத்தேழு பாசுரங்கள் கொண்ட பெரியதிருவந்தாதி அதர்வண வேதசாரம் ஆகவும், 1102 பாசுரங்களும், 100 திருவாய்மொழிகளும் (பதிகங்களும்), 10 பத்துக்களும் (சதகங்களும்) கொண்ட ஒப்புயர்வற்ற திவ்வியப்பிரபந்தமான திருவாய்மொழி வேதங்களுள் ஒப்புயர்வற்ற சாம வேதத்தின் சாரமாகவும் அமைந்தன.

ஆழ்வாருடைய திருவாய்மொழியை அநுபவிப்பதற்காக நித்தியசூரிகளும், இவ்வுலகில் உள்ள வைணவப் பெருமக்களும், மற்றுமுள்ள தேவர் முனிவர்களும் திருப்புளியாழ்வார் அடியிலே கூடினார்கள். அந்த மெய்யடியார்களின் திருக்கூட்டத்தைக் கண்டு ''பொலிக பொலிக'' என்னும் திருவாய் மொழியிலே, அவர்களுக்குப் பல்லாண்டு பாடி ''கலியும்கெடும் கண்டுகொண்மின்'' என்னும் பாசுரப் பகுதியாலே, வரப்போகும் மகாசாரியார் ஆன எம்பெருமானார் காலம் தொடங்கி வைணவர்கள் திரள்திரளாக லட்சோப லட்சமாகப் பெருகப்போவதை முன் கூட்டியே உணர்த்தியருளினார். பிறந்தது முதல் இவ் இருள் தருமா ஞாலம் ஆகிய உலக வாழ்க்கையில் ஈடுபடாமல், தாய்ப்பாலும் அருந்தாமல், திருத்துழாய் மணத்தோடேயே முளைப்பதுபோல, எம்பெருமான் அருளிய மயர்வறும் மதி நலங்கள் ஆகிற ஞான பக்திகளுடன், இவர் சுடரொளி வீசித் திகழ்ந்து வந்தார்.

இதனால் இவர் ஆழ்வார்களில் தலைவராகவும், மற்றை ஆழ்வார்களை அவயவங்களாகக் கொண்டவராகவும், முன்னோர்களால் கொண்டாடப்படுகின்றார். இவருக்குப் பூதத்தாழ்வார் தலை, பொய்கை பேயாழ்வார் என்னும் இருவரும் கண்கள், பெரியாழ்வார் முகம், திருமழிசையாழ்வார் கழுத்து, குலசேகராழ்வார் திருப்பாணாழ்வார் என்னும் இருவரும் கைகள், திருமங்கையாழ்வார் கொப்பூழ், மதுரகவியாழ்வார் திருவடிகள், எம்பெருமானார் என்னும் இராமாநுஜர், திருவடி நிலைகள் என்னும் பாதுகையாகவும் பெரியோர்கள் கூறுவர்.

இப்படி ஒப்புயர்வற்ற நம்மாழ்வார் எம்பெருமானுடைய திருவடி நிலையாகவே இருப்பது பற்றி, எல்லாப் பெருமாள் கோயில்களிலும், பெருமாளுடைய பாதுகை 'சடாரி' என்றும், 'சடகோபன் 'என்றும் வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட பெருமைகளைப் பெற்ற நம்மாழ்வார், தம் வாழ்நாள் முழுதும் வேறு எதிலும் சிந்தை செலுத்தாமல், எம்பெருமானோடு கூடி மகிழ்ந்தும், அவனைப் பிரிந்து துன்புற்றும், பரபக்தி பரஞான பரமபக்திகள் வளரப்பெற்று, முப்பத்தைந்து ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்திருந்து, 'சூழ்விசும்பு அணிமுகில்' என்னும் திருவாய்மொழியில், எம்பெருமான் தமக்குக் காட்டியபடியே அர்ச்சராதி கதியாலேசென்று, நித்திய சூரிகளெல்லாம் எதிர்கொள்ளும்படி, வைகுந்தமாநகர் புக்குத் திருமாமணி மண்டபத்திலே, எம்பெருமானுக்கு நித்திய போக்யப் பொருளாக அந்தமில் பேரின்பத்தை அடைந்தருளினார்.

இவருடைய திவ்வியப்பிரபந்தங்கள் நான்கும், ரகசியத் திரைய விவரணமாகவும், அர்த்தபஞ்சக விவரணமாகவும் இருப்பதால், தமிழ் வேதம் என்று பெரியோர்களால் போற்றிக் கொண்டாடப்பெற்று வருகின்றன. முதல் பிரபந்தமான திருவிருத்தம் 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்று சேஷத்துவ சொரூபத்தை விளக்கிக் கொண்டுதொடங்கி, அதை விசேடமாகவிளக்கிக்கொண்டுசென்று, 'ஞானப் பிரானை அல்லால் இல்லை நான்கண்ட நல்லதுவே' என்று, உபாயம் எம்பெருமானே என்று உறுதிசெய்து தலைக்கட்டுகையால், முதல் ரகசியமான திருவெட்டெழுத்தில் சொரூபத்தை விளக்கும் முதல் பதமான பிரணவத்தையும், உபாயத்தை உறுதிசெய்யும் இரண்டாவது பதமான நம சப்தத்தையும், விவரிப்பதாக விளங்குகின்றது. இரண்டாவது பிரபந்தமான திருவாசிரியம் 'செக்கர்மா முகிலுடுத்து' என்று தொடங்கி, எம்பெருமானுடைய சொரூப ரூப குண விபூதிகளையும், 'நேரிய காதல் அன்பில் இன்பீன் தேறல் அமுதவெள்ளம்' என்று பக்தியையும், 'தனிமாத் தெய்வத்து அடியவர்க்கு இனிநாம் ஆளாகவே இசையுங்கொல்?' என்று பாகவத கைங்கரியமாகிய பரமபுருஷார்த், தத்தையும், 'மாயக்கடவுள் மாமுதல் அடியே, ஊழிதோறு ஊழி ஓவாது வாழிய என்று யாம் தொழ இசையுங்கொல்?' என்று எம்பெருமான் திறத்தில் மங்களாசாசனமும் கைங்கரியமும் ஆகிற புருஷார்த்தங்களை விரிவாக விளக்குவதனால் திருமந்திரத்தில் புருஷார்த்தத்தை விளக்கும்மூன்றாவதுபதமான, 'நாராயணாய' என்னும் நலம் தரும் சொல்லை விவரிப்பதாகின்றது.

இனி மூன்றாவது பிரபந்தமான பெரிய திருவந்தாதி. 'நெறிகாட்டி நீக்குதியோ'-'ஓர் ஐவரையே மாறாகக் காத்தானே'-'நாய்தந்து

மோதாமல் நல்குவான்'-'மனத்தலை வன்துன்பத்தை மாற்றினேன், வானோர் இனத்தலை வன் கண்ணனால் யான்' 'அருள்என்னும் தண்டால் அடித்து' -'அசுரர்களை நேமியால் பாறு பாறு ஆக்கினான்' - 'வினையார் தர முயலும் வெம்மையே அஞ்சிறு, நாயகத்தான் பொன்னடிகள் ஏத்தினேன்' என்றெல்லாம் பற்பல பாசுரங்களிலே உபாயாந்தரங்கள் தன்னை விட்டு நீங்குவதற்காக அவனால் ஏற்படுத்தப்பட்டவை ஆகையாலே கைவிடத்தக்கவர் என்றும், அவனே உபாயம் என்றும், அவனை உபாயமாகக் கொண்டார்க்குப் பாவங்கள் பறந்தோடிப்போம். என்றும், விரிவாகச் சொல்லுகையாலே, இப்பொருள்களைச் சுருங்கச் சொல்லும் சரம சுலோகத்தை விவரிக்கின்றது.

நாலாவது பிரபந்தமான திருவாய்மொழி, மந்திர ரத்தினமான துவயத்தை விவரிக்கின்றது. ''துவயார்த்தம் தீர்க்க சரணாகதி என்றது சார சங்கிரகத்திலே'' என்னும் ஆசாரிய இருதய சூர்ணையிலும், அதற்கு மணவாள மாமுனிகள் அருளிய வியாக்கியானத்திலும், திருவாய்மொழியானது பத்துப் பத்துக்களாலும், துவயத்தில் உள்ள பத்து அர்த்தங்களையும் விவரிக்கையாலே தீர்க்க சரணாகதியாய் இருப்பது என்று பிள்ளைலோகாச்சாரியர் சார சங்கிரகம் என்னும் இரகசியநூலில் விளக்கியருளினார் என்று காட்டப்பட்டது.

ஆக இனி முதல்மூன்று பிரபந்தங்களிலும் இங்ஙனம் சுருக்கமாகச் சொல்லப்பட்ட அர்த்த பஞ்சகத்தையும், திருவாய்மொழியில் இருபது பதிகங்களாலே தெளிவாக்கி, மற்ற எண்பது பதிகங்களாலே விரிவாக விளக்குகின்றார் என்ற அர்த்தம், ஆச்சார்ய இருதய சூர்ணையிலும், அதன் வியாக்கியானங்களிலும் விரிவாகக் காணலாம். திருவாய்மொழியின் பத்துப் பதிகங்களிலும் முறையே, 1. பரத்துவம் 2. காரணத்துவம் 3 .வியாபகத்துவம்,4 நியந்திருத்வம்,5. காருண்ணிகத்வம். 6. சரண்யத்வம் 7. சக்தத்துவம் 8. சத்தியகாமத்வம், 9. ஆபத்சகத்வம், 10 10. ஆர்த்திஹரத்துவம் என்னும் குணங்களோடு கூடிய எம்பெருமான், ஆழ்வாருக்குப் பிறப்பித்த நிலைகள் என்னென்ன என்பதை ஆச்சார்ய இருதயத்திலும், அதன் வியாக்கியானத்திலும் விளங்கக் காணலாம்.

—;o;—

# நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்!

அகரம்என அறிவாகி, உலகம் எங்கும்
அமர்ந்து, அகர உகர மகரங்கள் தம்மால்

பகரும்ஒரு முதலாகி, வேறும் ஆகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு,

புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந்து எய்தப்
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்து, அல்லோர்க்கு

நிகரில்மறக் கருணைபுரிந்து, ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்!

—கச்சியப்ப முனிவர்,
விநாயக புராணம்

விநாயகர் அகரமாகிய எழுத்தைப் போன்றவர். முதன்மையும் சிறப்பும்மிக்கவர். அறிவின் திருவுருவமாக விளங்குபவர். உலகம் எங்கும் பரவி விளங்கும் வியாபகத் தன்மையுடையவர். படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களுக்கும் காரணமான, அகரம்—உகரம்—மகரம் என்னும் என்னும் மூன்றும் சேர்ந்த, பிரவணமாகிய ஓங்காரப் பொருளின் முழுமுதல் தலைவராகத் திகழ்பவர். அடியார்கள் விரும்பும் வகைகளில் எல்லாம் பல்வேறு திருமேனிகளை எடுத்து வருபவர். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும், தம்மைப் போற்றி வழிபடும் அடியவர்களுக்கு அளித்தருளி, அறக்கருணை புரிபவர். அன்பில்லாதவர்களுக்கு மறக்கருணை புரிந்து, முதலில் துன்பங்களை விளைவித்துத் தடுத்து ஆட்கொண்டு, பின்னர் நன்மைகளை உண்டாக்கிக் காத்தருளும் இயல்பினர். அத்தகைய கணபதியாகிய விநாயகரைப் பணிந்து வாழ்வோமாக!

—ஆசிரியர்!

# "ஆறுமுகம் ஆன பொருள்"

'செந்தமிழ்ச் செல்வர்'

திரு. ஆ. கந்தசாமி, M. A., M. Phil.

## முன்னுரை

''ஆறுமுகம் ஆன பொருள்
நீஅருளல் வேண்டும்

ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே''

—அருணகிரியார்

மொழிக்குத்துணை முருகா என்னும் நாமம் என்பது ஆன்றோர்வாக்கு. 'சேயோன் மேய மைவரையுலகமும்' -என்று தொல்காப்பியத்தில் குறிஞ்சிநிலக் கடவுளாகக் கூறப்பட்ட முருகன், குன்றுதோறாடுங் குமரனாக இன்றும் விளங்குகின்றான். அவன் ஆறுமுகச் செவ்வேளாக அணிதிகழ் கோவில்களில், பாடல்களில் காட்சியளிக்கின்றான். உருவம் ,பெயர், தொழில் ஒன்றும் இன்றி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். அவன் ,உண்மை அறிவு இன்பமாக- சச்சிதானந்தமாகத் (சத்-சித்-ஆனந்தம்) திகழ்கின்றான். உயிர்கட்குப் போகம் தந்து அதன் இழிவினை உணர்த்தி அதனினும் மேம்பட்ட வீடுபேற்று விழைவு வரச் செய்து அதற்குரிய சாதனம் தந்து, ஒழுக வைத்து வீடுநல்க அவன் உருவம் கொள்வான் என்பர். அவன் உருவம் அருவம் அருவுருவம் ஆனவன், மிக்க அருளால் மேனிகொண்டான். அத்தகு முருகனைப்பற்றியது இக்கட்டுரை.

சிறப்பாக இக்கட்டுரை ஆறுமுகத்தின் தத்துவக் கருத்துக்களைக் காண்பதோடு, முருகு பற்றியும் முருகனுக்கு வழங்கும் வேறுபெயர்கள், பல்வேறு கதைகள் ,ஆறு என்ற எண்ணின் சிறப்பு, ஆறுபடைவீடு, இந்துசமயத்தில் முருக வழிபாடுபெறும்இடம் ஆகியவற்றையும் ஓரளவு ஆய்ந்து செல்கின்றது. இக்கட்டுரையில், ஆறு முகங்களின் தனித்தனி செயலாக நக்கீரர், அருணகிரிநாதர், குமரகுருபரர் கூறும் செய்திகள் ஒப்பீட்டு முறையில் அணுகப்பட்டுள்ளன.

## முருகு

முருகு என்ற சொல்லுக்கு அழகு, இளமை மணம், கடவுள்தன்மை என்ற பொருள்களுண்டு. இயற்கையிலுள்ள அழகை - முருகை முதன் முதல் கண்டவர் தமிழ்நாட்டார். இயற்கை மணமும், மாறாஇளமையும், கடவுள்தன்மையும், அழியா அழகும், எச்சமயத்தவரும் ஏற்றுப் போற்றும் ஆண்டவனுக்குரிய இயல்புகளாகும். இவ்வியல்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற முருகன் 'சமஷ்டி' (எல்லாம் சேர்ந்த) தெய்வமாவான். அத்தகுமுருகன் தமிழ்த்தெய்வமே என்று திரு.வி.க. சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

இயற்கை முதல்வனாகிய முருகன் ஆறுமுகங் கொண்டது, வேல்தாங்கியது, சூரனைத் தடிந்தது, இருமாதரை மணந்தது முதலிய வரலாறுகளிலுள்ள உண்மைகள்,குமார தந்திரம், கந்தபுராணம், திருப்புகழ், சுப்பிரமணிய பராக்கிரமம், பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் பிரபந்தங்கள் ஆகியவற்றில் காணக்கிடக்கின்றன.

வட நாட்டினர் கார்த்திகேயன் என்ற பெயரில் பெரும்பாலும் முருகனை அழைக்கின்றனர். அங்குள்ள முருகன் பிரம்மச்சரிய நிலையில் உள்ளான். பெண்கள் அவனைத் தரிசிப்பதில்லை. தென்னகத்தில் முருகவழிபாடு மிகச் சிறந்து விளங்குகின்றது. தமிழ்ப் பண்பாட்டில் மலர்ந்த முருகனுக்கு வள்ளியின் காதல் திருமணமும், சூர்தடிந்த தன்மையும் சிறப்பான கூறுகளாகும். இவைவட இந்திய'ஸ்கந்தனிடம்' காணப்படவில்லை.

வள்ளியின் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற முருகன் தமிழ் நாட்டவரால் முதன் முதல் காணப்பட்ட இறைவனாயினும் அவன் எல்லா உயிர்களையும் நடத்தும் ஆண்டவனாயிருக்கின்றான். அவனது நோன்பும் வழிபாடும் எல்லார்க்குமுரியன. அவனை அவ்வந்நாட்டவர்கள் அவ்வந்நாட்டுமொழியில் பலபெயரிட்டு வழிபடுகிறார்கள்.

## வேறுபெயர்கள்

ஒரு நாமமும்ஒருருவும் இல்லா இறைவனை ஆயிரம் பெயர்கள் சொல்லி அழைப்பர். ஆறு

முடிக்கும் அரனை அடியார்கள் பல பெயரிட்டு அழைத்தது போல, ஆறுமுடிக்குமரனையும் நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக அழைத்து மகிழ்கின்றனர்.

வேலன், கந்தன், சுப்பிரமணியன், கார்த்தி கேயன், சரவணபவன், குமரன், சண்முகன், தாரகாரி, கிரௌஞ்சபேதனன், சக்திதரன், தேவ சேனாபதி, சேனாபதி, கஜவாகனன், மயில்வாக னன், சேனானி, பிரம்மசாஸ்தா, பாலசுவாமி, சிகிவாகனன், வள்ளி கல்யாண சுந்தரன், அக் கினிஜாதன், சாரபேயன், காங்கேயன், குகன், பிரம்மச்சாரி, தேசிகன், எனப்பல பெயர்களில் முருகன் அழைக்கப்படுகிறான். இப்பேர்களில் ஒருமுகம், ஆறுமுகமும் உள்ளவடிவாக விளங்கு வதுடன், இரண்டு கைகள், நான்கு கைகள், ஆறுகைகள், பத்துக்கைகள், பன்னிரண்டு கை கள் உள்ளவடிவாகவும் முருகன் வடிக்கப் பட்டுள்ளான். சத்துவ நிலையில் இருகரங் களும், இராஜச நிலையில் நான்கு கரங்களும், தாமச நிலையில் பன்னிரண்டு கரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. எல்லப்பன் என்ற பெயர் முருகனைக் குறிக்கும் என்றும் எல்லக் கதிர்காமமே பின்னர் செல்வக் கதிர்காமமாகத் திரிந்தது என்றுங் கூறுவர். மேற்குறித்த பெயர் களுள் கந்தன் என்பது சேர்க்கப்பட்டவன்: சத்துருக்களை அழிப்பவன் என்றும், வேள் என்பது விரும்பப்படுபவன், தலைவன் என்றும், சாமி என்பது எல்லாம் உடையவன் உலக உயிர்கள் எல்லாவற்றையும் தனது உடைமைப் பொருளாகக் கொண்டவன் என்றும், குகன் என்பது காப்பவன்; இருதயக் குகையில் இரக சியமாக அருள்பவன் என்றும்; கார்த்திகேயன் என்பது கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றவன் என்றும்; சரவணபவன் என்பது கங்கைக் கரையிலுள்ள தருப்பை வனத்தில் உருவுடன் காட்சியளித்தவன் என்றும், கடம் பன் என்பது கடப்பமலர் மாலையைத் தரித்த வன் என்றும், விசாகன் என்பது விசாகநாளிற் பிறந்தவன் என்றும், காங்கேயன் என்பது கங் கையில் தோன்றியவன் என்றும்; குமாரன் என் பது என்றும் இளமையுடைய குமரத்தன்மை யுடையவன், தாழ்ந்த குறிக்கோளை அழிப்ப வன் என்றும் பொருள்படும். இப்பெயர்களே, ஆறுமுகங்களின் பண்புகளின் விளக்கமாக அமை கின்றன. இவ்வாறு பொருள் கொள்வதற்குக் கந்த புராணச் செய்யுட்கள் பலவும் சான்றாக உள்ளன.

## தோற்றம் பற்றிய பல்வேறு கதைகள்

காலத்துக்குக் காலம் முருகனைப் பற்றிய வரலாறு வேறுபடுவது போலவே இடத்துக்கு இடம்கூட வேறுபடுகிறது.

சூரபதுமனை அழிக்கத்திருவுளங்கொண்ட பரம்பொருள் ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு ஆற்றல்களையும் ஆறுமுகங்களாக ஆக்கி, அவைகளின் நெற்றிக்கண்களிலிருந்து ஆறுதனித் தனித் தீப்பொறிகளை வெளிவரச் செய்து, அவைகளால் ஆறு தனித்தனிக் குழந்தைகள் தோற்றம் பெறச் செய்து, இவ்வாறு தோற்றம் பெற்ற ஆறு குழந்தைகளையும் 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ' என்று ஆறுபேர் பெற்ற ஆறு குழந்தைகளாகவே முருகனை முதன் முதல் அமைத்துக் காட்டுகின்றது திருமுரு காற்றுப்படை.

இறைவன் பல காலத்தில் பல இடங்களில் பல அன்பர்களுக்குப் பலவகைப் பேறுகளை அளிப்பதற்கென்றே கொண்ட திருவுருவங்க ளுள், முருகன் திருவுருவமும் ஒன்று. ஈசனே அவன் ஆடலால் குழந்தையாக ஆனான். தனக் குத்தானே மகனாகிய தத்துவன் அவன். பரம னோடு வேறுபட்டவனல்லன். மாற்றம் மனங் கழிய எங்கும் நீக்கமற நின்று எல்லாவற்றை யும் தன்னகத்தே தாங்குவதால் பிரமம் எனப் படுகின்ற இந்த நிலை, யோகிகளுக்குப் புருவ மத்தியில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மேல் சோதியாகக் காட்சியளிக்கும் அந்த சோதியே இவ்வுலகம் உய்ய அழகிய உருக் கொண்டு குழந்தை உருவில் வந்ததென்பர்.

''அருவமும் உருவுமாகி அனாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர்
மேனியாக''

என்ற வரிகள் இதனை விளக்கும்.

ஞானியாரடிகள், மனவாசகம் கடந்தவன் பரமசிவத்தின் புருவமத்தியில் அழற்கண்ணி னின்றும் சோதியாகத் தோன்றி நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐம்பொருள் உறவு கொண்டு, சரவணப்பொய்கையில் தாமரை மலர்மேல் ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் கொண்டு முருகனாகத் திருஅவதாரம் செய் தான் என இதற்கு விளக்கம் தருகின்றார். மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல் நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி ஆறுமுக உருவாய்த் தோன்றி அருளோடு சரவணத்தின் வெறி கமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளினானே எனக் கச்சியப்பர் பாடுகின்றார்.

காளிதாசர், தமது குமாரசம்பவத்தில் பார்வதி தன் அழகால் சிவனைக் கவரமுடியாது போகத் தன் பணிவிடையின் மூலம் அவர் உள்ளத்தில் அன்புபெற்று அதன் விளைவால் குமரன் தோன்றியதாகக் கூறுவர்.

மகாபாரதம் வனபருவத்தில் கந்தன் பற் றிய செய்தி இடம் பெற்றுள்ளது. அதில் தட்சனுடைய மகள் 'சுவாகா' என்பவள் அக்னி பகவானிடம் காதல் கொண்டதாகவும், ஆனால் அக்னி பகவான் ஏற்கனவே கிருத்திகைப் பெண் களிடத்தில் காதல் கொண்டமையால் சுவாகா வின் (ஸ்வாஹா) காதலை மறுக்க, அதனைக் கண்டு அவள் தானே ஏழு கார்த்திகைப் பெண் களைப் போல் உருவெடுத்து அக்னியினுடன் கூடியதாகவும், அதன் விளைவே, 'ஸ்கந்தனு டைய' குணங்களையெல்லாம் வாய்க்கப்பெற்ற ஒருமகவு உதித்தது என்றும் சொல்லப்படுகிறது இவ்வாறு, வடமொழிப் பாரதத்தில் சொல்லப்

படும் முருகன் தோற்றத்திற்கும், வடமொழி ஸ்கந்தபுராணத்தில் சொல்லப்படும் முருகன் தோற்றத்திற்கும் வேற்றுமை இருக்கிறது. முருகன் தோற்றம் மற்றுள்ள புராணங்களில் இன்னும் பலவாறு பேசப்படுகிறது. பரிபாடல் முருகனைப்பற்றிப் பழிப்புரை பகர்ந்திருக்கின்றது. சிவாகமங்கள் சில பரிவார தேவருள் முருகன் ஒருவன் என்று சொல்லுகின்றன.

## ஆறு என்ற எண்ணின் சிறப்பு

ஆறு என்று எண்ணிக்கை மிக்க மகிமை வாய்ந்தது. இறைவனுக்குரிய பண்புகள் ஆறு. அவை மங்கலம், நிறைவு, இளமை, இடர்களைதல், ஆற்றல், பேரொளி, என்பன. எனவே, இவனைப் பகவன் என்பர். பகம் என்றால் ஆறு எனப்பொருள்படும். வள்ளலாருக்கு அருள் கிடைத்தது ஆறு வயதில், 'சகரமொடு ஆறும் ஆனோன்' என்று பாடிய குமரகுருதாசரின் மொத்தப் பாடல்கள் 6666, அருட்பா திருமுறை ஆறு. துரிய நிலையும் ஆறு. சமயங்கள் ஆறு, ஆதாரங்கள் ஆறு, தத்துவங்கள் ஆறாறு, அருள் காரணத்தால் தோன்றிய இறைவன் திருவடிவம் மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகிய அத்துவாக்கள் (வழிகள்) ஆறு. படிமத்தை அழகுற அமைப்பதற்குத் தேவையான அளவுகள் (மானங்கள்) ஆறு. இச்சிறப்பு கருதியே அறுமுகக் கடவுளோடு தொடர்புடைய பலவற்றை ஆறாகக் கருதுவதில் இன்பங் கண்டனர். ஆறு நட்சத்திரங்களைக் கொண்டது கிருத்திகை, திதியில் ஆறாவது 'சஷ்டி'. இரண்டும் ஆறுமுகப் பெருமானுக்கு உரிய நாளாவது போல் அவன் உறையும் இடங்களை, ஆறுபடைவீடு என்கின்றனர். பெரும் பொழுது ஆறு, சிறுபொழுது ஆறு, ஆறு என்ற எண் பலவகையில் சிறப்புடையதாய் இலங்குகின்றது.

## ஆறுபடைவீடு

நக்கீரர் தாம்பாடிய திருமுருகாற்றுப் படையில் முருகன் உறையும் இடங்கள் இவையென்று காட்டும் பொழுது ஆறு இடங்களைக் கூறுகின்றார். அவர் அப்படி கூறியது முதலே ஆறுபடைவீடுகள் என்ற வரையறை வழக்கில் வந்தது. இம்மரபினைப் பின்பற்றிக் குமரகுருபரர் "ஆறு திருப்பதிகள் கண்டாறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே'' என்கிறார். அருணகிரிநாதர்,

''சகலமு முதலாகிய அறுபதி நிலைமேவிய

தடமயில் தனிலேறிய பெருமாளே''

என்று குறிப்பர். ஆறுபடை வீடுகளை ஆறு திருப்பதிகள் என்றே இருவரும், பாடுகின்றனர். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை, என்ற ஆறு படை வீடுகளுக்கும் பல தத்துவ விளக்கங்களைத் தருகின்றார். அவற்றுள் ஒன்று, ஆறுபடை வீடுகளும் நமது உடலிலுள்ள ஆறு ஆதாரங்களின் விளக்க இடங்கள் என்பர். திருப்பரங்குன்றம் மூலாதாரம்; திருச்செந்தூர், சுவாதிஷ்டானம்; திருவாவினன்குடி, மணிபூரகம்; திருவேரகம், அநாகதம்; பழமுதிர்சோலை, விசுத்தி; குன்றுதோறாடல் ஆக்ஞை ஆகும். இதற்கு, உடம்பில் மூலாதாரம் ஆறு ஆதாரம் உள்ளது. ஒவ்வொரு ஆதாரம் ஒவ்வொருமலையைக் கடந்ததும் அங்கு முருகன் இருந்து 'அப்பா வந்தாயா'? என்று நம்மை அணைத்து மேலே ஏற்றிவிடுகிறான். ஒவ்வொரு மலையிலும் ஒவ்வொருமுகமாக இருக்கிறான்.

''ஏறுமயிலேறி விளையாடுமுகம் ஒன்று''

....என்று ஐந்து ஆதாரங்களிலும் உள்ள முருகனின் குணங்களைக் கூறிக் கொண்டே வந்த அருணகிரியார், ஆறாவது ஆதாரத்தில் வந்ததும், வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே என்கிறார். ஆறாவது ஆதாரத்தில் வந்ததும் வள்ளியாகிய ஜீவனுடன் கலந்து, என்னைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டாயே இதோபார் என்று தன்னுடன் சேர்த்துக் கொள்கின்றார் என்று விளக்கந் தரப்பட்டுள்ளது. கந்தரனுபூதி, ஆறுபடை வீடுகளில் முருகனின் ஆறுதன்மைகளைத் தொகுத்து,

''உல்லாச நிராகுல யோக இத சல்லாப விநோதனும் நீயலையோ'' எனக் கூறுகின்றது. இதில் 'யோக' என்பது பழனியில் உள்ள அருட்கோலத்தையும், இத என்பது சுவாமி மலையில் குருவாக இருந்து இதமாக உரைத்தலையும், சல்லாப என்பது பழமுதிர்சோலையில் வேதாகமங்களுடன் விளையாடும் ஞானத் திறத்தையும், உல்லாச என்பது திருப்பரங்குன்றத்தில் சூரசம்காரத்துக்குப் பின் தெய்வயானையை மணத்தலையும், நிராகுல என்பது (துன்பம் இல்லாமை) திருச்செந்தூரில் அலைகள் முருகன் திருவடியில் தோய்ந்து அமைதி பெறுதலையும் உணர்த்தின.

## முடிவுரை

கந்த புராணத்தில் ஆறுபடை வீடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு துதியைக் கச்சியப்ப சிவாசாரியர் அமைத்திருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## ஆறு படைவீடு

ஒளியும், அருளும், உயர்தவமும், நல்ல
தெளிவுதரு மந்திரமும், சீரார் — எளிமையும்,
வீறுபெற எங்கும் விளங்குதலும், நம்முருகன்
ஆறுபடை வீட்டின் அமைப்பு.

—ந. ரா. முருகவேள்.

# அன்னை ஆதிபராசக்தி

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

(வெண்பா)

ஆதிபரா சக்தி! அருள்வடிவாம் மேல்மருவூர்ச்
சோதி! நல்ல சுத்த சுயஞ்சோதி!—நீதிலவாய்
மன்னுயிர்கள் வாழ வரம்அளிக்கும் ஓம்சக்தி!
அன்னையின்தாள் போற்றிஉய்வோம் யாம்! (1)

அண்ணல்பங் காரு அடிகளார் ஆற்றியபல்
புண்ணியத்தால், மேல்மருவூர்ப் போந்தருளி,—
நண்ணலுறும்
அன்பர் தமைக்காக்கும் ஆதிபரா சக்தியின்தாள்
இன்பமுற வாழ்த்திஉய்வோம் யாம்! (2)

சித்தர்பலர் வாழும் சிறந்தநல்ல மேல்மருவூர்ப்
பக்தர்கள், ஆதிபரா சக்திஅம்மை-மெய்த்திறனைக்
கண்ணாரக் கண்டு, கலிகளெலாம் தீர்கின்றார்!
விண்ணோரும் நிற்பர் வியந்து! (3)

கன்னி குமரியாய்க், காமாட்சி மீனாட்சி
அன்னைஉயர் காசிவிசா லாட்சியாய்,-இன்னும்
பல்பேர்
அம்பிகையாய், மேல்மருவூர் ஆதி பராசக்தி,
இம்பர்உறை கின்றாள் இனிது! (4)

அன்னைபரா சக்தி அருள்வெள்ளம், மேல்மருவூர்
தன்னிற் பெருகிமிகத் தங்கியுளது;-என்னோ, நீர்
ஆங்கதில்வந்து ஆடிப் பருகித் திளையாமல்,
ஏங்கிமிக நிற்கின்றீர் இங்கு! (5)

துன்பங்கள் தீர்ப்பாள்! துயர்துடைப்பாள்! நோய்
ஒழிப்பாள்!
இன்பங்கள், செல்வங்கள் ஈந்தருள்வாள்!-
நன்றுயர்சீர்
ஆற்றல்மிகும் மேல்மருவூர் ஆதி பராசக்தி!
போற்றிப் பணிவோம் புகழ்ந்து! (6)

அருட்செல்வர் நல்லபங் காரு அடிகள்,
தெருட்பெருகு தேவிதிருவாயால்,-பொருட்பெருகும்
இன்மொழிகள் கூறுகின்றார்; மேல்மருவூர்க்கு ஏகி,
அன்பீர்!
நன்மைகள்பெற் றுய்க நயந்து. (7)

அருந்தவப்பங் காரு அடிகளார், தெய்வப்
பெருந்தகையார், மேலாம் பெருமை-பொருந்தினார்;
ஆங்கவர்பால் மேவி, அன்னை ஆதி பராசக்தி,
ஈங்குஅருள்செய் கின்றாள் இனிது! (8)

தெய்விகச் சித்தர்பலர் வாழும் திருத்தலமாய்,
மெய்யருள்சேர் மேல்மருவூர் மேவுகிற்பீர்!—
வையகத்தில்
அன்னைபரா சக்தி அருளாற் குடும்பநலம்
மன்னிமிக, வாழ்வீர் மகிழ்ந்து! (9)

மாட்சிமைகள் வாய்ந்தவள்! வல்லமைகள் மிக்கவள்!
காட்சிக்கு இனியள்! கலைவடிவள்!—ஆட்சி
உலகனைத்தும் செய்மருவூர் ஓம்சக்தி அன்னை,
நலம்அனைத்தும் ஈவாள் நமக்கு! (10)

மேல்மருவூர்க் கோயிலில் மேவி, நல்ஓம் சக்தி, தன்
பால்வருவோர்க் காத்தருள் பாலிக்கின்றாள்!—
சால்புநிறைந்து,
இவ்வுலகில் ஆன்மிகம்தான் ஓங்கிவெல்க!
எல்லோரும்
செவ்விதின் வாழ்க! செழித்து. (11)

தீவினைகள் போக்கிப் பிணிகளெலாம்
தீர்த்தொழித்துப்
பாவமெலாம் நீக்கும் பராசக்தி,-மேவிமிக
மேல்மருவூர்ப் போந்து விளங்குகின்றாள்!
இவ்வன்னை
பால்மருவி, வாழ்வீர் படர்ந்து! (12)

அன்பு செழிக்க! அறம் வளர்க! ஆன்மிகம்தான்
நன்கு தழைத்துயர்க! நாடனைத்தும்-இன்பமுற்று
ஓங்கி மிகவாழ்க! ஓம்சக்தி அன்னைஅருள்,
தீங்ககற்றிக் காக்க! நம்மைச் சேர்த்து! (13)

(வேறு)

அற்புதத் தெய்வம் இதனில்மற்று உண்டோ?
அதிசயம் அருட்டிறம் என்ன,
நற்பெருஞ் சிறப்பின் மேல்மருவூர் நண்ணிப்,
பங்காரு அடிகளார் நலத்தால்,
பொற்புறும் அன்பர் தொண்டுகள் புரிந்து
போற்றிட, அவர்க்கெலாம் வரங்கள்
பற்பல வழங்கும் பராசக்தி அம்மை,
பதமலர் பரவிநாம் வாழ்வாம்! (14)

(வெண்பா)

பேய்போம்! துயரம்போம்! பித்தம்போம்!
போகாத
நோய்போம்! மிடிபோம் நொடிப்பொழுதில்!-
தாய்போல
நன்னர்நமைக் காத்தருள்வாள்! நல்மருவூர்
ஓம்சக்தி
சந்நிதிக்குச் சென்றதுமே தான்! (15)

ஏழை பணக்காரர் என்னும் பிணக்கில்லை!
பாழும்பல் சாதிமதப் பண்பில்லை!-சூழும்அருள்
ஆதி பராசக்தி அன்னையின்நற் சந்நிதியில்,
யாதும் எவரும் இணை! (16)

சித்தி தரும்; புத்திதரும்; செல்வம்எல் லாம்தரும்;
பத்திதரும்; இன்பம் பலதரும்;-முத்திதரும்
ஆதி பராசக்தி, மேல்மருவூர் அன்னைஅருள்,
யாதுதராது, அன்பர்கட்கு இங்கு? (17)

ஒலிநலமாம் நாதத்தில் ஓங்கும்ஓம் சக்தி!
பலநலங்கள் நல்கும்பரா சக்தி!-கலியுகத்திற்
கண்கண்ட தெய்வமாய்க் காட்சி தருகின்றாள்!
பண்கொண்டு பாடீர்! பணிந்து. (18)

—O—

# திருமூலர் திருமந்திரச் செய்யுள்மணிகள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

## அளவு ஏது எமக்கு

வாழ்வும் மனைவியும் மக்களுடன் பிறந்து
ஆகும் அளவேது எமக்குஎன்பர் ஒண்பொருள்
மேவும் அதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவும் துணையொன்று கூடலும் ஆமே.

வாழ்க்கைத் துணையாகிய மனைவியும், மக்களும், உடன் பிறந்தார் முதலிய சுற்றத்தாரும், எமக்கு நீங்கள் தரப்போகும் பொருளின் அளவு எவ்வளவு? என்று கேட்பர். வேறு ஒன்றும் செய்ய மாட்டார். இங்ஙனம் பலரும் விரும்புகின்ற பொருளையே சேர்த்துக் கொண்டு, இறைவனின் திருவருளைப் பெற முயலாமல் இருப்பவர்களுக்கு, உயிர் உடலை விட்டுப் பிரியும் கலக்க நிலையில், இங்கே வா என்று கூவி அழைத்துக் கொள்ளும் ஆருயிர்த் துணையாகிய ஒப்பற்ற இறைவனின் அருள் நலத்தைப் பெறுதல் இயலுமோ?

நிலையாத செல்வத்தையே மிகப்பெரிதும் விரும்பிச் சேர்ப்பவர்கள், நிலைத்த செல்வமாகிய இறைவனின் திருவருளைப் பெறமாட்டார்கள்.

## விழியிலா மாந்தர்

கிழக்கெழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்;
குழக்கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்
விழக்கண்டும் தேறார் வியனுல கோரே!

காலையில் கிழக்கில் தோன்றிய சூரியன் நண்பகலில் இளமைத் தன்மை நீங்கிப் பின்னர் முதுமை எய்தி, மாலையில் மேற்குத் திசையில் விழுந்து மறைதலை, நாள்தோறும் கண்ணாரக் கண்டும், இளமை நிலையற்றது என்பதனை அறிவுக்கண் இல்லாதவர்கள் தெளிந்து கொள்வதில்லை. தம்வீட்டிலே பிறந்த பசுவின் இளங்கன்று, சில ஆண்டுகளில் காளைப் பருவம் நீங்கி முதுமை அடைந்த எருதாகிச் செயலற்று இறந்து போவதைக் கண்ட பின்னருங்கூட, இவ்வுலக மக்கள், தாமும் ஒரு காலத்தில் இளமை நீங்கி, முதுமை அடைந்து இறந்தொழிவோம் என்னும் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். அவர்களின் அறியாமை என்னே?

## கண்டும் அறிகிலார்

பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்;
ஞாலம் கடந்துஅண்டம் ஊடுஅறுத் தான்அடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே

பாலுண்ணுகின்ற பருவத்தினன், நடு வயதினனாகிய இளைஞன், முதிர்ந்த பருவத்தன் ஆகிய கிழவன், என்னும் பலவேறு பருவங்களாய் மனித வாழ்க்கை கழிதலைக் கண்டு கொண்டிருந்தும், இளமை நிலையற்றது என்பதனை அறிந்து கொள்ளும் ஆற்றலின்றிப் பெரும்பாலான மக்கள்உள்ளனர். இவ்வுலகைக் கடந்து, அண்டங்களையும் ஊடுருவிச் சென்று, என்றும் உளனாய் விளங்குகின்ற இறைவனின் திருவடியினைப் புகலாகப் பற்றிக் கொண்டு கிடக்கும் யானோ, மேன்மேலும் அத் திருவடியின் துணையையே விரும்பி, அதனையே துணையாகப் பற்றிக்கொண்டு இருக்கின்றேன்.

இதனால் நிலையாமையைக் கடத்தற்கு உரிய உபாயம் கூறப்பெற்றது.

## இறக்கின்றது கண்டும் ஏத்தார்

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்,
பிழைப்பின்றி எம்பெரு மான்அடி ஏத்தார்
அழைக்கின்ற போதுஅறி யார்அவர் தானே

தழைத்து வளருகின்ற தளிர்களையும், குளிர்ந்த மலர்களையும் உடைய, மரத்தின் கிளையில் கூடுகட்டி வாழ்கின்ற பறவைக் குஞ்சுகள் எல்லாம், அதனிடத்திலேயே நிலையாகத் தங்கிவிடாமல் காலம் வந்தபோது, வேற்றிடம் பினை விட்டுப்பிரிந்து செல்லுதலைக் கண்டிருந்தும், எம்பெருமானாகிய இறைவனின் திருவடிகளைப் போற்றி வழிபடாதவர்கள், கூற்றுவன் தம்மை அழைக்கவரும் காலத்தில், செய்வது இன்னதென்று அறியாமல் திகைத்து வருந்தும் அறிவிலிகளாவர்.

ஓர் உடம்பிலேயே தங்கி, என்றும் நீங்காமல் உயிர் நிலைத்திருப்பதில்லை.

## ஐவர்க்கு ஒருசெய்

ஐவர்க்கு ஒருசெய் விளைந்து கிடந்தது;
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்;
ஐவர்க்கும் நாயகன் ஓலை வருதலால்,
ஐவரும் அச்செய்யைக் காவல்விட்டாரே!

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களுக்கும், பொது வுரிமையான உடம்பாகிய ஒரு வயல், விளைந்து கிடந்தது. தமக்குரிய அவ்வயலை அவர்கள் ஐவரும், தத்தமக்கே உரியது என்று கருதிக் காத்து வருகின்றார்கள். அவ்வைந்து பேர்க்கும் தலைவனாகிய உயிர்க்கு, இயமனிடமிருந்து ஓலைவந்து உயிர் அதனைவிட்டுப் பிரிந்து சென்றமையால், ஐம்பொறிகளாகிய ஐவரும், உடம்பாகிய வயலைக் காக்கும் தொழிலைச் செய்ய முடியாமல் அதை விட்டு நீங்கினார்கள்.

உடம்பிலுள்ள பொறிகள் செயலற்று அழியும்படி, என்றேனும் ஒருநாள் உயிரானது உடம்பைவிட்டுப் பிரியும் என்பது திண்ணம்.

## அறங்கெட நில்லன்மின்

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்;
வெவ்வியர் ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்;
செவ்வியர் ஆகிச் சிறந்துண்ணும் போதுஒரு
தவ்விக்கொடு உண்மின், தலைப்பட்ட போதே!

பொறாமையால் கோணல் அறிவு உடைய சொற்களைப்பேசி, அறம்சிதைய நில்லாதீர்கள். கொடுமையுடைய நெஞ்சத்தினராய்ப் பிறர்க்கு உரிய பொருளைக் கவர எண்ணாதீர்கள். உயிர் உடம்பில் நிலைபெற்றிருக்கும் காலத்திலேயே செம்மை உடைய நெஞ்சத்தினராய், வாழ்க்கையிற் சிறந்து விளங்கி, உண்ணும் காலத்தில் ஓர் அகப்பை உணவாவது, நும்மை வந்து அடைந்தோர்க்குக் கொடுத்து உண்பீர்களாக!

## கொல்லாமை ஒண்மலர்

பற்றாய நற்குரு பூசைக்குப் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்;
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்,
உற்றுஆரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே

பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குப் பற்றுக் கோடாக உள்ள ஞானாசிரியனை வழிபடுவதற்கு உரிய பலவாகிய மலர்களுள்ளும், பிற உயிர்களைக் கொல்லாமை யாகிய அறமே ஒளியுடைய நன்மலர் மாலையாகும். உள்ளமாகிய தகழியின் ஞானச் சுடரே, அசைவற்ற திருவிளக்காகும். பொருந்தி நுகரும் நிவேதனம் உயிரேயாகும். பூசை கொண்டருளும் இறைவன் அமர்ந்தருளிய இடம், தலையின் உச்சியாகிய பிரமரந்திரம் ஆகும்.

இறைவழிபாட்டுக்குரிய எண்வகை மலர்களுள், கொல்லாமையறம் ஆகிய மலரே, மிகவும் சிறப்புடையது என்பது கருத்து.

## மலைவான பாதகம்

கொலையே களவு கள் காமம் பொய்கூறல்
மலைவான பாதகம் ஆம்;அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்துஇன்பம் சார்ந்தோர்க்கு,
இலையாம் இவை;ஞான ஆனந்தத்து இருத்தலே

கொலையும் களவும் கள்ளும் காமமும் பொய்கூறலும் ஆகிய இவை ஐந்தும், அஞ்சி நடுங்கத்தக்க பெரும் பாதகங்கள் ஆகும். அவற்றை நீக்கி, எல்லாவற்றுக்கும் மேலாகிய சிவபெருமானின் திருவடியை, உள்ளத்தாற் சார்ந்து வழிபட்டோர்க்கு, இவற்றான் வரும் துன்பங்கள் இல்லை. இறைவனது ஞானமாகிய சிவானந்தத்துள் திளைத்திருத்தல் ஆகிய பேரின்பம் உளதாகும்.

## இறைவனை ஏத்துமின்

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்று
அக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே!

பொழுது விடிகின்றது என்று சொல்லிக் கொண்டு, விடியற் காலம் தொடங்கியே ஒரு நாளும் நிரம்பாத வயிற்றுக் குழியினை நிரப்புவதற்காக, அரிய பண்டங்களைத் தேடுகின்ற மக்களே! நும்முடைய உழைப்பினால் எத்தகைய குழிகளை நிரப்பியாவது, இறைவனைப் போற்றி வழிபடுங்கள். அவ்வழிபாட்டினால் தான், உங்களுடைய மன மாசுகள் ஆகிய அழுக்குகள் அறவே நீங்கும். அந்நிலையில் தூராத வயிற்றுக்குழியும் எளிதில் தூர்ந்துவிடும்.

— — — —

—தொடரும்.

# பெரிய புராணம்

"மும்மொழிக் கொண்டல்"
திரு. பெ. திருஞானசம்பந்தன், M.A., L.T.

## காப்பிய இலக்கணம்

பெருங்காப்பிய இலக்கணத்திற்கேற்ப, மலைக்குக் கயிலையும், நாட்டிற்குச் சோழ நாடும், நகருக்குத் திருவாரூரும் நூலின் தொடக்கத்தில் வருணிக்கப்படுகின்றன. இவையன்றி அந்தந்த நாயனார் வரலாற்றலும் உரிய அளவு இவை வருணிக்கப்படுகின்றன. 'பருவம், இருசுடர்த்தோற்றம்' ஆகியன ஆங்காங்கே கவிநயத்துடன் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தடுத்தாட்கொண்ட புராணத்தில் 'தேமருதொடையன் மார்பன் திரு மணக் கோலங் காணக் காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயஞ்செய்தான்' எனவும், 'நறுமலர்க் கங்குல் நங்கை முன் கொண்ட புன்முறுவலென்ன முகிழ்த்தது வெண்ணிலா' என்றும் இருசுடர்த் தோற்றம் வருணிக்கப்பட்டுள்ளது. 'நன்மணம் புணர்தல்' சம்பந்தர், சுந்தரர் வரலாற்றிலும்; 'புனல் விளையாடல்' சேரமான் வரலாற்றிலும்; 'முடிகவித்தல்' கூற்றுவர் முதலானோர் வரலாறுகளிலும், 'புல்வி' சுந்தரர், திருநீலகண்டத்துக் குயவனார் வரலாறுகளிலும். 'மந்திரம்' மனுநீதிச் சோழன் வரலாற்றிலும் காணப்படுவன. 'தூது' சுந்தரர் வரலாற்றிலும், 'செலவு, இகல், வென்றி' முதலியன புகழ்ச்சோழர் முதலியோர் வரலாறுகளிலும் காணக்கூடும்.

பக்திச்சுவையும் வெவ்வேறு பாவங்களும் ஆங்காங்குப் பொலிவுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்பதைப் பிறிதோரிடத்தில் கூறியிருக்கின்றேன். சந்திகள் ஐந்தும் அவற்றின் உறுப்புகளும் பெரும்பாலும் நாடகங்களில் அமைக்கப் பெறுவன. ஒரே நாயகன் தொடக்கம் முதல் இறுதிவரை இடையறாது காட்சி தருகின்ற காப்பியத்தில் ஒருவாறு அவற்றைக் காண இயலுமேயன்றி, அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாற்றைக் கூறும் இக்காப்பியத்தில் காண முயல்வது பயனற்றது. சேக்கிழார் தமது புராண அமைப்பையும் சருக்கங்களின் தலைப்புகளையும்கூட 'நம்பியாண்டார் நம்பி, 'புந்தியாரப் புகன்ற வன்கயினால் வந்தவாறு வழாமல் இயம்புவாம்' என்று வரையறை செய்து கொண்டமையால் பெருங்காப்பியத்தின் இலக்கணங்களை இயன்ற அளவுதான் வகுத்துக் கொண்ட குறுக்கோளுக்குட்பட்டு அமைத்திருக்கிறார் என்று கொள்ளலாம்.

சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் நாற்பாயிரத்தின் முதற்பாட்டின் விளக்க உரையில், 'இது ஒரு பெருங்காப்பியம். அங்ஙனமின்றிப் பல சரிதங்கள் சேர்ந்த ஒரு கோவை எனச் சிலர் எண்ணுவர். அது சரியன்று. சுந்தர மூர்த்திகளைத் தலைவராகவும், பரவையார் சங்கிலியார் என்ற இருவரையும் தலைவியராகவும் கொண்டு, அவர்கள் கயிலையிலிருந்து ஒரு காரணம் பற்றிப் பூவுலகத்தில் அவதரித்து மணந்து உலகத்தார்க்கு அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் காட்டி உணர்த்தி உய்வித்து, மீண்டும் திருக்கயிலை சேர்ந்தார்கள் என்பது, காப்பியத்தின் உட்பொருள்' எனக் கூறியுள்ளார்.

## காப்பியத் தலைவன் ?

'ஒரு காவியத்தினுடைய நிறைவும் பொலிவும் எதில் அடங்கியிருக்கிறதென்றால், அதிலே போற்றப்படும் நாயகனின் மகாத்மியத்தில் தான்' என்பது ஆன்றோர் வாக்கு. 'செப்பலுற்ற பொருளின் சிறப்பினால், அப்பொருட் குரை யாவருங் கொள்வரால்' என்ற சேக்கிழார் வாக்கும் இதற்கு அரண் செய்வதாகும். ஒரு காப்பியத்தில் தலைசிறந்த ஒரு நாயகனே கவிஞனால் பெரும்பகுதியில் பாராட்டப் பெறுவது மரபாக இருக்கிறது. இராமாயணத்தில் இராமனும், சிலப்பதிகாரத்தில் கோவலனும், சாகுந்தலத்தில் துஷ்யந்தனும், சீவகசிந்தாமணியில் சீவகனும், யாதவாப்யுதயத்தில் கிருஷ்ணனும் நாயகனாக இருக்க, அவனையே பன்னிப் பன்னிப் பேசுகின்றன அக்காவியங்கள்.

திருத்தொண்டர் புராணத்திலோ எனில், தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் பிறப்பு முதல் திருத்தொண்டத் தொகைபாடி முடித்தவரை கூறி, பின்னர் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சுந்தரரது வாழ்க்கையைத் தொடர்ந்து கூறிச் செல்கிறார் ஆசிரியர். இடையில் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்திலும், இறுதியில் கழறிற்றறிவார் புராணத்திலும் சுந்தரர் வரலாற்றைக் கூற முடிக்கிறார். இராமன், கோவலன், துஷ்யந்தன், சீவகன், கிருஷ்ணன் போல நூல் முழுவதிலும் சுந்தரர் வரலாறு தொடர்ந்து கூறப்பெறவில்லை. மாறாக 63 தனியடியார்களும் 9 தொகையடியார்களும் போற்றப்படுகின்றனர். தொகையடியார்களை நீக்கினாலும் 63 தனியடியார்களைக் காப்பிய நாயகர்கள் என்று கூறுவது பொருந்துமாறில்லை. ஆகவே தண்டி, மகா காவியத்தின் இலக்கணத்தைக் கூறுமிடத்தில் தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் என்ற பகுதி இந்நூலுக்குப் பொருந்தாமையால் 'கூறிய உறுப்பிற் சில குறைந்தியலினும், வேறுபாடின்றென விளம்பினர் புலவர்' என்ற தண்டியின் சூத்திரத்தைக் கொண்டு ஒருவாறு அமைதி பெறலாம்.

## மெய்ப்பாடு

'நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக் கற்றோர் புனையும் பெற்றியதென்ப' என்ற தண்டியலங்காரச் சூத்திரப் பகுதியில் 'மிக்க சுவையும் பாவமும் உடைமையால் யாவரும் விரும்பும்படி, கவிஞரால் அலங்கரித்துப் பாடப் படுந்தன்மை உடையது பெருங்காப்பியம்' என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியர், 'நகையே அழுகை இளி வரல் மருட்கை, அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று, அப்பால் எட்டே மெய்ப் பாடென்ப' என்று மெய்ப்பாட்டியலில் கூறு வார். பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் 'சிருங் காரம், ஹாஸ்யம், கருணம், ரௌத்ரம், வீரம், பயானகம், பீபத்சம், அத்புதம்' என்ற எட்டும் ரசங்கள் என்பர். சாந்தமும் ஒன்பதாவது ரச மாகப் பரதரால் கொள்ளப்பட்டது என்பதில் கருத்து வேறுபாடு உண்டெனினும், அதை அபி நவகுப்தர் போன்ற வடமொழி அணிநூலார் பின்னர் ஏற்றுக்கொண்டுள்ளனர். தொல்காப் பியருக்குச் சாந்தரசம் உடன்பாடு என்பது மெய்ப்பாட்டியலில், 'ஆங்கவை ஒரு பாலாக ஒருபால், உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல், தன்மை அடக்கம் வரைதல் அன்பு' என்று கூறிச் செல்கின்றமையால் புலப்படும். மக்கள் முதலிய சுற்றத்தாரை அருளுதலாகிய அருளலும், உயர்ந்தோர்முன் அடங்கி ஒழுகும் ஒழுக்கமாகிய அடக்கமும், காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கமும், அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயமாகிற அன்பும் 'செம்பொன்னும் நவமணியும் உருள் பருக்கையுடன் ஒக்க'க் கருதிய வாகீசரின் சம நிலையாகிற நடுவுநிலையும், சேக்கிழார் நூலின் கண் விதந்தோதப் பெறும் அடியார்களின் மெய்ப்பாட்டு வகைகளாகக் கொள்ளுதல் கருதத்தக்கது.

எடுத்துக்காட்டாகப் புகழ்ச் சோழனார் வரலாற்றில் போரை வருணிக்கும்போது பெரு மிதம் புலப்பட, 'சூறை மாருதம் ஒத்தெதிர், ஏறு பாய்பரி வித்தகர், வேறு தலைப்பெய்து சீறி ஆவி செகுத்தனர்' என்று பாடியுள்ளார் ஆசிரியர். போரில் வெட்டுண்ட தலைகளுள் ஒன்று ஒருசிறு சடையை உடையதாக இருக்கக் கண்டார் சோழர். மனங் கலங்கிக் கண்ணீர் பெருக்கினார். அச்சமும் நாணமும் கொண்ட அரசனின் அவலநிலையைப் புலப்படுத்தும் வண்ணம் மெல்லிசை வண்ணத்தையும் ஏற்ற சீர்களையும் சேக்கிழார் அமைத்துப்பாடுகிறார்.

'கண்டபொழுதே நடுங்கி
மனங்கலங்கிக் கைதொழுது
புண்டரிகத் திருக்கண்ணீர்
பொழிந்திழியப் புரவலனார்''

பெருமிதத்தை உணர்த்தும் பகுதியில் அமைய வேண்டிய சொற்கோவை ஒருவகை. அச்சத் தையோ அவலத்தையோ உணர்த்த வேண்டிய போது அமையவேண்டியது வேறுவகை. இங்கே கவிஞன் பின்பற்ற வேண்டிய கொள்கை 'ஏற் புடைமை' (ஔசித்யம்) என்பதாகும். இது பெனடெட்டோ க்ரோஸ் கூறுகின்ற கொள்கை யோடு ஒக்கும். இதைச் சேக்கிழார் பின்பற்றி யிருக்கிறார்.

## யாப்பமைதி

இதைப்போன்று யாப்பமைதியிலும் ஏற்ற தொரு மாற்றத்தைத் தக்க இடத்தில் ஆசிரியர் செய்திருப்பதைத் திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எடுத்துக் காட்டியிருக் கிறார். 'நாட்டுச்சிறப்பை வருணிக்கும்போது 'தொழுது நாறு நடுவார் தொகுதியே' எனச் சிறு நாற்சீரியல் நட்ட நாற்று, 'மண்டு புனல் பரந்தவயல் வளர் முதலின் சுருள் விரிய' என்று பெருநாற்சீராய் உயிர் ஊன்றிச் 'சாலிநீள் வயலினோங்கித் தந்நிகரின்றி மிக்கு' என்று அறுசீராய் வளர்ந்து முற்றிய செய்யுள் யாப்பு அமைதியின் அழகு கண்டு களிகூரத்தக்கது.

''உணர்வைத் தட்டி எழுப்பும் ஆற்றல் எந்த நூலுக்கு இருக்கிறதோ அந்த நூல்தான் என்றும் மக்களை ஈர்க்கும் தகுதி உடையதும் இலக்கிய நயம் வாய்ந்ததும் ஆகும்'' என்றார் விஞ்செஸ்டர். மாதொரு பங்கனின் மலர்த் தாளிணையை என்றும் மறவாது அன்பிலே முளைத்த பக்தி வழியிலே பிறழாது நிலை நின்றவர்களது பக்தித் திறத்தைத் தித்திக்கும் செழுந்தமிழில் தந்த சேக்கிழாரின் அருள்நூல் என்றும் நின்று நிலவும் அத்தகைமையது.

## பத்திச்சுவை

பக்தி, வாத்சல்யம், சிநேகம் என்பவை கூட ரசம் அல்லது சுவை என்று கொள்ளத் தக்கன என்ற சில வடமொழி அணி நூலாரின் கூற்று ஏற்கப்படாது, ஒன்பது சுவைகளே கொள்ளத்தக்கன என்று அபிநவகுப்தர், ஜகந் நாத பண்டிதர், மம்மடபட்டர், முதலானோ ரால் வரையறை செய்யப்பட்டது. எனினும் பிற்காலத்தே 'பகவத் பக்தி சுதார்ணவம்' என்ற நூலை இயற்றிய வங்காள வைணவ பக்தரான ரூபகோசுவாமி, பக்தியும் சுவையும் என்று சுவைக்குரிய இலக்கணம், உறுப்புகள் எல்லாவற்றையும் கூறி நிறுவினார். 'பகவத் பக்தி ரசாயனம்' என்ற நூலை இயற்றிய அத்வைதியாகிற மதுசூதன சரஸ்வதியும் 'மின் மினியொத்த அழுகையும் வெகுளியும் சுவை எனப் பெற்றால், சூரியன் போன்ற பக்தியைச் சுவை எனக் கொள்வதில் தடை என்ன? என்று வினவினார். ஒரு மனிதனோ பொருளோ அச்சம் வெகுளி முதலான உணர்வுகளை எழுப்புவதால் சுவை என்று கொள்ளப்படு மானால், பரமானந்த சொரூபனான இறைவன் சிந்தையிலே சிவத்தைத் தேக்கியுள்ள அடி யாரின் உள்ளத்தில் பிரதிபிம்பிக்கும்போது எழுகின்ற ஆனந்த உணர்வைச் சுவை எனக் கூறுவதில் என்ன தடை? இக்கருத்தும் நம் சிந்தனைக்குரியது.

இவ்வடியார்களுள் இந்நூலின் வாயிலாக நாம் அறிந்த தமிழ் வல்லோர் சிலரே. ஞான சம்பந்தர், அப்பர், காரைக்கால் அம்மையார் ஆகியோர் இயற்றமிழும் இசைத்தமிழும் வல்ல வர்கள். திருநாளைப்போவார், ஆனாயர், திருநீலகண்டயாழ்ப்பாணர். பரமனையே பாடுவார் ஆகியோர் இசைத் தமிழ் வல்ல வர்கள்; ஐயடிகள் காடவர்கோன், திருமூலர், காரியார், கழறிற்றவார், பொய்யடிமை இல்லாத புலவர் ஆகியோர் இயற்றமிழ் வல்ல வர்கள். அறுபத்து மூவரில் பதின்மரே தமிழ் மொழி வல்லவர்கள் என்பதை நோக்க, வீடு பேறு அடைவதற்குப் புலமையிலும் மிக்கது பக்தி உணர்வே என்பதை நாம் கொள்ளலாம்.

## அணிநலம்

இனி அணிகள் இந்நூலில் எங்ஙனம் புனையப் பெற்றுள்ளன என்பதை ஆராய் வோம். இதனையே தொல்காப்பியர் விதந்து ஒரு இயலில் கூறியிருக்கிறார். உவமை வாயிலாக ஒரு பொருளை விளக்க முற்படும்போது, இயல்பாக அனைவரும் அறிந்த ஒன்றையே உவமான மாகக் கொள்வது வழக்கம். 'பவளம் போன்ற செந்துவர் வாய்' என்றும், 'முத்தன்ன வெண் ணகை' என்றும் உவமித்தல் மரபு. 'சிறந்த உவமை, பொருளின் தன்மையை விளக்குவ தோடு, அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும்' என்கிறார் ஜான்சன். இத்தகைய உவமைகள் பல சேக்கிழாரால் ஆளப்பட்டுள்ளன. பக்தியில் தோய்ந்த உள்ளத்தினர் ஆதலால் இவர் ஆளும் அணிகளும் பக்திச் சுவையோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

எடுத்துக் காட்டாக நாட்டுச் சிறப்புக் கூறும் பகுதியில் 'சாலிநீள் வயலினோங்கி' என்று தொடங்கும் பாடலில் 'இறைவனுக்கு அன்பர்களுடைய நீர்மையுடைய மனம் போலவே நெற்கதிர்கள் எல்லாம் அலர்ந்தன' என்று உவமையை அமைத்திருக்கிறார். இளையான்குடி மாறநாயனார் வரலாற்றில் 'குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப் பழிமுதல் பறிப்பார் போலப்பறித்த வை கறிக்கு நல்க' என்ற வரிகளில் சிறு பயிர்களைப் பாச முதலாகிய ஆணவ மலத்தோடு ஒப் பிட்டுக் கூறியுள்ளதைப் பார்க்கிறோம்.

சுந்தரர் பரவையார் சந்திப்பிற்குப் பின், ஆசிரியர் சிறுபொழுதாகிற மாலை நேரத்தில் இருள் சூழ்வதையும், பின்னர் நிலவு பரவு வதையும் வருணிக்க எண்ணும்பொழுது சேக் கிழாரின் சிந்தையில் அஞ்செழுத்தும் வெண் ணீறும் தோன்றுகின்றன. 'அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் நெஞ்சமென்ன இருண் டது நீண்டவான்' என்றும், 'அண்ணல் வெண் ணீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா' என் றும் சிவச் சின்னங்களோடு ஒப்பிட்டுக் கூறு வதைப் பார்க்கிறோம்.

திருநாவுக்கரசர் தோன்றிய திருமுனைப் பாடி நாடு மருத நிலத்தைச் சார்ந்தது. அங்கே மிகுந்துள்ள வாழைக் குலைகளும் செந்நெல்லும் பெருஞ்சகடும் வினைஞரும் முறையே யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகியவற்றின் தோற்றத்தையே நமக்குத் தருகின்றன என்று 'கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட' என்று தொடங்கும் பாடலில் அழகாக உரு வகப்படுத்திக் காட்டுகிறார் சேக்கிழார்.

அரத்துறை ஈசன் ஞானசம்பந்தருக்கு முத்துச்சிவிகை அளிக்கிறார். கதிரவன் ஞான சம்பந்தரைச் சிவிகை மேல் ஏற்றிடப்போலும் தேரில் எழுந்தருளுகின்றான் என்று தற்குறிப் பேற்ற அணியைப் 'போதஞானப் புகலிப் புனிதரை' என்று தொடங்கும் பாடலில் சேக் கிழார் அமைக்கிறார்.

பரவையாரின் தளர்நடைப் பருவத்தை வருணிக்கின்ற கவிஞர் அதைப் பல உவமானப் பொருள்களின் வாயிலாகப் பல கோணங்களில் நின்று கண்டு காட்டுகிறார்.

''மானிளம் பிணையோ, தெய்வ
வளரிள முகையோ? வாசத்
தேனிளம் பதமோ? வேலைத்
திரை இளம் பவள வல்லிக்
கானிளம் கொடியோ? திங்கட்
கதிரிளங் கொழுந்தோ? காமன்
தானிளம் பருவம் கற்கும்
தனிஇளந் தனுவோ என்ன''

'ஒரு பொருட்கு உவமச்சொல் தொகக்கவர்த்த பொருவமர் பொருள் பல புணர்ப்பது உல் லேகம்' என்பார் மாறனார். மேலே கூறப் பட்ட அணிகள் புனைந்துரை (வக்ரோக்தி) எனப்படுவன.

'தன்மை' என்பது உள்ளதை உள்ளவாறு கூறுதல். 'எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது தன்மை' என்று இதற்கு இலக்கணம் கூறுவர். இதை வடமொழி அணிநூலார் வக்ரோக்தியினின்றும் மாறுபட்ட 'சுவபாவோக்தி' என்பர். இவை இரண்டும் முறையே ஓவியமும் நிழற்படமும் போல்வன. கண்ணப்பர் வாழும் உடுப்பூரில் 'அன்புறு காதல் கூர அணையுமான் பிணை களோடும், இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும்' என்றும், அதிபத்த நாயனார் வரலாற்றில்'புயலளப்பன எனவலைபுறம்பணை குரம்பை, அயலளப்பன மீன் விலைப் பசும் பொனின் அடுக்கல்' என்றும்,சேக்கிழார்வேட்டு வர், மீனவர் ஆகியோரின் இயல்பான செயல் களைச் சித்தரிப்பதைப் பார்க்கிறோம். தடுத் தாட் கொண்ட புராணத்தில் முதிய வேதிய ராக வரும் இறைவனின் திருக்கோலத்தைக் 'கண்ணிடைக் கரந்த கதிர்..' என்று தொடங்கி வரும் மூன்று பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

மடக்கு என்னும் சொல்லணியைச் சீராக ஆண்டாலும் சிறப்புடன் ஆண்டிருக் கிறார் சேக்கிழார். சுந்தரருக்கு அருகில்உள்ள வர் 'பரவையார் யார்?' என்பதை அறிமுகப்

படுத்துகின்றார். சுந்தரருடைய உள்ளம் அப்பெயரை ஏழு முறை உள்ளுகிறது. ஆனால் ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருள் தருகின்ற வகையில் சேக்கிழார் பாடலை அமைத்துள்ளார்.

பேர்பரவை பெண்மையினில்
பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும்
மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள்
திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட
என்ஆசை எழுபரவை

'பரவை' என்ற சொல்லைத் தனித்தும் பிரித்தும் அயற்சொல்லோடு புணர்த்தும் எழு வகைப் பொருளை ஏற்றமுடன் அமைத்துக் காட்டுகிறார். முதலாவதாகத் தலைவனுக்குத் தலைவியின் பெயரைக் கேட்டதும் நிகழ்கின்ற உள்ளக் கிளர்ச்சியாகும் அகப் பொருள் உண்மையைப் 'பரவை' என்ற நங்கையின் பெயராக அமைக்கிறார். அடுத்து 'உம்பர் அவை' தேவர் சபை, பரவு ஐ-துதிக்கத்தக்க தெய்வம், அரும்பர் அவை-முல்லை அரும்புகள், பரவுஐ-விரும்பும் அழகினள், பரவை-பரவுதல், பரவை கடல் என்று பொருள் கொண்டு, முடிவில் 'எழு பரவை' என்னும்போது ஏழாவது முறையையும் சுட்டி இரட்டுற மொழிந்து முடிக்கிறார். இப்பாடலில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தாம் இயற்றியசேக்கிழார்பிள்ளைத்தமிழில் கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தினாற் போன்ற அருஞ்செயலைத் திருவள்ளுவர் செய்ததுபோல அவர் வழிவந்த பெரும்புலவரான சேக்கிழாரும் எப்படி ஒரு தூக்கில் ஏழு கடலை(பரவை) நிறுத்துள்ளார் என்று வியந்து, 'முறையின் ஒரு சிறு தூக்கின் எழு பரவையும் புக முடித்துற நிறுத்தானிவன் மொழி எங்கள் தம்பிரான் வல்லபம் உணர்ந்திலை கொல்' என்று போற்றியிருக்கிறார்.

## செய்யுள் நெறி

இச் சொல்லணியைப் 'பண்டருவிபஞ்சியெங்கும் பாதசெம்பஞ்சி யெங்கும்' என்று தொடங்கும் நாட்டுச் சிறப்புப் பாடலிலும் காண்கிறோம். இத்தகைய பாடல்களில் உள்ள ஒலிநயம் உடலைப் போன்றது. அவற்றுள் பொதிந்துள்ள கற்பனை உணர்வே உயிர். ஒலி செவிப்புலனை ஒட்டியது. உணர்வு இதயத்தைத் தொடுவது. தொடக்கத்தில் மனிதன் கனி மலர்களை முகர்ந்து மகிழ்ந்தான். பிறகு மாலையாகக் கட்டிச் செயற்கையில் மகிழ்ந்தான். இளங்கோ கண்ணகியின் கற்பை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்னும் குறிக்கோளுடன் ஏற்ற தொடர்நிலைச் செய்யுளை உருவாக்கினான். ஒரே வகையான நடையும் ஓசையும் உடைய ஆசிரியப்பாவில் வெவ்வேறு வகையான உணர்ச்சிகளை அமைப்பதில் எவ்வளவோ தடை உண்டு என்பதைஇடைக்காலப் புலவர்கள் உணர்ந்தார்கள். விருத்தம் என்பது வெவ்வேறு வகை நடையும் வகைவகையான ஓசையும் அமைந்து மாறிமாறி வரக்கூடியதாக இருத்தலைக் கண்டு, அதைப் போற்றத் தொடங்கினார்கள் என்று கூறுகிறார் மு. வரதராசனார். அத்தகையோருள் ஒருவர் சேக்கிழார்.

செய்யுள் இயற்றும் புலவர்கள் பின்பற்றும் நெறிகளுள் வைதருப்பம் கௌடம் ஆகிய இரண்டும் தண்டியாற் குறிக்கப்பட்டுள்ளன. கம்பன், காளிதாசன் போன்ற பெரும்புலவர்களைப் போன்றே சேக்கிழாரும் வைதருப்ப நெறியைப் பின்பற்றியுள்ளார். செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்று பத்துக் காப்பியக் குணங்கள் வடமொழித் தண்டி ஆசிரியராலும் குறிக்கப்பட்டபோதும், மம்மடர், தெளிவு இன்பம் வலி ஆகிய மூன்றைமட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளார். அணிகளைக் காட்டிலும் குணம் அல்லது பண்பு எப்படி ஒரு மனிதனுக்கு இன்றியமையாதவையோ அப்படிக் காப்பியத்திற்கும் குணங்கள் இன்றியமையாதன. தெளிவெனப்படும் பிரசாதமும், இன்பம் என்னும் மாதுர்யமும், வலி என்னும் ஓஜசும் இந்நூலின் பல இடங்களிலும் ஏற்றவகையில் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம். 'தெளிவை' நூல் முழுதும் காணலாம். 'இன்ப'த்தைச் சிறப்பாகத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் அகத்திணைப் பகுதியில் காணலாம். 'வலிமை' பெருமிதம் பேசப்படும் இடத்தில் சிறப்பாகக் காணலாம்.

காவியத்தை எழுதப்புகும் ஒருவர், மொழி இலக்கணம், யாப்பு, சொற்பொருள், ஆளும் திறன், வழி வழி வழங்கிவரும் முன்னோர் சரித்திரம், பழங்கதை, உலகியல் ஒழுகலாறு, யுக்தி, கலைகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும் என்பார் பாமகர் தனது அலங்கார நூலில். இவை அனைத்தும்கைவரப் பெற்றவர் சேக்கிழார் என்பது நன்கு புலனாகும்.

எடுத்துக்காட்டாக, தடுத்தாட்கொண்ட புராணத்துள் 'பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா' என்று தொடங்கும் இந்தளப் பண்ணில் அமைந்த சுந்தரர் பாடலைக் குறிப்பிட நேர்ந்தபோது, அதே இந்தளப் பண்ணில் 'கொத்தார் மலர்க்குழலாள் ஒரு கூறாய் அடியவர்பால்' என்று சேக்கிழார் பாடலைப் பாடுகிறார். இதுபோலவே, குழலிசை இலக்கணத்தை ஆனாயர் வரலாற்றிலும், யாழிசை இலக்கணத்தைத் திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாற்றிலும் காணலாம். இசைத்தமிழே யன்றி நாடகத்தமிழையும் திறம்படக் கையாள வல்லவர் என்பதை அமர்நீதி நாயனார் புராணத்தில் பார்க்கிறோம். இழந்த கோவணத்திற்கு ஈடாக நாயனார் விலை உயர்ந்த துகிலையும் பொருளையும் தருவதாகப் பயந்தும் நயந்தும் கூறுகின்ற சொற்களிலும், சினங்கொண்ட வேதியராக வந்த சிவபெருமான் வீசுகின்ற கைதவச்

சொற்களிலும், இருவரின் மெய்ப்பாடுகளும் செயல்களும் அரங்கில் இக்காட்சியைக் காண்பது போன்ற உணர்வை நம்மிடை உண்டாக்குகின்றன. தடுத்தாட் கொண்ட புராணத்திலும் நாடகத் தமிழ் மிகச் சிறப்பாகப் புலவர் நாவில் நடமாடுவதைப் பார்க்கலாம்.

## கதை மாற்றம்

தாம் கொண்டுள்ள குறிக்கோளுக்கேற்பவும், காவிய நலத்திற்கேற்பவும், முதல் நூற்கதையை ஏற்ற வகையில் மாற்ற, கவிஞர்களுக்கு உரிமை உண்டு. கம்பன் வால்மீகியின் கதையும் காளிதாசன் மகாபாரதம், பத்மபுராணம் போன்றவற்றுள் உள்ள கதைகளையும், தத்தம் காவிய அமைப்புக்கேற்ப மாற்றியுள்ளனர். சேக்கிழார் செயற்கரிய செய்த அடியார்களின் அன்பின் திறத்தையும், அரன் பெருமைகளையும் காவிய அமைப்பிலே வைத்துக் காட்ட எண்ணியவர் ஆதலால் ஆங்காங்குச் சில மாற்றங்களைச் செய்திருக்கக்கூடும். சிவாபராதத்தை எண்ணிக்கூடப் பார்க்க ஒருப்படாத உள்ளம் படைத்த சேக்கிழார், சண்டேசர் வரலாற்றைக் கூறுகிறபோது திருத்தொண்டத்தொகையில் ஒரு மாற்றத்தைச் செய்திருப்பதைக் காண்கிறோம். ‘மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க வெகுண்டெழுந்த தாதையை மழுவினால் எறிந்த-அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்’ என்ற திருத்தொண்டத் தொகை வாக்கையொட்டி, சுந்தரர் திருப்புன்கூர்த் தேவாரத்தில் ‘கோதனங்களின் பால் கறந்து ஆட்டக் கோல வெண்மணற் சிவன் தன்மேற் சென்ற-தாதை தாளற எறிந்த சண்டி’ என்று கூற, சேக்கிழார் எச்சதத்தன் லிங்கத்தைக் காலால் இடறினான் என்று சொல்ல ஒருப்படாத மனத்தினராய் ‘மறையோன் மிகச் செயிர்த்து வைத்த திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தினான்’ என்று பாடுகிறார்.

## காப்பியப் பயன்

காப்பியத்தின் பயன் கவிஞனுக்குப் புகழையோ, பொருளையோ அளிப்பதாகவோ, தீமையை விலக்குவதாகவோ இருக்கலாம். காவியத்தைப் பயில்வோருக்கு அறிவையும் மேலான இன்பத்தையும் தரும்.

பெரியபுராணம் என்னும் இம்மாக்கதை சேக்கிழாருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்துள்ளது என்பது, இன்றும் நாம் அவர் புகழைப் பேசுவதினின்றே புலனாகும். சந்தானாசாரியரான உமாபதி சிவமும், மாதவச்சிவஞான யோகிகளும், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் மேலும் பலரும் அவர் புகழைப் பாடியிருப்பது சான்று. காளிதாசன், மில்ட்டன், இளங்கோ போன்ற புகழ்மிக்க கவிஞர் வரிசையிலே ஒருங்கு வைத்து எண்ணத்தக்கவர் தொண்டர் சீர் பரவிய சேக்கிழார். செம்மையேயாய சிவநெறிக்கண் சிறந்து விளங்கிய சீர்மையராதலால் தீமை இவரை அணுகியிருத்தல் இயலாது. அரன் நாமம் இவர் உள்ளும் புறமும் சூழ்ந்திருந்தமையால் தீயவை ஆழ்ந்தகன்றன என்பதே பொருந்தும். இந்நூலைப் படிப்போருக்கு வாலறிவனைப் பற்றிய மெய்யுணர்வு பெருகும் என்பதில் ஐயமில்லை. ஒரு நூல் உள்ளத்திலிருந்து வருமாயின் அது மற்ற உள்ளங்களையும் எளிதிற் சென்று பற்றிக் கொள்ளும் திறம் பெற்றதாக இருக்கும் என்பார் தாமஸ் கார்லைல். இது, சேக்கிழார் இந்நூலை அரங்கேற்றியபோதே நிகழ்ந்தது என்பதை, ‘சேவையர் காவலர் நாவலர் இன்புற நாவாரச் சொன்மழை பெய்தனர்; உருகிய நெஞ்சோடு கண்மழை அன்பர்கள் பொழிந்தார்கள்’ என்ற உமாபதி சிவத்தின் வாக்காலும், ‘நெஞ்சம் கனியக் கனியக் கண்ணீர் வாரக் கவிபாடிய இறைவ’ என்று மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும் கூறியதினின்றும் விளங்கும். இன்றும் இந்நூலை மெய்யன்போடு ஓதுவார் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பக்தி வெள்ளத்தில் திளைத்தலைப் பார்க்கிறோம்.

கவிஞனோடு ஒன்றிய மனநிலை உடையவனை. ‘சஹ்ருதயன்’ என்று வடநூலார் கூறுவர். ‘உணர்ச்சி வாயில் உணர்வோர்வலித்தே’ என்ற கூற்றுக்கிணங்க, கலைநலப் பொருளியல்புகளைச் சுவைத்துணரும் திறம் பெற்ற சகிருதயர்களுக்கே சிறந்த கவிதையின் சொற்பொருள் சுவைத் திறங்கள் புலனாகக் கூடியன. நீல்சன் என்பவர் தம் நூலில் ‘நாம் காணும் இவ்வுலகம் விஞ்ஞானம், சரிதம் என்ற இவ்விரண்டாலும் அளந்து காண்டற்குரியது. ஆனால் கலைஞனுடைய உலகம் இந்த அளவுகோல்களுள் அடங்காத ஒன்று. அவனாக வேண்டுமென்று ஒரு உலகைப் படைத்துக் கொள்ளலாம். அவை நம்மால் நம்ப முடியாதவையாக இருக்கலாம். அவனாக ஏற்படுத்திக் கொண்ட சட்டதிட்டங்கட்கு உட்பட்டுச் செல்லுகிற வரையில் அவன் எந்தப்பொருளை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்’ என்பார்.

தலைசிறந்த சாஹித்ய நூலாசிரியரான ஆனந்தவர்த்தனரும் ‘எல்லையற்ற காவிய உலகைப் படைப்பதில் கவிஞன் தனித்ததொரு படைப்புக் கருத்தா ஆவான். எவ்வண்ணம் அவ்வுலகு அமைய வேண்டுமென்று அவன் விரும்புகிறானோ அவ்வண்ணமே அவன் படைக்கும் உரிமை பெற்றவன்’ என்கிறார்.

இந்தப் பின்னணியில் சேக்கிழார் நூலை அவர் சொல்லில் ஒன்றிக் காண்பவருக்குக் கவி இன்பம்கிட்டுவது உறுதி; அநுபவ நிலையில் அடிமனத்தே காண்போருக்குப் பேரின்பம் கிட்டுவதும் உறுதி.

இத்தகைய திருத்தொண்டர் புராணம் என்னும் பெருங் காப்பியம் இலக்கிய ஊற்றாகவும் அன்புக் கடலாகவும், பக்திப் பெருவெள்ளமாகவும், சொல்லோவியக் கூடமாகவும், பல்கலைக்கும் உறைவிடமாகவும் நாம் கண்டு உணர்ந்து மகிழத்தக்கது.

**

# திருமூல யோகம்

''கவியோகி - மகரிஷி''
தவத்திரு. சுத்தானந்த பாரதியார், சிவகங்கை.

## யோகம் என்றால் என்ன?

யோகம் என்றால் ஓகம் அல்லது உகுதல் என்பதாம். உகுதல் என்றால் பொருந்துதல்; ஒன்றாதல். எது எதனுடன் பொருந்தல்? உயிரும் உடலும் ஒன்றானால் வாழ்வு; பிரிந்து இரண்டானால் சாவு. இரண்டையும் இணைப்பது மனம். மனம் உள்ளே பொருந்தாது கண்டபடி திரிந்தால் அமைதி கெடும். வாழ்வு அல்லற்படும். மனம் உள்ளே பொருந்தி ஐம்புலன்களையும் இருத்திப் பிடித்தால் அமைதி நிலைக்கும். இதையே வள்ளுவர்,

> ஒருமையுள் ஆமைபோல்
> ஐந்தடக்கல் ஆற்றின்
> எழுமையும் ஏமாப் புடைத்து

என்றார். இங்கே ஒருமை எழுமை என்று இரண்டு செயல்கள் உள்ளன. மனம் பொறி புலன்களை அடக்கி ஒன்றுபட்டால், ஏமாப்பு இன்பம் உண்டாகும். மனம் ஐந்தும் அடங்காமல் புறத்தே திரிந்தால் துன்புறும். பொறி புலன் மனம் நுண்ணிதாகி, அகலிடமான (திருப்பெருந்துறை) வித்தியா தத்துவத்திலே கூடுகிறது. இஃது அறிவு மண்டலம், இதற்குமேல் சிவதத்துவம் உள்ளது. வித்தியா தத்துவங்கள், காலம் நியதி கலை அராகம் வித்தை புருடன் மாயை இவைகள் ஆகும். இவை அறிவு மண்டலம். சிவத்தத்துவம் ஐந்து சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சக்தி சிவம். ஆக நமது அகக் கருவிகள் 36 ஆகும். இவற்றையே இலிங்க வடிவாக வணங்கினர் சிவநேயர். மாணிக்க வாசகர் ''இன்றெனக்கருளி'' என்ற அரிய திருவாசகத்தில் 'எழுகின்ற ஞாயிறு' என்பது சிவ தத்துவமாம். திருப்பெருந்துறை வித்தியா தத்துவம். அதன்கீழேயுள்ள முக்கோணவடிவம் ஆன்ம தத்துவம்.

> மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
> மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
> மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
> மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே

என்ற திருமந்திரமே பூரணமாக சிவயோக தத்துவமாகும். அகத்தத்துவம் 36, புறத்தத்துவம் 60. இது ஐம்பூதங்களையும் உடலியக்கத்தையும் சார்ந்ததாகும்.

1. மண்ணியல்பு :
   நரம்பு, எலும்பு, தசை, தோல், மயிர்
2. தண்ணியல்பு :
   மூளை, கொழுப்பு, விந்து, இரத்தம், நீர்
3. காற்றியல்பு :
   இருத்தல், கிடத்தல், நிற்றல், நடத்தல் ஓடுதல்.
4. தீயியல்பு :
   ஊண், உறக்கம், பயம், புணர்ச்சி, சோம்பல்.
5. ஆகாய இயல்பு :
   காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம்.
6. பத்து நாடிகள் :
   இடா, பிங்கலாசு, ழும்னா, காந்தாரி, ஹஸ்தி, சுயம்பூஷா, ஜிஹ்வா, பூஷா, குகு, சங்கிலி.
7. பத்து வாயுக்கள் :
   பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.
8. மூன்று ஆசைகள் :
   பெண், மண், பொன் ஆசைகள்.
9. நான்கு வாக்குகள் :
   பரா, பச்யந்தி, மத்திமை, வைகரி.
10. ஐந்து வசனாதிகள் :
    வசனம் (சொலல்) செல்லல், தானம், விடுதல், இன்பம்.
11. முக்குணங்கள் :
    சத்துவம், ராஜதம், தாமதம்.

அறுபது புறத் தத்துவங்களும், முப்பத்தாறு அகத் தத்துவங்களும் சேர்ந்து 96 ஆகும். முழுத் தத்துவங்களையும் பயிற்றி ஆணும் பெண்ணும் நிறைவான சிவசக்தி மயமாக வாழும் அற்புத பூரணயோக சாதனத்தை விரிவாக 3000 பாடல்களில் திட்பநுட்பமாக விளக்குவது திருமந்திரமேயாகும். திருமந்திரம் சன்மார்க்கப் பகுதியை முதற் பாகமாக வெளியிட்டாம். அது பல பதிப்புகளானது. அடுத்த பகுதி திருமூலயோகம் அல்லது சிவயோகமாகும். மூன்றாவது பகுதி சைவசித்தாந்தம் ஆகும்.

திருமந்திரத்தின் திட்பநுட்பமான சிறந்த பொருளை, நான் சிறுவயது முதல் ஆராய்ந்து வந்தேன். திரு.வி.கலியாணசுந்தர முதலியார், மறைமலை அடிகள், கோ. வடிவேலுசெட்டியார், வி.வி. இரமணசாஸ்திரியார், தெய்வ சிகாமணிப் புலவர் ஆகிய அறிஞருடன் அராய்ந்தேன். உள்ளடங்கி நிட்டைகூடி, துரியசமாதியிலும் ஆராய்ந்தேன். உள்ளே செல்லச் செல்ல உண்மை யறிவின்பச் செல்வம் நிறைவுறக் கிடைத்தது.

> மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
> கைத்தவம் சேர்தரு நெல்லிக்கனி ஒக்கும்
> சுத்தனை, தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
> அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே

இந்தப் பேறு எனக்கு எய்தியது. எங்கெங்கோ சுற்றித் திரிந்து அறிவைச் சேர்த்து, எழுதிக் குவித்து, எவரெவரிடமோ இணைந்து கற்று ,முடிவில் இப்போது சோழபுரத்தில் (சிவ கங்கைக்கு அருகே) தனி மோனத் தவத்தில் ஆழ்ந்து, நான் எழுதிய எல்லா நூல்களையும் திருத்தமாகச் செப்பனிட்டு என் இறுதி நாட்களைப் பயனுறச் செய்கிறேன். தமிழக முதல் அமைச்சருக்கு நன்றி. எனக்கு ரூ. 500 உதவி தருகின்றார். ஆராய்ச்சி கட்டுக் கட்டாகக் குவிந்துள்ளது. அனைத்தையும் வடிகட்டி மூலர் கண்ட சிவயோக சாதனத்தை இங்கே தமிழருக்குத் தெளிவாகச் சொல்லுகிறேன். சைவ சமயம் சிறந்த உலகத் திருநெறி. சரியைகிரியை யோகம், ஞானம், நான்கும் இணைந்தது. அதற்குத் திருக்குறள், திருவாசகம், திருமந்திரம், திருத்தொண்டர் புராணம் இவை நான்கும் கருவூலங்கள். இவையனைத்தும் ஆராய்ந்து மூலயோகத்தைச் செப்பனிட்டு நான் அரவிந்தா சிரமத்தில் 25 ஆண்டுகள் மௌனத் தவம் புரிந்தபோது, மறைமலையடிகளுக்கு அனுப்பினேன். அவர் இளவழகனாரை அரவிந்த ஆசிரமத்திற்கு அனுப்பி, எனது கைப்பிரதியை வரவழைத்துப் பார்த்து மகிழ்வுரை எழுதி நூலை வெளியிட ஊக்கினார்.

## மறைமலையடிகள் மகிழ்வுரை

''திருமந்திர விளக்கம் மிகமிக அரியநூல். முதற்பகுதி சன்மார்க்கம் கண்டு மகிழ்ந்தேன். திரு.வி.க. என்னிடம் காட்டினார். இப்போது திருமூலயோகம், இளவழகனார் தவயோகி சுத்தானந்தபாரதியாரிடமிருந்து வாங்கிவந்தார். ஆழ்ந்து படித்து மகிழ்ந்தேன். சுத்தானந்தயோகி திருமந்திரத்தைப் படித்தறிந்தவர், உள்ளே பயின்றறிந்தவர், நீண்ட மௌன தவத்தாலே உள்ளே கண்டு தெளிந்த உண்மையையுலகிற்குத் தருகிறார். அனைவரும் இதைக் கற்று நின்று களிப்புற வேண்டுகிறேன்.

திருமூலர் விளக்குவது நவதந்திரயோகம். பெரும்பாலான யோகநூல்கள் இருக்கை, மூச்சொழுங்கு, மனங் குவிதல், உள்ளத்தெளிவு, இவைகளையே விளக்கும். சுத்தாநந்த யோகியின் திருமூலயோகம், வேதாகம சித்தாந்த மரபுகளை நுட்பமாக விளக்குகிறது. ஆதார சித்தி, சித்தாந்தசித்தி, கேசரியோகம், பரியங்க யோகம், ஆதாரஆதேயம்,சத்திநிபாதம், நிறைவாற்றல், விந்துவெற்றி, இலிங்கதத்துவம், சிவசக்தி, வாழ்க்கை மரபுகளை இந்நூல் மிகத் தெளிவாக விளக்குகிறது. சுத்தானந்த பாரதியார் சைவசித்தாந்த நுட்பங்களைக் கற்று நின்று, திருமூலர் பயிற்சிமுறைகளை உற்று உணர்ந்தறிந்து, உலகுக்கு விளக்கும் பெற்றி, வெற்றி பெறும். எல்லாரும் இந்நூலை நுட்பமாக ஆய்ந்து சிவசக்தி பொலிய வாழ்க''

இல்லறத் துறவியான சிவயோகி மறைமலையடிகள் நல்லுரை,என்னை மிகவும் ஊக்கியது. மீண்டும் திருமூலயோகத்தை நுனித்துச் செப்பனிட்டு, என் அருமை அன்பர் திருக்கோவில் முருகவேளிடம் வெளியிடத் தருகிறேன். தமிழர் கற்று நின்று பயன் பெறுக. Siva Yoga என்ற மிகப் பெருநூலை ஆங்கிலத்திலே எழுத எழுச்சி பிறந்துள்ளது. அதில் விரிவாக சாதன முறைகளை விளக்குவேன். இனி நூலிற் புகுவோம்.

## 2. மூலயோகி :

திருமூலர் கி.பி. 100க்கும் 900த்திற்கும் இடையே வாழ்ந்த சிவயோகி. இவர் நமது நாட்டின் யோக சித்தரிலே தலைசிறந்தவர். இவர் மகாதுரிய நிட்டை கூடி 3000 மந்திரங்களை உலகிற்கு அருளினார். திருஞானசம்பந்தர், சேக்கிழார், தாயுமானார், அருணகிரிநாதர் போன்ற தெய்வப் பெரியார் திருமூலமந்திரத்தைப் போற்றி வணங்கினர். 'மூலன் உரை செய்த மூவாயிரம்' தமிழ், இன்று உலகெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது. ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று மூலர் தமது சிவயோக சித்தியை உலகிற்கு வழுத்துகிறார்.

திருக்கயிலாயத்தில் நந்திதேவரிடம் சுந்தர மூலர் கரும, பக்தி, ஞான ராஜ மந்திர தந்திர யோகங் கற்றார். எத்தனையோ சித்தர் அவரிடம் யோகப் பயிற்சி பெற்றனர். அவர் அகத்திய முனிவரைப் பார்க்கத் தெற்கே பொதிகைமலை நோக்கி வந்தார். கேதார், பத்திரி, நேபாளம், காசி, திருப்பதி, காளஹஸ்தி, காஞ்சி, சிதம்பரம் எல்லாம் கண்டு, பொருநையாற்றைத் தாண்டி அகத்தியர் வாழ்ந்த பொதிகை சென்று அங்கே கற்பங்களை யருந்தி முதுமை மாறி இளம் பொலிவெய்திக் காவேரிக் கரை வழியே சாத்தனூர் வந்தார்.

சாத்தனூரில் மூலன் என்ற இடையன் மாடு மேய்த்தான். அவனது குழலோசையிற் சொக்கி, மாடுகள் பசும்புல் அருந்திப் படிப்படியாகப் பாலீந்தன. பசுக்கள் அவனை உயிர்போல நேசித்தன. ஒருநாள் மூலன் பாம்பு கடித்து இறந்து போனான். அவன் உடலைச்சுற்றி மாடுகள் கண்ணீர்விட்டு வருந்தின. நமது சுந்தரசித்தர் தமது உடற்சட்டையை ஓர்புதலில் கழற்றிப்போட்டு, மூலன் உடலிற்புகுந்து குழலூதினார். மாடுகள் துள்ளிக் குதித்து மகிழ்ந்தன. மாலையில் அவற்றை அவரவர் வீட்டிற் கொண்டு சேர்த்து, ஒரு மரத்தடியிலே நிட்டை கூடியிருந்தார்.

மூலன் மனைவி ''கணவரே! வாங்க வீட்டுக்கு'' என்று இழுத்தாள். ''போ போ நான் உன் கணவனன்று, எனக்கு மனையுமில்லை மனைவியும் இல்லை'' என மறுத்தார். மனைவி குய்யோ முறையோ என மருண்டழுது மந்திரவாதிகளையும் தந்திரவாதிகளையும் அழைத்தாள். ஒரு முனிவர் ''அம்மா, இவர் இமாலயச் சித்தர். இறந்த மூலன் உடலைப் பூண்டார். இவர் பக்குவத்தை நீங்கள் அறியமுடியாது. அவர் நிட்டையைக் கலைக்காது செல்லுங்கள்'' என்றார். அரிய துறவிகள் அவரைத் திருமூல சித்தர் என்று போற்றிப் பணிந்து உபதேசம் பெற்றனர்.

திருமூலர் திருவாவடுதுறையில் ஓர் அரச மரத்தடியில் நிட்டை கூடித் தமது ஆத்மானுபவங்களையும், சிவயோக சித்திகளையும் 3000 திருமந்திரங்களாகக் கோத்தார். உள்ளறிவை உலகிற்கீந்த மூலசித்தரை அறிஞரும் சித்தரும் போற்றினர். மூலர் மூவாயிரம், வேதாகமச் செறிவுள்ளன. அதைப் பத்தாவது திருமுறையாகப் போற்றுகிறோம்.

## 3 நவதந்திர நூல் :

திருமந்திரம் 3000 நாலடிச் செய்யுட்களும் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பெற்றுள்ளன. உள்ளத்தானுடனே கூடி உலகில் இன்புறவாழும் வகையைச் சொல்லுகிறேன் என்று, மூலர் முன்னுரை கோலித் தொடங்குகிறார். அதில் தமது வரலாற்றையும் சேர்க்கிறார்.

1. முதல் தந்திரம் காரணாகமம். இதில் நோயற்ற நீளாயுளுக்கு வேண்டிய நடைமுறைகளைக் காணலாம்.

2. இரண்டாவது தந்திரம் காமிகாகமம். கருவுறுதல், பிள்ளைபிறந்து வளர்தல், நோயற்று, நலமுற்று நடமாடும் கோயிலாக வாழ்ந்து சித்தர் முனிவர் உறவால் அறிவு தெளிந்து வீடுபேறடைவது இதன்பொருள்.

3. மூன்றாவது தந்திரம் வீராகமம். இது ஹடராஜ, தியானசமாதி யோகநெறியை விளக்கும். எட்டுசித்திகள், எண்யோகமுறை, ஆண் பெண் அமுதவாழ்வு, காயசித்தி, கேசரியோகம், பிராணாயாமம், உள்ளுயிர்ப்பு, தாரணை, பிரத்யாகாரம் தியானம் சமாதி பரியங்கயோகம் விந்துஅடக்கம் விந்து வீணாவது விந்துசக்தி மேலுந்துவது முதலிய யோக மரபுகளை இதில் அறியலாம்.

4. நாலாந்தந்திரம் (சிந்தாகமம்): ஆதார நிலையங்கள், குண்டலி விழிப்பு ஏற்றம் சக்தி சிவவழிபாடு, மாந்திரயோக மரபுகள், நவகுண்டம், சக்திபேதம், ஆதாரஆதேயம், சாம்பவி மண்டலம், புவனசக்தி, பூர்ணசக்தி, பைரவி சக்கரம், பைரவி மந்திரம், மந்திரயந்திரசாதனம் ஆகியவை இப்பகுதியிற் காண்போம்.

5. ஐந்தாவது வாதுளாகமம்: இது ஜீவ சுத்தி முக்திக்கான சாதனங்களையும் ஸஹஸ்ரார சித்தியையும் விளக்கும். சரியை கிரியை யோகம் ஞானம், கடவுளைத் தாய் தகப்பன் குழந்தை காதலன் ஆகிய பல பாவனையில் அன்பு செய்யும்வகை, ஆன்மநேய ஒருமை ஆகிய சாதனங்களைக் குறிக்கும்.

6. ஆறாவது வியாமள ஆகமம்: இது தவ நெறியை விரிவாக விளக்கும். அவநெறிகளைப் போக்கும். சிவகுருவிடம் யோகப் பயிற்சி பெறுவது, யோகப் பயிற்சி தருவது. புலனடக்கம் மெய்த்துறவு, அறிவின் நிறைவு அனைத்தும் இப்பகுதியிலே காணலாம்.

7. ஏழாவது சக்கரம் காலோத்தர ஆகமம். இது பொருள் பொதிந்தது. மெய்யாசான் கோடன்மரபு பயிலுமுறை உண்மைமாணவன், போலிமாணவன், துறவோர் கூட்டம், அறவோர் உறவு, அற்றார் நட்பு, தீயனகடிதல், நாத விந்து சக்தி, வீரியபலம், ஆதாரசக்கரங்கள், உச்சியிலே சிவசக்தி சேர்க்கை, இதயக்குகை நடுவில் ஆத்மமின்னல், அண்டலிங்கம், ஐக்கிய பூர்ணசுகசமாதி, சிவசக்தி சாதனம், சித்தி ,இரகசிய முத்திரைகள், விந்துஜயம், ஓஜஸ், தேஜஸ், சரசாத்திரம், மனோஜயம் முதலிய பல ரகசியங்களை இப்பகுதி விளக்கும்.

8. எட்டாவது தந்திரம், சுப்பிராகமம். இதிலே சீவன்முக்தி, பற்றறுதல், மனத்தூய்மை கவலை துயர் கலக்கமின்றி உள்ளமைதி பெறும் பயிற்சி, இதயாத்ம விளக்கம், ஆசை ஆணவ அழுக்கற்ற அமைதிநிலை, அறிவு மலர்ச்சி, பேரின்பம், ஐந்து கோசவிளக்கம், ஆத்மசாந்தம், உள்ளமைதி, உள்ளின்பம், சித்தசோதனம் முக்திசாதனம் சிவானுபூதி, மனமொழி மெய்த்தூய்மை, உண்மையறிவின்ப நெறி அறியலாம்.

9. ஒன்பதாவது தந்திரம்: முக்தாகமம்: மந்திரயந்திர தந்திர ரகசியங்கள், சீவன் சிவமயமாகும் சாதனம், உள்வானம், உள்ஒளி, உண்மைஅறிவு, விரிவு, தாரணை, ஐந்தெழுத்து மந்திரம், தூல சூக்கும அதிசூக்கும பஞ்சாட்சரி சாதனம், பிரணவஜபம், பிரணவ சமாதி, மௌனசமாதி, எல்லையற்ற பேரின்பம், இவ்வாறு எத்தனையோ யோகசாதன ரகசியங்களைத் திருமந்திரம் திட்ப நுட்ப சூத்திரங்களாகச் சொல்லும். இனித் திருமூலர் யோக சாதனம் தொடங்குவோம்.

## யோகப் பயிற்சி

வாழ்வின் நோக்கம் என்ன? உடலும் உயிரும் தேகமும் ஜீவனும் சேர்ந்ததே மானிடம். சீவன் சிவமயமாக வேண்டும். அதற்கேற்ற பயிற்சிப் படிகளே சாதனம் எனப்படும். சாதனம் செய்பவன் சாதகன்(பயில்வோன்)ஆவான். நமக்கு மூன்று உடல்கள் உள்ளன. (1) பருவுடல் (தூலம்), (2) நுண்ணுடல் (சூக்குமம்), (3) காரணவுடல். இம்மூன்றும் உறுதிபெற வேண்டும், ஒளிபெறவேண்டும். மனத்துக்கண் மாசிலன் ஆதலே, பயிற்சியின் முதற்படியாகும். அதற்கு ஆசையாணவத்தினவுகளைப் போக்க வேண்டும். மாசற்ற மனக்கண்ணாடியில் ஈசன் ஒளி பளிச்சிடும். புத்தி தெளிய வேண்டும். மனம் புலன் வழியே துள்ளிச் சள்ளை செய்யாமல் உள் அடங்க வேண்டும். மானதனுள்ளே குறைகள் மல்கியுள்ளன. காமம் வெகுளி, மயக்கம், செருக்கு, ஆணவம், சுயநலம், சூதுவாது பொய், புனைசுருட்டு, கோள், குத்திரம், அரட்டை, நாத்திகத்திமிர், பிறர்குற்றமே காணல், பிறரைத் தூற்றுதல், கேலி நையாண்டி ஆகிய பல குற்றங்கள் வாழ்வைப் பாழாக்குகின்றன. இக்குற்றங்கள் ஒழிந்து, மனிதன் புனிதனாக மூன்று பயிற்சிகள் பெறவேண்டும். (1) சுத்தம், தூய்மை, (3) சுதந்தரம் பற்றற்ற தூயவிடுதலை, (3) சமத்துவம் அன்பருளால் எல்லாம் சிவமயமாகக் காண்பது. இவ்வாற்றால் உடலுயிர் மனம் மாசற்றிலகும், தன் உண்மை

துலங்கும். ஆன்மநேயம் வளரும். தன்னுறுதி வளரும். சித்த சித்திக்குச் சரியை, சுதந்திரசித்திக்குக் கிரியை, சமத்துவ சித்திக்கு யோகம் வேண்டும். ஞானசித்திக்கு மனம் புறஞ்செல்லாது உள்ளடங்கவேண்டும். சிறிதும் சித்த சலனம் கூடாது.

சரியை வழிபாடு, கிரியை அதற்கான செயல், இரண்டும் புறச் சாதன மாகும். யோகம் (உள்ளொருமை). ஞானம், அறிவுச் செறிவு அடக்கம் அமைதி, உள்ளாய்வு, அகச் சாதனமாகும். இந்த நான்கும் அரும்பு, மலர், காய், கனி போலும்.

## சரியை விளக்கம் :

''நிலைபெறுமாறு எண்ணுதியேல்நெஞ்சே நீ வா''. இறைவனின் கோயிலைப் பெருக்கு, மெழுகு, மலர்பறி, மாலைகட்டு, திருவிளக்கேற்று. மூர்த்தி, தலம், தீர்த்த யாத்திரை செய். இது சரியையிற் சரியை.

## சரியையிற் கிரியை :

கடவுள் உருக்களிலே ஒன்றை வழிபடுதல் இட்டதெய்வ உபாசனை. மகேச வடிவங்கள் 25 ஆகும். உமாமகேசரர்சந்திரசேகரர் நடராசர் ரிஷபாருடர்(காளையார்) கலியாணசுந்தரர் பிட்சாண்டார் காமாரி காலாரி திரிபுராரி சலந்தராரி வீரபத்திரர் மாதங்காரி ஹரியர்த்தர் அர்த்தநாரீசர் (மங்கைபாகர்) கிராதர் கங்காளர் சண்டேசஅனுக்கிரகர் ஏகபாதர் சக்கரப்பிரதர் கஜமுகானுக்கிரகர் சோமாஸ்கந்தர் சுகாசீனர் தட்சிணாமூர்த்தி இலிங்கம். இவையே மகேச வடிவங்களாம்.

தேவி விநாயகர் முருகன் சிவன் பைரவன் சூரியன் ஹரிஹரன் ஆகிய மூர்த்திகளிலே ஒன்றை ஒருமைகூடி வழிபடலாம். அதனால் மனம் அலையாது உள்ளடங்கி நிற்கும் நிலை பேறெய்தும்.

## சரியை யோகம் :

சிவநடராசரை உள்ளத்திலே தியானித்தல். சரியையில் ஞானம்; மேற்படி தியான வுணர்விலே லயித்துக் கூடல், சரியையும் கிரியையும் எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தும். சைவர் சிவனையும் நடராசரையும் வணங்குக. வைணவர் விஷ்ணு, நாரணன் அரங்கநாதன் பெயராலே கடவுளை வழிபடலாம். இஸ்லாமியர் அல்லா, கிறிஸ்துவர் பரமபிதா பெயராலே கடவுளைத் தொழலாம். சூரிய உபாசிகள் கதிரவனை வணங்கலாம். சந்தியா வந்தனம் கதிர்வணக்கமே. தொழுகை வழிபாடு யாத்திரை கோயிற்பணி முதலியவை எம்மதத்திற்கும் சம்மதமாம். ஆனால், புறத்தொழுகை மட்டும் போதாது. உள்முகப்படவேண்டும். உள்ளம் உருகவேண்டும். உபாசனாமூர்த்தி பூசைப் பெட்டியிலேஇருப்பதைவிடத் தூய உள்ளத்திலே அமர்வது நலமாகும். உள்ளம் பெருங்கோவில். தெள்ளத் தெளிந்தாருக்குச் சீவனே சிவலிங்கம். உயிர்த்தொகுதியே கடவுள் எனக் கருதிப் பொதுநலங் புரிதலும் சரியையாகும். மகாத்மாகாந்திபோற்படமாடும்கோவிலைவிட, நடமாடும் உயிர்க்கோயிலுக்கு நற்பணி செய்வது பெரும் புண்ணியமாம். மகாத்மாகாந்தியும் வினோபாவும் செய்த பொதுநலத் தொண்டும் சரியையே. உள்ளுணர்வில்லாமல் புறத்தே மலர் தூவினால் பயனில்லை. அறிவுச் சரியை, அறிவுக் கிரியை, செயலில் விளங்க வேண்டும். சுத்த சைவத்தின் உயிர்உள்முகத்தொழுகையே. பூசை என்றால் பூவினால் செய்யப்படும் வழிபாடு. செடிப் பூவினும் சிந்தைப்பூ இனிது. இறைவன் உயிருக்கு உயிராய் உயிரிற் கலந்து நிற்கிறான். அவனை உயிரிற் கலந்து உயிர்ப்பணி செய்வதே உயிர்வழிபாடாகும். உள்விழியாலே ஒளிமயக் கடவுளை, உணர்வால் வழிபடுவதே மகாயோக பூசையாகும். உயிர்தாங்கும் உடலுருவையே நீராலும் மலராலும் தீபதூபங்களாலும் வழிபடுவது புறவழிபாடாகும். உயிர்க்குலத்திற்கு உள்ளார அன்புத் தொண்டாற்றுவதே உண்மையான சீவ-சிவ-பூசையாகும். திருமூலர் அருளுகிறார்:

உயிர்க்கு உயிராய் நிற்றல் ஒண்ஞானபூசை
உயிர்க்கு ஒளி நோக்கல் மகாயோகபூசை
உயிர்பெறும் ஆவாகனம் புறப்பூசை
செயிற்கடை நேசம் சிவபூசை யாமே

நாடும் நகரமும் சென்று ,மூர்த்தி தலம் தீர்த்த சேவை செய்யலாம். பாடிப்பாடிப் பணியலாம். ஆனால் இறைவன் உங்கள் உள்ளத்தான் என்பதை மறவாதீர்.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின்; பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

அப்பர் உணர்ந்து பாடுகிறார்:

''சலம் பூவொடுதூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

இது புற வழிபாடு

''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாதொரு நாளும் இருந்தறியேன்''

இது உள்வழிபாடு. ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பது அப்பரின் அன்புரை. சரியைக்கு அப்பர், கிரியைக்குச் சம்பந்தர், யோகத்திற்குச் சுந்தரர், ஞானத்திற்குமாணிக்க வாசகர் ஆவர். சிவந்தெளிந்த சீவர் அன்பால் வணங்குவர். அருட்பணிபுரிவர். அருளால், அவனருளே கண்ணாகக் காண்பர்; நல்லொழுக்கம்பூண்டு யோகம் புரிவர். சீவனிற் சிவமுணர்வார், சரியையில் கிரியை ,யோகம், ஞானம் கலந்து சிவநேச வுணர்வையே உகப்பார். சித்தாந்தம் வேதாந்தம் நாதாந்தம் போதாந்தம் யோகாந்தம் கலாந்தம் எல்லாம், எல்லாம்வல்ல எங்கும் நிறைந்த இறைவனைத் தற்போதமற்றுத் தற்செருக்கின்றி அருளுணர்வுடன் சிற்போதவழிநின்றோர், சித்திபெறுவர். உள்ளூறவால் உள்ளத்தானை உணர்ந்து நிற்பார்.

—தொடரும்

# திருவாசக நினைப்பு

பெரும்பேராசிரிர்
திரு டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., M.O.L., Ph.D.

யாருடைய நல்வாழ்வுக்கும் ஒரு பெரியவர் தொடர்போ, ஒரு பெரிய நூலின் தொடர்போ இன்றியமையாதது. இரு தொடர்பும் ஒருங்கே ஒருவர்க்குக் கிடைக்குமாயின், வாழ்க்கைக் கடல் இருகரையுடையதாகும். இத்தொடர்புக் கும் வாழ்க்கையுயர்வுக்கும் உறவுண்டு.

வாழ்வாங்கு வாழ்தல் என்பது என்ன? நினைப்பாங்கு நினைத்தல் ஆகும். நினைவு ஒரு பிறப்போடு அற்று விடுவதில்லை எனவும், ஒரு பிறப்பின் எண்ணங்கள் வரும் பிறப்புக்களி லும் தொடக்குற்று வாழ்வினை இயக்கும் எனவும், சமய நூல்கள் பகர்கின்றன. 'ஏது நிகழ்ச்சி' என்று மணிமேகலைக் காப்பியம் இத னைக் குறிக்கும். தங்கள் துன்பத்தைத் துடைத் தோரின் நட்பினை எழுபிறப்புகளிலும் நினைவு கொள்வர் எனவும், ஒரு பிறப்பிற் கற்ற கல்வி எழுமையும் தொடரும் எனவும், எண்ணப்படர்ச்சியைத் திருக்குறள் பலவிடங் களிலும் அறிவுறுத்துகின்றது. உயிர் இருந் தாற்கூட, நினைவிழந்துவிட்டால் வாழ்கின்றான் என்று அவனைச் சொல்வது வழக்கில்லை. எனவே நினைவியக்கமே வாழ்வியக்கம் என்பது தெளிவு.

'உண்மையே கடவுள்' என்று பெருமகன் காந்தி அறுதியிட்டது போல், நினைவே வாழ் வென்றால், அந்நினைவு எவ்வண்ணம் இருத் தல்வேண்டும், எங்ஙனம் இருத்தலாகாது என உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் மக்கள் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர். ''உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்'' எனவும், ''ஊனார் புழுக்கூடு இதுகாத்து இங்கு இருப்ப தானேன்'' எனவும், ஊண் வாழ்க்கையை ஊன் வாழ்க்கையாகத் திருவாசகம் இகழ்கிறது. 'தேடிச் சோறு நிதந்தின்று சின்னஞ் சிறுகதை கள் பல பேசும் வேடிக்கை' மனிதரைப் பாரதி யார் வசை பாடுவர். ஆதலின் உண்பது உறங்கு வது ஊடுவதெல்லாம் எண்ணமென்றோ, நினைவென்றோ சொல்ல முடியாது. இந்த நாள் நடப்பெல்லாம் சிந்தனைப் பெயர் பெற் றால், மரஞ்செடி கொடி பறவை விலங்கினம் எல்லாம் சிந்தனையாளிகளாய் விளங்காவா? ஒருவன் உண்ணல் தின்னல் உறங்கல் இவற்றைக் குறித்த நேரத்திற் செய்வதற்கு 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்று, திருக்குறளை மேற்கோள் காட்டினால், கேலி செய்வது ஆகு மன்றோ? ஆதலின், எண்ணம் நினைவுசிந்தனை என்று நாம் குறிக்கும்போது, நாட்கடமைக்கு அப்பாற்பட்ட மனத்தாண்டுதல்களைக் கருது கின்றோம் என்ற வரம்பைப் புரிந்து கொள் வோமாக.

நிலத்திற்கு மேல் எல்லாமே வானந்தான். எனினும் வானத்திற் பறந்தது, வானளவியது என்று கூறுங்கால், குறிப்பிட்ட ஒரெல்லைக்கு மேற்பட்ட உயரளவையே சுட்டுகிறோம். இம் மனவளர்ச்சி பெரும்பாலோர்க்கு இல்லை. மெய்ம்மை காணின், பெரும்பாலோர் தம்மன வளம் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு சிலர்க்கு மனமெனும் ஓர் உள்பொருள் இருப்ப தான எண்ணச் சுவடே இல்லை. நெஞ்சுவலி வரும்போது நினைப்பார்களோ என்னவோ? அத னாற்றான் தொல்காப்பியம் இச்சிறிய மாந் தரை ஐயறிவுடைய மாக்கள் என்று அழைக்கும். தமிழியலின்படி மானுடவடிவு உயர்திணையா காது. உணர்மனம் உடையோரே, உயர்திணை என்ற மேற்றிணைக்கு உரியர்; மக்கட்குலம் என்ற தனிமதிப்புப் பெறுவர். ஆதலின் நம் பிறப்பு உயர்திணைப் பிறப்பாக உருப்பட வேண்டின், நல்ல தூய உயர்ந்த எண்ண விதை களை, நம் மனப் பண்ணையில் வித்தி வளர்த்து, வளமார் கதிர்களைப் பெறல் வேண்டும். இவ் வுண்மையை உணர்த்தவே,

''மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே''

என அப்பரடிகள் உழவுப்பாடல் இயற்றினார்.

நிலபுலங்கட்கு வித்துக்கள், தேவைப்படின், அரசு வைத்திருக்கும் வித்து விற்பனைக்கிடங்கு களை நாடிப்பெறுவர் உழவர். சிந்தனை வித் துக்கள் எங்கே கிடைக்கும்? விற்பவர் யார்? விலை என்ன? இதோ திருவாசகம்! நிகரற்ற,

விலை வேண்டாச் சிந்தனைக் கிடங்கு; எண்ணவியலா எண்ணக் களஞ்சியம்; யாரும் நண்ணத்தக்க நாற்றங்கால். 'கடலினுள் நாய் நக்கியாங்கு' எனவும், 'வெள்ளத்துள் நாவற்றியாங்கு' எனவும் சொல்லியபடி, எவ்வளவு சிந்திக்க அள்ளிக் கொண்டாலும், அப்பாற்பட்ட சிந்தனையுயர்ச்சிக்கு உரிய வேராழமும் வேர்ப்பரப்பும் வேர்ப்பரப்புப்பன்மையும், திருவாசகக் குளத்தில் உண்டு.

நினைவே வாழ்வாதலின், நல்வாழ்வுப் பயிற்சி பெற விரும்புவார், திருவாசக எண்ணங்களை அடிக்கடி மனக்களத்துப் பயிலவேண்டும். எல்லோர்க்கும் பெரியோர்கள் தொடர்பும் உறவும் கிடைப்பதில்லை. யான் என்னும் செருக்கால், ஒரு சிலர் யாரையும் பெரியோராக ஏற்றுக்கொள்வதில்லை. அங்ஙனம் கொள்வது தம் பெருமைக்குக் குறைவாகும் என்ற உட்கருத்தாளரும், உலகில் இல்லாமல் இல்லை. ஆனால் திருவாசகம் போன்ற அரிய பெரிய நூல்கள், காட்சிக்கு எளிமையாகவும், கைக்கு அடக்கமாகவும் நம்முன் கிடக்கின்றன. அவற்றோடு ஒரு சில நொடிகள் நட்பாடினாற்கூட, வாழ்வில் கலக்கம் கலங்கிக் கவலை நீங்கித் தெளிவு கிடைக்கும். இந்நூல்களை 'இலங்குநூல்' என்பர் திருவள்ளுவர். 'ஒண்மைசால் நூல்கொடு வெண்மைகளைக' என்று வழிகாட்டுவர் வ.உ.சி! அத்தகு நூல்களுள் தலையாயது, வள்ளலார் போற்றிய திருவாசகம்.

திருவாசகச் சாணையில் நம் அறிவைத் தீட்டினால் என்ன பிறக்கும்? எக்காலத்தில் எதனை எதனை விடவேண்டும், எக்காலத்தில் எதனை எதனைக் கொள்ள வேண்டும் என்கிற காலப்பக்குவம் நம் மனத்தில் விளையும். பலர் தவறாக எண்ணுவது போலத் திருவாசகம் உலக நல்வாழ்வை வெறுக்கும் நூலன்று; குடும்பம், இன்பம், செல்வம், கல்வி, புகழ் என்ற வாழ்வுப்பாங்குகளையெல்லாம் பழிக்கும் நூலன்று; உலகத்தை விட்டு ஓடுக என்றுதுரத்தும் நூலன்று. அது பொருளாயின் திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம் முதலான பதிகங்களுக்கு இடம் எங்கே?

''உன்னடியார் தாள்பணிவோம்!
ஆங்கவர்க்கே பாங்காவோம்!
அன்னவரே எங்கணவர்
ஆவார்! அவருகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்!''

என்ற இல்லற வேண்டுதலுக்கு இடம் எங்கே? தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்து குடும்பியாக விளங்கிக் காட்டுகின்றான், என்ற திருச்சாழல் நோக்குக்கு இடம் எங்கே? ஆதலின் திருவாசகம் திருமண வாசகத்திற்கு எதிரன்று; உடன்பாடு என்று அறையினும் மிகையன்று.

வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலம் கல்வியென்னும்
பித்த வுலகில் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே

இத்தகைய துறவுக் கருத்துக்கள், திருவாசகத்தில் வழிந்தோடுகின்றன என்பதை நானும் அறிவேன். நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதியில், இத்தகைய துறவுக் கருத்துக்கள், திருவாசகத்தில் வழிந்தோடுகின்றன என்பதை யாவரும் உணர்வர். நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதியில், இவை மிகவும் வெளிப்படை. ஆனால், இவ்விடத்துத்தான் சில அடிப்படை உலகியலை நாம் சிந்திக்க வேண்டும். ஐம்பது வயதில் ஒருவன் மரப்பாவை வைத்துப் பருமன் ஊதி விளையாடலாமா? சிறு தேர்உருட்டி, வீதியில் திரியலாமா? வயதுக் கிழவி சிற்றாடை கட்டிச் சதங்கையொலிக்க நடைபழகலாமா? கல்லூரிக்குச் சென்றவன், உயர்நிலைப்பள்ளி நூல்களையும் பழக்கங்களையும் விட்டுவிடுகின்றான். உயர்நிலைப்பள்ளி மாணவன், தொடக்கப் பள்ளிப் பழக்க வழக்கங்களை விட்டு விடுகின்றான். தாயானவள் கன்னித்தன்மைகளையும், பாட்டியானவள் அன்னைத் தன்மைகளையும் குறைத்துக் கொண்டு, பருவத்திற்கேற்ற நடைமுறைகளைக் கொள்ப. ஆசிரியன் ஆனவன், மாணவக் குறும்புகளைக் குறைத்துக் கொள்கின்றான். படையிற் சேர்ந்த மறவன், வீட்டினை மறக்கப் பழகிக் கொள்கின்றான். வணிகன் தன்கடையில் ஒன்றினைத் தன்வீட்டிற்கு எடுத்தாலும் எழுதிக்கொள்கின்றான். உலகியலிற் பருவத்துக்கு ஏற்பவும், நிலைக்கு ஏற்பவும், கழிவன கழித்துக் கொள்வன கொள்ள வேண்டும். இவ்வாற்றால் கழிப்பவை வேண்டாதன என்றோ, வெறுக்கத் தக்கவை என்றோ பொருளல்ல. விடவேண்டிய காலத்து விடவேண்டியவற்றை விடவேண்டும். பிச்சைக்காரன் போலவும், குப்பைக்காரன் போலவும், எல்லாவற்றையும் விடாது சுமந்து கொண்டு திரியக் கூடாது. உலகியலில் நுகர்பொருள்களைக் காலக் கழிப்புச் செய்து கொண்டு வருவது போல, உள்ளத்தின் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் ஒவ்வொரு காலத்திலும் விட்டும் குறைத்தும் அடக்கியும், மேன்மேல் உயர்ந்தவை புகவும் வளரவும் இடங்கொடுக்க வேண்டும். திருவாசகம் கூறும் வேண்டாமைப் பாடல்களை, வெறுப்புப் பாடல்களாகக் கருதாமல், அவ்வக்காலத்து இன்னின்னவற்றை விட்டொழிக்க வேண்டும் என்று, படிமுறை காட்டும் வாழ்க்கை வழிநடைக் கல்வியாகக் கருத வேண்டும். இதுவே உலகியலுக்கும் உளவியலுக்கும் ஒத்தது.

வாழ்வின் ஓட்டத்தில், எண்ணிப்பார்த்தால், நாம் நம்மையறியாமலே எவ்வெவற்றையோ விட்டுச் செல்கின்றோம். பலர் விட்டுச் செல்லவும் காண்கின்றோம். இவற்றை நினைவுபடுத்துவதுதான் திருவாசகம். திருவாசக நினைப்பு, மேன்மேலும் நம் உள்ளத்து வளர்ந்தால், விடாது வைத்துக்கொண்டிருப்பவற்றை, உரிய உரிய காலத்தில் விட்டு விட்டு, உயர்ந்த உயிர்ப்பக்குவம் பெறுவோம். இம்மைப் பெருவாழ்வுக்கே, திருவாசக நினைப்பு எல்லார்க்கும் வேண்டும்.

**

# பாரதியாரும், கம்பரும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை:

''என்றும் இருக்க உளம் கொண்டாய்,
இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்,
இன்றும் இருத்தல் செய்கின்றாய்;
இறவாய் தமிழோடு இருப்பாய் நீ''

என்று தாயுமானவரைக் குறித்துப் பாரதியார் பாடிய வரிகள், பாரதியார்க்கும் மிகமிகப் பொருந்தும் நிலையில், இறந்தும் இறவாத பெருஞ்சிறப்பை, அழியாப் புகழைப் பெற்று விளங்குபவர் பாரதியார்.

## பாரதியார்:

''சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'' என்று பாடினார், சங்க காலச் சான்றோர் ஆகிய பிசிராந்தையார்! அம்முறையில் கவிஞர்கள் பற்பலர் தோன்றிய பெருமை, நம் கன்னித் தமிழ்நாட்டுக்கு உண்டு. அவர்களில் அண்மைக் காலத்தில் தோன்றிய கவிஞர்கள் பலருள், தலைசிறந்தவர் நம் பாரதியார்! அவரே பாடுமாறு போல,

''புவியனைத்தும் போற்றிட, வான் புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லையெனும் குறை''

பாரதியாரால் நீங்கியது எனலாம். பாரதியாரின் கவிதைத் திறன்,

''சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொல்புதிது, சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை''

என்று அனைவரும் வியந்தும் நயந்தும் புகழ்ந்து போற்றத்தக்க, பெருமாட்சிமையுடையதாகச் சிறந்து விளங்குகின்றது.

## வழிகாட்டி, முன்னோடி:

சிறந்துயர்ந்த கவிஞர்களையும், அவர்தம் நூல்களையும், மேலைநாட்டு ஆங்கிலப் பேரறிஞர் ஆகிய ஜான்ரஸ்கின் ( John Ruskin ) என்பவர், ''உண்மைக் குரல்கள்'' ( Genuine Voices ) என்றும், ''வெறும் எதிரொலிகள்'' ( Mere Echoes ) என்றும், இருவகையாகப் பிரித்துக் கூறுவர். அம்முறையில் நோக்கி ஆராயுங்கால், நம்முடைய தேசிய கவிஞர் திரு. சி. சுப்பிரமணிய பாரதியார், கருவிலேயே திருவுடைய சிறந்த பெருங்கவிஞராகத் திகழ்கின்றார். உணர்ச்சிநலம் ஓங்கி ஒளிரும் அவர்தம் ஆற்றல் மிக்க அழகிய அரும் பெரும் கவிதைகள், ''உண்மைக்குரல்'' என்று புகழ்ந்து போற்றத்தக்கனவாகும் என்பதில் ஐயமில்லை. அவர்தம் ''எதிரொலிகள்'' என்று சொல்லத்தக்க நிலையில், பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இன்று எத்தனையோ பற்பல புதிய இளங்கவிஞர்கள் மிகுதியாகத் தோன்றி வருகின்றனர். இந்த இளம்பெரும் கவிஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் விளங்கிவரும் பெருமை, பாரதியாருக்கு உரியதாகும்.

''ஆசிரியர் மறைமலைநல் அடிகளார்
உரைநடையால், அறிஞர் பல்லோர்
தேசுறவே தோன்றினராய்ச் சிறந்தஎழில்
நடையெழுதும் சிறப்பே போன்றும்,
பேசவலார் திருப்புலிசை ஞானியார்
அடிகள்எனும் பெருநா வல்லோர்
தூசொளிரும் சுவடொற்றிச் சொற்பொழிவோர்
பற்பலரும் தோன்றல் போன்றும்'' (1)

''இந்நாட்டில் இந்நாளில் இலங்கிவரும்
கவிஞரொடும், இனிவ ரற்கா
மெய்ந்நாட்டும் பெருவிருப்பின் மிகமுயலும்
இளங்கவிஞர் மிகப்பல் லோரும்,
பொய்ந்நாட்டிப் புகழ்கொள்ளார் புகலுவரேல்,
பாரதியின் புலநெ றிக்கே
மொய்ந்நாட்டும் வழிகாட்டும் முதன்மையுண்டாம்;
அதற்கவரை முன்னல் நன்றே'' (2)

—ந.ரா.மு.

## ''தமிழ் ஞானசம்பந்தர்'':

நமது தேசிய கவிஞர் திரு. சி. சுப்பிரமணிய பாரதியார் அவர்களையும், அவர்தம் அரும் பெரும் சிறப்புகளையும் நினைக்கும்போதெல்

லாம், திருஞானசம் பந்தப் பெருமானைப் பற்றிய நினைவே, ஒருவகையிற் போதருகின்றது. தமிழகத்தில் முதன்முதலில் தமிழர்களைத் தட்டி எழுப்பித் தமிழுணர்ச்சி பெருகிப் பரவும்படி செய்தருளியவர்கள், பாரதியாரும் திருஞானசம்பந்தப் பெருமானுமே ஆவர் எனலாம். தொன்னெடுங் காலமாகத் தமிழ் மொழியானது நிலவி நிலைபெற்று விளங்கி வருகின்றதாயினும், அதனைப் பல்வேறு அடைமொழிகளால் சிறப்பித்துப் புகழ்ந்து போற்றிப் பரப்பியவர் திருஞானசம்பந்தர். அவரைப்போலவே தமிழ்மொழியையும் தமிழகத்தையும் புகழ்ந்து போற்றிப்பாடி, அவற்றை அண்மைக்காலத்தில் வளர்த்தவர் பாரதியார். திருவள்ளுவர் பெருமான் ''நாடு'' என்னும் தலைப்பில், நாட்டிற்குரிய இயல்புகள் பற்றி விளக்ினராயினும், அவர் நாட்டுப்பற்று இன்றியமையாமைகுறித்து விளக்கி வற்புறுத்தும் வாய்ப்பினைப் பெற்றிலர். ஆனால் நம் பாரதியாரோ,

> ''பெற்றதாயும் பிறந்த பொன்நாடும்
> நற்றவ வானிலும் நனிசிறந் தனவே'' (1)

> ''தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
> தாய் என்று கும்பிடடி பாப்பா'' (2)

R. RAJU, Dy Commissioner H.Qrs, (Retired) HR&CE Administration Dept.

என்பன முதலாகப பலவகைகளிற் பாடி, நாட்டுப் பற்றின் இன்றியமையாமையினை வற்புறுத்தி வளர்க்கும் வாய்ப்பினைப் பெற்றார். திருஞானசம்பந்தரும் தமது திருப்பதிகம் ஒவ்வொன்றிலும், தம்மைக் 'காழிவேந்தன்' 'கவுணியர் தலைவன்' என்றெல்லாம் பலவகைகளில்குறிப்பிட்டுக் கொண்டு, ஒருவகையில் தம் நாட்டுப் பற்றுணர்வைப் புலப்படுத்தியருளினார்.

நாட்டின் மூலைமுடுக்கர்தோறும் சென்று, முதன்முதலாக இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, கி.பி.7ஆம் நூற்றாண்டிலேயே, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய தனிப்பெருஞ் சான்றோர் திருஞானசம்பந்தரே யாவார் எனக் கூறுதல் மிகையன்று. அதனாலேயே ''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்'' என்றும், ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்'' என்றும், தமிழ் உலகம் ஞானசம்பந்தரைப் போற்றி வருகின்றது. வேறு பிறர் எவரும் தம்மைத் தமிழொடு சார்த்திச் சுட்டிக் கொள்ள முற்படாத நிலையில், முதன் முதலாகத் திருஞானசம்பந்தர் தாம், தம்மைத் ''தமிழ்ஞானசம்பந்தன்'' என்று, தமது திருப்பதிகங்கள் பலவற்றில் சுட்டிக் கொள்ள முற்பட்டார். அத்தகைய தமிழ் உணர்ச்சியை அவருக்குப் பின்னர்ச் சிறப்பாகப் பரப்பிவளர்த்தவர், நமது பாரதியார்.

பாரதியார், சொல்புதிது பொருள்புதிது சுவைபுதிது நடைபுதிது என்று போற்றத்தக்க வகையில், பலப்பல கவிதைகளைச் சிறப்புற இயற்றியுதவியுள்ளார். அதுபோலவே ''செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களால், மொழிமாற்று-மாலைமாற்று-சந்தஇயமகம்-ஏகபாதம்-தமிழ்இருக்குக் குறள்-திருவெழுகூற்றிருக்கை - ஈரடி-ஈரடிமேல்வைப்பு - நாலடி மேல்வைப்பு-மேன்மை நடையின் முடுகும் அராகம் - சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள்-யாழ்மூரி-திருத்தாளச்சதி'' முதலிய பதிகங்கள் பலவற்றை, மூல இலக்கியமாக, எல்லாப் பொருள்களும் முற்ற ஞானசம்பந்தர் அருளிச் செய்தார். ஞானசம்பந்தரை அவர் வாழ்ந்த காலத்திலேயே, சான்றோர்கள் பலர் போற்றித் துதித்து வணங்கி மகிழ்ந்தனர். அவ்வாறே பாரதியாரையும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை - பாவேந்தர் பாரதிதாசன் - நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை முதலிய பலரும் போற்றிப் பாராட்டியுள்ளனர். இத்தகைய பற்பல ஒப்புமைகளாலும், தமிழ்ஞான சம்பந்தம் உடைமையினாலும், பாரதியாரைத் திருஞானசம்பந்தருடன் ஒருவகையில் ஒப்பிட்டு நோக்கி மகிழ வாய்ப்புள்ளது.

## பாரதியாரும் கம்பரும்:

இத்துணைப் பெருஞ் சிறப்பு வாய்ந்த பாரதியார் அவர்கள், தாமே ஒரு பெருங் கவிஞராக இருந்ததோடு அமையாமல், தமக்கு முன்னே யிருந்த சிறந்த பெருங் கவிஞர்கள் பலரிடத்திலும், மிகுந்த அன்பும் ஈடுபாடும் பற்றும் கொண்டிருந்தார். அங்ஙனம் அவர் பெரிதும் ஈடுபட்டுப் போற்றிய கவிஞர்கள் பலருள், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர், கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆவார். ''கவிஞர்களின் அருமை பெருமைகளை மதிப்பிட்டு உணர்தல் என்பது, கவிஞர்களுக்கு மட்டுமே உரிய தனிப் பெருஞ் சிறப்பு ஆற்றல் ஆகும்; அதுவும் கூட, எல்லாக் கவிஞர்களுக்கும் அமைவது அன்று. மிகச்சிறந்த மாபெருங் கவிஞர்களுக்கே அத்திறன் இயல்பாக அமைந்திருக்கும்''*என்று இலக்கியத் திறனாய்வாளர்கள் இயம்புவர். புலமைமிக்கவரைப் புலமைதெரிதல், புலம்மிக்கவர்க்கே யன்றோ புலனாகும். அம்முறையில், சிறந்த பெருங் கவிஞராகிய பாரதியார், தமக்கு முன்னேயிருந்த சிறந்த பெருங்கவிஞராகிய கவிச்சக்கரவர்த்தி கம்பர்பெருமான்பால், அளவிலா அன்பும் ஈடுபாடும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### (1) 'கம்பனைப்போற் பிறந்ததில்லை':

*(1)* தமிழின் அருமை பெருமைகளையும், அதனைப் போற்றாமல் தமிழர்கள் இருக்கும் அவலநிலையையும், அதனை வளர்த்தற்குரிய வழிவகைகளையும் பற்றிப் பாடலுறும் பாரதியார், ஓர் அழகிய இனிய பாடலில் கம்பரைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து பாடியிருக்கக் காண்கின்றோம்.

> ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
> வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
> பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
> உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை;
> ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
> வாழ்கின்றோம், ஒரு சொற் கேளீர்!
> சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
> தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்''

---

* ''To judge of poets is only the faculty of poets; and not of all the poets, but only of the best''. —**Ben Jonson.**

இதன்கண் கம்பரை முதற்கண் அமைத்துவிதந்து குறிப்பிட்டிருத்தல், எண்ணியுணர்தற்குரியது. பாரதியார், தமிழ்ப் பண்பாட்டு உணர்வு, பாரத நாட்டுப்பற்று, அனைத்துலகப் பொதுமை நோக்கு உடையவர் ஆதலின், அம் மூன்றற்கும் உரிய தமிழ்ச் சான்றோர்கள் மூவரைத் தேர்ந்தெடுத்து, இப்பாடலில் குறிப்பிடுவாராயினார். தமிழகத்திற்கு இளங்கோவடிகளையும், இந்திய நாட்டிற்குக் கம்பநாடரையும், உலகிற்குத் திருவள்ளுவர் பெருமானையும் முறையே உரியவராகக் கொண்டு, பாரதியார் குறிப்பிட்டிருக்கும் பொருத்தமும் சிறப்பும் போற்றற்பாலன.

## 2) கம்பன் பிறந்த தமிழ்நாடு:

செந்தமிழ்நாட்டின் சிறப்புகள் பலவற்றையும் தொகுத்துக் கூறி விளக்கிப் பாட முற்படும் பாரதியார், அக்கவிதையின்கண் கம்பரைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கும் திறம், பெரிதும் போற்றுதற்குரியது.

''கல்வி சிறந்த தமிழ்நாடு-புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்விதம் ஆயின சாத்திரத்தின் - மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு''

'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்னும் தொடரை இலக்கணநூல் உரையாசிரியர்கள் ஐந்தாம் வேற்றுமையுருபு ஏதுப் பொருளில் வருவதற்கு எடுத்துக் காட்டாகக் காட்டுவர். ஆதலின் ''கல்வி சிறந்த தமிழ்நாடு'' எனப் பாடிய பாராதியார், ''கல்வியிற் பெரியவர்'' என்னும் புகழ்பெற்ற கம்பரைப் ''புகழ்க்கம்பன்'' என்று புகழ்ந்து, அதனை அடுத்துப் பாடிய நுட்பம் கருதி மகிழற்பாலது.

## 3) 'கம்பன் என்று ஒரு மானிடன்'

தமிழ்க் கவிஞர்கள் அனைவருமே, தம்முடைய வாழ்க்கையைப் பற்றி ஏதும் குறிப்பிட்டுக் கொள்ளாதநிலையினராகவே, பொதுவாகவும் பெரும்பாலாகவும் இருக்கக் காண்கின்றோம். அஃது ஒருவகையில் பெருங்குறையேயாகும். அக்குறையை நீக்கி நிறைவுசெய்யும் நிலையில், எதனிலும் ஒரு முன்னோடிபோல விளங்கிய நம் பாரதியார், தாமே தம்முடைய வாழ்க்கைக் குறிப்புகளைச் 'சுயசரிதை' என்னும் தலைப்பில், ஓர் அழகிய கவிதையாக, யாத்துத் தந்திருக்கின்றார். அதன்கண் ''ஆங்கிலப் பயிற்சி'' என்னும் தலைப்பில் வரும் பகுதியில், கம்பரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் வரிகள், நம்மனோர் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளை கொள்ள வல்லனவாகும்.

''கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதை புனைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்து அளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்,
நம்பஅருந் திறலுடன் ஒரு பாணினி
ஞால மீதில் இலக்கணம் கண்டதும்,
இம்பர் வாழ்வின் இறுதிகண்டு உண்மையின்
இயல்பு உணர்த்திய சங்கரன் ஏற்றமும்..''

இப்பாடலில், கம்பர் இயற்றிய நூலைக் கற்குந்தொறும், ''மானுடம் இவர்தாம் அல்லர் நற்பெரும் தெய்வம்'' போலும் என்னும் வியப்புணர்வு, தமக்கு மேன்மேற் பொங்கி எழுதலின், அவ்வுணர்வை மறித்து நிறுத்தி, அவர் மானுடர்தான் எனினும், இத்தகைய தெய்விக நிலைக்குரியவராக, நாம் வியந்து எண்ணிப் போற்றும் வகையில், சிறப்பாகச் சுவைமிகப் பாடியிருக்கின்றார் என்னும் உண்மையை, அழுத்தமாகவும் திருத்தமாகவும் நம்மனோர்க்கு உண்மைவிளங்கும் வண்ணம் உணர்த்துதற் பொருட்டுக் ''கம்பன் என்று ஒரு மானிடன் வாழ்ந்ததும்'' என்று குறிப்பிட்டுப் பாடியிருத்தல் சிந்தித்து இன்புறுதற்கு உரியது.

## 4) கம்பன் குறிகளாற் காட்டும் முயற்சி :

''தமிழன் என்று ஓர் இனம் உண்டு; தனியே அதற்கு ஒரு குணம் உண்டு'' என்று புகழப் பெறுகின்ற, தமிழ்மக்களைப் பற்றிய தம் சிந்தனைகளை வெளியிடும் தமது கவிதை ஒன்றில், பாரதியார் பின்வருமாறு பாடுகின்றார்:

''சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
'எல்லையொன்று இன்மை' எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்ததுஎன்று
உறுதி கொண்டு இருந்தேன்...''

இதன்கண், கம்பர் தமது இராமகாதையின் வாயிலாகச், சொல்லின் அளவும் பொருளின் வரம்பும் கடந்து, அப்பாற்பட்டு நிற்கும் எல்லையற்ற பரம்பொருளின் இயல்புகளை, எல்லையுள்ள சொல்லும் பொருளும் ஆகிய குறிகளால், தம்முடைய கவிதைகளிற் காட்டிட முயலும் அரும்பெரும் முயற்சியின் அழகினைப், பாரதியார் வியந்து போற்றிப் பாராட்டி மகிழக் காண்கின்றோம்.

## 5) அகத்தியரும் தமிழும்

தமிழ்த்தாய் பற்றிய தமது கவிதை ஒன்றில், பாரதியார் தமிழ்மொழியை உலகத்துக்கு அளித்தவர் சிவபெருமான் என்றும்; தமிழுக்கு அகத்தியம் என்னும் இலக்கணம் செய்து கொடுத்து, அதனை வளர்த்தவர் அகத்திய முனிவர் என்றும் குறிப்பிடுகின்றார் :

''ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்று ஓர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்துகொடுத்தான்''

இப்பாடல், கம்பராமாயணத்தின்கண் ஆரண்ய காண்டத்தில், அகத்தியப் படலத்தில் உள்ள பின்வரும் செய்யுளை நினைப்பிக்கும் வகையில் அமைந்திருத்தல் கருதி மகிழத்தக்கது.

''உழக்கும் மறை நாலினும் உயர்ந்தது,
உலகம் ஓதும்
வழக்கினும் மதிக் கவியிலும், மரபின் நாடி
நிழற்பொலி கணிச்சி மணிநெற்றி உமிழ்செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்தந்தான்''

''என்றும் உள தென்றமிழ்
இயம்பி இசை கொண்டான்''

''நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்''

எனவரும் கம்பர் பாடற் பகுதிகள், பாரதியாரின் உள்ளத்தில் பதிந்து படிந்திருந்த பான்மை, பாரதியாரின் மேலைப் பாடலால் நன்கினிது விளங்குகின்றது.

## 6) 'இலக்கியம் எல்லாம் காதற் புகழ்ச்சி'

இவ்வாறே காதலின் புகழைப் பற்றிப் பாட மேற்கொள்ளுகின்ற கவிஞர் பாரதியார், இராமபிரானையும் சீதைப்பிராட்டியையும் நினைவு கூர்ந்து பின்வருமாறு பாடுகின்றார்:

''மங்கைதனைக் காட்டினிலும் உடன்
கொண்டு ஏகி,
மற்று அவட்கா மதிமயங்கிப், பொன்மான்
பின்னே
சிங்கம்நிகர் வீரர் பிரான், தெளிவின் மிக்க
சீதரனும் சென்று பல துன்பம் உற்றான்,
இங்கு புவிமிசைக் காவியங்கள் எல்லாம்,
இலக்கியம் எல் லாம், காதற் புகழ்ச்சி
யன்றோ?''

இவ்வரிகள், பாரதியார் இராமகாதையிலும், அதனைப் பாடிய கம்பர் கவிதையிலும், எத்துணை ஈடுபாடு கொண்டிருந்தார், என்பதனை விளக்குவதற்குப் போதிய சான்று ஆகும்.

## 7) கம்பநாடன் கவிதை

இங்ஙனமே, சுப்பராம தீட்சிதர் என்னும் இசைப்பேரறிஞர் ஒருவர் இயற்கை எய்தி மறைந்தபொழுது, ''கன்னனொடு கொடை போயிற்று; கம்பநாடனுடன் கவிதை போயிற்று; அருச்சுனனொடு வீரம் போயிற்று; அதுபோலச் சுப்பராம தீட்சிதரின் மறைவால் சுவை மிகுந்த இசைக்கலையும் போயிற்று'' என்னும் கருத்து அமையப் பாடுகின்றார்:

''கன்னனொடு கொடை போயிற்று;
உயர் கம்பநாடனுடன் கவிதை போயிற்று;
உன்னரிய புகழ்ப்பார்த்த னொடுவீரம்
அகன்றதுஎன உரைப்பர் ஆன்றோர்;
என்னகம்நின்று அகலாதோன் அருட்சுப்ப
ராமன் எனும் இணையிலா விற்
பன்னனொடு சுவைமிகுந்த பண்வளமும்
அகன்றதெனப் பகர லாமே!''

இப்பாடலில் கன்னனுடன் கொடைக்கும், பார்த்தனொடு வீரத்திற்கும் உள்ள தொடர்பு போல, கவிதைக்கும் கம்பனுக்கும் உள்ள தொடர்பை விளக்கி வலியுறுத்திக் காட்டிப் பாரதியார் பாடியிருத்தல், பாரதியாருக்குக் கம்பர்பால் இருந்த அளவற்ற ஈடுபாட்டினை அறிவிப்பதாகும்.

## 8) 'கம்பர் மதம்'

பாரதியார் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்லர்; மிகச் சிறந்த ஒரு தமிழ் உரைநடை ஆசிரியரும் ஆவர். தமிழில் அவர் அழகிய இனிய அரிய பல கட்டுரைகள் வரைந்திருக்கின்றார். அவைகளுள்ளே ''இடையில் நமக்கு நேர்ந்த கேடு'' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரை ஒன்றில், தமிழகத்தில் தமிழ்க் கவிதைகளில் சுவையும் மகிழ்ச்சியும் தரமும் குறைந்துவர நேர்ந்தமை குறித்து வருந்தி எழுதியிருக்கும் பகுதி, கவிதை பற்றிய அவர் கருத்தினை விளக்குவதுடன், அவருக்குக் கம்பர்பால் இருந்த பெரும்மதிப்பினையும் தெளிவுறவும் அழகுறவும் விளக்குகின்றது.

''நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று. ருசி குறைந்தது. கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை, நம் கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் ''கண்'' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரசம் குறைந்தது, சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.

''சவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்''

என்று கம்பன் பாடியிருக்கின்றான். 'சவி' என்பது ஒளி; இது வட சொல்; கம்பன் காலத்தில் அதிக வழக்கத்தில் இருந்தது போலும். 'ஒளிபொருந்தும்படி தெளிவு கொண்டதாகி, தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி, மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி' என்று கம்பன் வருணனை செய்கின்றான். எனவே கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை''.

இவ்வுரை நடைப் பகுதியால், பாரதியார் தாம் ஒரு கவிஞர் என்ற முறையில், கவிதை இலக்கணம் பற்றித் தமக்குள் கருதியிருந்த கருத்துக்களை விளக்குவதற்கு, ஒரு மேல்வரிச் சட்டம் போலக் கம்பர் பெருமானின் கவிதையினையே மேற்கோளாக எடுத்துக்காட்டி விளக்கியிருத்தல், பாரதியார் கம்பரை எங்ஙனமெல்லாம் மதித்துப் போற்றி வந்தார் என்பதனைப் புலப்படுத்தும்.

## முடிவுரை

இதுகாறும் பாரதியார் கம்பர்பால் கொண்டிருந்த எல்லையற்ற பெருமதிப்பினையும், ஈடுபாட்டினையும் இயன்ற பெற்றி ஒரு சிறிது

ஆராய்ந்தோம். பாரதியாரால் கம்பரின் பெருமையை உணர்ந்த நாம், கம்பரின் வாயிலாகவும் பாரதியாரின் பெருமையினை உணர்ந்து கொள்ள முயலுதல் பொருந்தும். கம்பர் தமது இராமகாதையில் கவிதை பற்றியும், கவிஞர்கள் பற்றியும், கவிஞர்கள் வழங்கும் சொற்கள் பற்றியும், ஆங்காங்கே வழங்கியிருக்கும் பொருள் பொதிந்த தொடர்கள்பல, பாரதியாருக்கும், அவர்தம் கவிதைகளுக்கும்கூட, மிகவும் பொருந்துவனவாகத் தோன்றுகின்றன.

கம்பரின் சொற்களினாலேயே பாரதியாரை நாம் குறிப்பிடுதல் வேண்டுமாயின் ''முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர் — கற்பகம் அனைய கவிஞர்—நல்லியல் நவையறு கவிஞர் - பாவரும் கிழமைத் தொன்மைப் பருணிதர்'' என்றெல்லாம் குறிப்பிடுதல், மிகமிகப் பொருந்தும். பாரதியாரின் கவிதை தமிழுலகத்திற்கு அணியாய் விளங்குவது; ஆன்ற பொருள்கள் அளிப்பது; அறிவுப் புலத்திற்கு ஆராப் பெருவிருந்து ஆவது; சவியுறத் தெளிந்தது; தண்ணென்ற தன்மை தழுவியது; சான்றோர் கவியென விளங்குவது ! இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை!

பாரதியாரின் கவிதைகளால், நாம் எய்தும் இன்பம் ''செஞ்சொற் கவியின்பம்''. பாரதியார் தம்முடைய கவிதைகளில் வழங்கிய சொற்கள், ''செவ்விய-மதுரம்சேர்ந்த-நற்பொருளிற் சீரிய-கூரிய-தீஞ்சொற்கள்''. பாரதியாரின் கவிதைகள், பழுது இல்லாத பலவகை அலங்காரப் பண்பின; தமிழ்நெறி வழக்கம் தழுவியன! கம்பர் சிறந்த கவிஞர்; பாரதியார் ஒரு சிறந்த கவிஞராக விளங்கியது மட்டுமன்றி, மிகச் சிறந்த இலக்கியச் சுவைஞராகவும் திகழ்ந்தவர்!

---

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

(4) திருநெல்வேலிச் சந்திப்பு, சிந்துபூந்துறை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர்—விசுவநாத செல்லியம்மன் கோயில், சிந்துபூந்துறை அருள்மிகு பாளையம் சாலைக்குமாரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(5) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தன்பூண்டி அருள்மிகு பூலோகநாத சுவாமி கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்த நாரீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(6) திருநெல்வேலி மாவட்டம், விளாத்தி குளம் வட்டம், முத்துளாபுரம் அருள்மிகு பாவனீசுவரர் கோயில், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி அருள்மிகு பூவணநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(7) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், ஷை மாவட்டம் வேங்கடசமுத்திரம் அருள்மிகு கயிலாசநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(8) தென்ஆர்க்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருவாமூர் அருள்மிகு பசுபதீசுவரர் கோயில், பண்ருட்டி அருள்மிகு வரதராசப்பெருமான் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9—8—1982).

(9) சென்னை, பாடி அருள்மிகு படைவீட்டு அம்மன்கோயில், ஷை பாடி அருள்மிகு திருவாலீசுவரர்கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (19-8-1982)

(10) சேலம் மாவட்டம், திருச்செங்கோடு அருள்மிகு பெரியமாரியம்மன் கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (25—8—1982).

(11) சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், சேந்தமங்கலம் அருள்மிகு வரதராசப்பெருமாள் கோயில், நாமக்கல் அருள்மிகு நரசிம்மசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (25—8—1982).

(12) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருப்பாற்கடல் அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி கோயில், மன்னார்குடி அருள்மிகு இராசகோபாலசாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (25—8—1982).

(13) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், திருநெய்ப்பேறு அருள்மிகு வன்மீகநாத சுவாமி கோயில், திருவாரூர் வட்டம், புலிவலம், அருள்மிகு வேங்கடாசலபதிப் பெருமாள்கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (28—8—1982).

(14) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பெரியசொரகை அருள்மிகு பரமேசுவரசுவாமி —சென்றாயப் பெருமாள்—மாரியம்மன்—பொங்கலிஅம்மன் கோயில்கள், ஷை மாவட்டம், தாரமங்கலம் அருள்மிகு கயிலாசநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (1—9—1982).

---

# திருவாசகம்

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள்

தெய்வ சிந்தனை தேவையா என்று
ஏளனம் பேசுவோர் இருக்கின் றார்கள் !
உண்டுஒரு கடவுள் உண்டுஎன்னில், எங்கே?
கொண்டுவா! என்று கூறும் இரணியர்
இன்றும் கூட இருக்கின் றார்களே!
தூணைப் பிளந்து தூய செழுஞ்சுடர்
பாரென முழங்கும் பக்தர்தான் இல்லை !
பக்தியில் முதிர்ந்து பழுத்தால் எந்தச்
சக்தியும் கிடைக்கும்; சாந்தியும் நிலைக்கும் !
பக்திஇல் லாநிலை பரவிடில், தெய்வம்
சக்தி இழந்து சாய்ந்து விடாது;
நாம்தான் தளர்ந்து நலமிழந் திடுவோம்
ஓம்தான் உயிரென உணர்ந்துரு காவிடில்!
நாதனை வாழ்த்துதல் நமக்கா கத்தான்!
சோதனை நீங்கிச் சுகம்கா ணத்தான்!
ஆடியும் ஓடியும் அலைந்தும் இதுவரை
தேடிய(து) என்ன? தெரிந்த தாசுகம் ?
வெள்ளியும் பொன்னும் மின்னும் வயிரமும்
உள்ளத் (து) அமைதிக்(கு) உதவுகின் றனவா?
இதற்கு மேலும் எதற்குஎன நினைக்கும்
நிலைக்கு வந்துநாம் நிற்கின்றோமா?
ஆசைக் கனவுகள் அறுபட் டனவா?
ஆனந் தம் வந்(து) அகப்பட் டதுவா?
கனக்கும் இதயக் கவலை ஒழிந்ததா?
மிதக்கும் ஒருதனி மேன்மை வந்ததா?
பசித்தால் புசித்துப் பாயை விரித்துக்
களைத்தால் படுத்துக் கண்அயர்ந் திடவா
மண்ணிலே வந்து மனிதன் பிறந்தது?
என்ன வாழ்விது என்னவாழ் விதுவென
அலுத்துக் கொள்ளவா ஆண்டவன் படைத்தான்?
நினைத்துப் பார்த்திட நேரமா இல்லை?
இறப்பதும் பிறப்பதும் இல்லைநம் கையில் !
நடுவீலே உள்ளது நம்மிடத் தில்லையோ?
முறைப்படி வாழும் முயற்சிவேண் டாவோ?
பொல்லாத ஐந்து புலன்களின் பேச்சைக்
கேட்டு வாழ்க்கை கெட்டிட லாமோ?
எந்த மனிதனும் இணையி லாஒரு
சுகம்பெறத் தானே சுழன்று வருகின்றான் ?
ஓயாது என்றும் ஓடித் திரிவது
தீராப் பெருஞ்சுகம் தேடிப் பெறத்தான் !
தொலைத்த இடத்திலே சுகம்தே டாமல்
நினைத்த இடத்திலே நின்று தேடினால்
பொழுது தானே போகும் வீணாய்!
எந்த இடத்தில் எப்படித் தொலைந்தோம்?
அந்த இடத்தை அறிந்தவர் சிலர்தாம்!
சிதறி அழிவதைச் சிறிதும் கருதா (து)
உதறி எறிந்துவிட்(டு) உயர்ந்தவர் சிலர்தாம் !
பகையது நீங்கிப் பக்தியாம் சந்தனப்
புகையது வளர்த்த புண்ணியர் சிலர் தாம் !
எந்திர ஓ சயில் இருந்து விடாமல்
மந்திர ஓசையில் மகிழ்ந்தவர் சிலர்தாம்!
ஏதோ ஐந்து எழுத்தென்(று) இராமல்
ஆதா ரம்என அறிந்தவர் சிலர்தாம்!
காலப் போக்கில் கரையா முழுமுதற்
கோலம் கண்டு குழைந்தவர் சிலர்தாம் !
பிறரும் பெறுகஅப் பேரின் பம்என
அறிந்ததைச் சொல்லி அமைந்தவர் சிலர்தாம் !
மற்றொரு மனிதன் வந்திடு வானோ,—நாம்
பெற்றுள நிலைக்கெனப் பெரிதும் கலங்கும்
இந்த உலகினில், எல்லா மனிதரும்
சுகம்பெறும் வழியினைச் சொல்லித் தருகிற
பித்தர்க ளும்சிலர் பிறந்துள் ளார்கள் !
அவர்களுள் ஒருவரே அருள்மணி வாசகர் !
இதயங் களுக்கு இடையிலே பாலமாய்,
உணர்வுகள் போய்வர உதவுவ தற்கு
மொழியென ஒன்று முளைத்தத னாலே
தெளிவுறப் பெற்றோம் திருவா சகத்தை !
முந்தை வினையெலாம் முடிந்திட முன்னாள்
மந்திரி சொன்ன மணிமொழிக் கோவை !
முதிர்ந்த அனுபவ முத்திரை நெடுகப்
பதிந்திருக் கின்ற பரம்பொருட் சாலை !
நித்தியம் என்பதன் நினைவை வளர்த்திடும்
சத்திய வாசகத் தரும தெரிசனம்!
''தாயினும் மிக்க தயவினை, மனிதனே,
நீ இனும் என்கொலோ நினையா திருப்பது?''
என்ற கேள்வியை எழுப்பி, மனிதனை
எழுப்பிட எழுந்த இன்னிசைக் கோபுரம்!
ஊழித் தனிமையில் உதவும்என் (று) ஈசன்
தேடிக் கொணர்ந்த தீந்தமிழ் அமுதம்!
வீழ்த்த இருக்கும் விதையையும் மாற்றி
வாழ்வு கொடுக்கும் வரப்பிர சாதம்!
அமுதெனும் தமிழின் அழகு முழுவதும்
திரண்டிருக் கின்ற திருவா சகநூல்,
எடுத்துப் படிக்கும் இதயத்தை எல்லாம்
தடுத்தாட் கொள்ளும் தகுதி உடையது!
மணிகளை மொழிகளாய் மாற்றிமா ணிக்க
வாசகர் நமக்கு வழங்குவ தெல்லாம்
பிணிகளைப் போக்கிப் பிறவியைக் கடந்து
பேரின் பத்தைப் பெறுவதற் காகவே!
கற்பனை யாகக் கட்டிய கோட்டையின்
அற்புதம் சொல்லி அழைத்திட வில்லை!
விலைபோ காத வெற்றுக் கதையைத்
தலையிலே கட்டும் தந்திர மில்லை!
படிப்படி யாகப் பார்த்ததை மிகவும்
வெளிப்படை யாக விளக்குகின் றாரவர்!
இடரினைப் பரிசாய் எய்திய பொழுதும்
சுடரினை வியந்து சொக்கி இருந்தவர்!
'உரிமையால் சொல்கிறேன் உய்யவை! இல்லையேல்
மரியா தைஇனி வானிலே பறக்கும்'
என்றவர்; நீ, நான் எனும்பே தத்தைக்
கொன்றவர், தெய்வக் கோலம் கண்டவர்!
ஆன்ம நாயகன் ஆரத் தழுவிய
மேன்மையால் அழியா மேனி பெற்றவர்!
அந்தமும் முதலும் ஆனவன் நெருங்கிய
சொந்தமென் றானபின் சுகத்தினுக் கென்ன ?
அத்தனைச் சுகத்தையும் அடிகளால் எப்படி
மொத்தமாய்த் தாங்க முடிந்ததோ? ஆகா!
எட்டிரண்(டு) அறியா என்னையும் ஏற்றினை

பட்டிமண் டபமெனப் பாடுகின் றாரவர்!
''ஆண்ட கருணை ஐயனை எண்ணி
உருக நெஞ்சம் உடம்பெலாம் இல்லையே;
கால்முதல் தலைவரை கண்கள் இல்லையே''
எனமிக நினைந்து ஏங்குகின் றாரவர்:
முந்தி எவரோ மொழிந்ததைக் கொணர்ந்து
பந்தியில் எடுத்துப் பரிமாற வில்லை!
எல்லையில் லாத இறைவனின் கருணை
அமுதினைப் பருகி ஆனந் தித்தவர்
தொட்டுத் தொட்டுச் சுவைத்த அருமையைப்
பிட்டுப் பிட்டுப் பிறர்க்(கு) அளிக் கின்றார்!
அருந்திப் பார்த்துவிட் (டு) அற்புதம் எனநமை
விருந்துக்(கு) அழைக்கிறார் 'வெளியூர்'க் காரர்!
ஞான சித்தரின் நல்வழி சென்றால்
தெளிந்து நிற்கலாம் தெய்வம் ஆகலாம்!
அவரைச் சிவமென ஆக்கிய தெய்வம்
என்னை உங்களை ஏன்ஆக் காது?
கலந்தஅன் ப.கிக் கசிந்துஉள் உருகினால்
நடந்தே தீரும் ஞான நாடகம்!
துடிப்பதா இன்றும்நாம் துயரினில் விழுந்து?
படிக்கலாம் மணிமொழிப் பனுவலை உணர்ந்து!
படிக்கப் படிக்கப் பக்திஉண் டாகும்!
பிடிக்கப் பிடிக்கப் பேற்றினை அருளும் !
பெற்றியன் முருகனைப் பெற்றவன்! நம்மைச்
சுற்றிய வினைகளைச் சுட்டெ ரிப்பவன்!
சாம்பலைப் பூசிய சங்கரன் நாமம்
சோம்பலைத் தவிர்க்கும்! சுகத்தைக் குவிக்கும்!
நிம்மதி என்பது நிர்மலன் கோயில்
சந்நிதி யில்தான் சாத்தியம் ஆகும்!
இறைவனைத் தொழுதால் என்ன கிடைக்கும்?
பணம்கிடைத் திடுமா! பதவி நிலைக்குமா?
அப்படிக் கேட்பதில் அர்த்தமே இல்லை.
சிவனைத் தொழுதால் சிந்தை தெளியும்!
அவனை உணர்ந்தால் அமைதி நிலவும்!
பக்தர்க ளுக்கும் பகலிர (வு) உண்டு!
எப்பொழு தும்போல் எல்லாம் நடக்கும்! எனில்
பார்வையில் புதிய பக்குவம் பிறக்கும்!

தொழுதுபார்த் தால்தான் சொல்வது புரியும்.
அழுதுபார்த் தால்தான் ஆனந்தம் தெரியும்!
அழுதால் இறைவனை அடையலாம் என்று
சுருக்க வழியினைச் சொல்கிறார் வாசகர்!
அழுதுபார்த் திருக்கிறேன்; ஆண்ட வனைநான்
தொழுதுபார்த் திருக்கிறேன்;சுகம்கண் டிருக்கிறேன்.
பதவியில் பணத்தில் பார்த்தறி யாததை—அவன்
உதவியில் கண்டுநான் உளம் நெகிழ்ந் திருக்கிறேன்.
திருவா சகத்திலே திளைப்பேன்; பேச
ஒருவா சகம்இலாது உட்கார்ந் திருப்பேன்!
விரியும் மோன விளிம்பிலே அலைந்து
திரியும் மனத்தைச் சிலையாய் அமர்த்துவேன்!
திருமுறை உதவும் தெளிவிலே கலந்தால்
மறுமுறை எப்படி மயக்கம்உண் டாகும்?
இங்கும் அங்கும் எங்கும் எதிலும்
தங்கி இருப்பதுஅத் தனிப்பொருள் அலவா?
அனலொடும் புனலொடும் ஐயன் வெளியினில்
தினமிடும் கூத்தொரு திருக்கூத் தல்லவா?
ஓங்கா ரத்தின் உள்ளிருந்து இன்னிசை
பாடு கின்றவன் பாட்டுவிக் கின்றான்;
ஆங்கா ரத்தின் அயல்இருந்(து) என்றும்
ஆடு கின்றவன் ஆட்டுவிக் கின்றான்!
மாங்காட் டரசி மத்தியில் நிலைத்து
வாழு கின்றவன் வாழ்விக் கின்றான்!
பொய்களைக் களைய; புதுவாழ் வருளக்
கைகளைக் கட்டிக் காத்திருக் கின்றான்!
''வினையுளே கிடக்கிறாய்; விழிவிழி அப்பனே
எனையுளே காண்'' என எழுப்பிச் சிரிக்கிறான்!
''தினைத்துணை இன்பம் தேடி அலைகிறாய்
அனைத்தெலும்(பு) உள்நெக ஆனந் தம்தர
இங்கிதோ நான்'' என இன்குரல் கொடுக்கிறான்.
பிடிக்கப் போனால் பெருமான் ஓடுவான்!
தொழுதிடும் போது துன்பம் கொடுத்து
நழுவிடப் பார்ப்பான் ஞான நாயகன்!
அழுதிட அழுதிட அடிக்கடி கிள்ளுவான்!
காலைப் பிடித்தால் கனிந்து கொஞ்சுவான்!
எங்கே ஓடி எப்படி ஒளிவான்!
காதலால் அவனைக் கட்டிப் போடலாம்!
திருவா சகவழி தேடிப் போனால்
சிக்கெனப் பிடித்துச் சிறைப் படுத்தலாம்!
ஆதலால் அன்பரே அருள்மணி வாசகர்
காதலால் நமக்குக் காட்டிய பாதையில்
சொல்லுவோம், மகிழ்வில் திளைப்போம், வாழ்வை
வெல்லுவோம் இனிமேல் வெற்றிமேல் வெற்றி
அள்ளுவோம் நாளும் அமைதியை மனத்தில்
கொள்ளுவோம்; கூத்தன் திருவடி துணையே.

## திருவாசகச் சிறப்பு

காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்றாச் சுவைதிகழும்;—ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்; ஓங்குதிரு வாசகநூல்
மாட்சிக் கிணையுண்டோ? மற்று.

—ந. ரா. முருகவேள்

**"Age cannot wither her, nor Custom stale**
**Her infinite variety; other women cloy**
**The appetite they feed; she makes hungry**
**Where most she satisfies".**

**—SHAKESPEARE,**
**Antony And Cleopatra.**

# "கோகழி"

"தொல்காப்பியச் செல்வர்"
பேராசிரியர் திரு. ஆ. சிவலிங்கனார்

'கோகழி' என்ற சொல், மணிவாசகப் பெருமானால் ஐந்து இடங்களில் குறிக்கப்படு கின்றது. 1. ''கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க! 2. கோகழி மேவிய கோவே போற்றி. 3. கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி நாதனைக் கூவாய். 4. ...கடையவ னேனைத் தொண்டாகக் கொண்டருளும் கோகழியெம்கோமாற்கு. 5. நண்ணிப் பெருந் துறையை நம்மிடர்கள் போயகல, எண்ணி யெழு கோகழிக் கரசைப் பண்ணின், மொழியா ளோடு உத்தர கோசமங்கை மன்னிக் கழியா திருந்தவனைக் காண்'' என்பன, அவ்விடங்கள்.

இக் கோகழி என்பது, கன்னட நாட்டுப் பெல்லாரி மாவட்டத்திலுள்ள கோகழி என்ற ஊர்என்றும், சீகாழி என்றும், திருவாவடுதுறை என்றும், திருப்பெருந்துறை என்றும், பலர் பலவாறு கூறுவர். சைவப் பெரியார் திரு.மு. அருணாசலம்பிள்ளை அவர்கள், திருப்பெருந் துறைக்கோயிலைக் குறிக்கும் என்று கூறி, மேற்கண்ட ஊர்கள் பற்றிய கருத்துக்களைத் தெளிவுற மறுத்துள்ளார்கள். ஆதலின் அவைபற்றி ஆராயாமல், பிள்ளையவர்கள் கூறும் கருத்துப் பற்றி மட்டும் இக்கட்டுரையில் கருதலாம்.

திருப்பெருந்துறைக் கோயிலுக்கே, கோகழி என்று பெயராகும் என்பதற்கு, அவர் கள் கூறும் காரணங்கள் இரண்டு. அவை:1. கோ என்பது பசுத்துவம்: கழி என்பது கழித்த இடம். எனவே, மணிவாசகர் தமது பசுத்துவம் கழித்த இடம் திருப்பெருந்துறைக் கோயிலா தலின், அதனைக் கோகழி எனக் குறிப்பிட்டார் 2. பல சிவ தலங்களில் தலத்துக்கு ஒரு பெய ரும், கோயிலுக்கு ஒரு பெயரும் அமைந்திருப் பதை, நாம் அறியலாம். வெண்ணெய் நல்லூர் அருட்டுறை: சாத்தமங்கலம்-அயவந்தி: கருவூர் ஆநிலை எனக் காணலாம். இங்ஙனமே பெருந் துறைக்கும் நாம் கொள்வோமானால், பெருந் துறை ஊர்ப் பெயராகவும், இறைவன் குரு மணியாக எழுந்தருளி யாட்கொண்ட குருந்த மர நிழல் (ஆகிய கோயில்) கோகழியாகவும் கொள்ளலாம்.

இனி இவைபற்றிக் காண்போம். தமது பசுத்துவத்தைக் கழித்த இடம் என்று, எவ் விடத்தையும் எவரும் கோகழி என்ற பெயரால் குறிக்கவில்லை. கோகழி என்ற ஆட்சி, மணி வாசகப் பெருமானால் வெளிப்பட்டும், அவர்க் குப் பின்வந்தோர் யாரும் அதைக் கொள்ள வில்லை. அதனால் முதற் காரணம் பொருந் துமா? என்பது, ஆய்வுக்குரியது!

வெண்ணெய் நல்லூர் அருட்டுறை, கரு வூர்த்திருவாநிலை என ஊரும் பேரும் சேர்த் துக் கூறப்படுதல்போலத், திருப்பெருந்துறைக் கோகழி எனச் சேர்த்துக் கூறப்படாமையின், இரண்டாம் கருத்தும் ஆய்வுக்குரியதே. ''நண் ணிப் பெருந்துறையை'' என்னும் பாடலில், பெருந்துறையைத் தனியாகவும், கோகழியைத் தனியாகவும் மணிவாசகர் கூறினாரேயல்லா மல், பெருந்துறைக் கோகழி எனச் சேர்த்துக் கூறவில்லை. சேர்த்துக்கூறுவது வழக்கு என் பதை, அப்பரடிகள் ''கடந்தையுள் தூங் கானை மாடச் சுடர்க் கொழுந்தே'' என்று, பெண்ணாகடம் கோயிலைக் 'கடந்தையுள் தூங்கானை மாடம்' எனக் கூறியதாலும், ''தக்கிருந்தார் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே'' என ஞானசம்பந்தப் பெருமான் ஆக்கூரையும் தான்தோன்றி மாடக் கோயிலையும் இணைத்துப் பாடியதாலும், ''வெண்ணெய் நல்லூர் அருட்டுறை'' என ஆளுடைநம்பிகள் வெண்ணெய் நல்லூரையும் அருட்டுறைக் கோயிலையும் இணைத்துப் பாடி யதாலும், அறியலாம். 'கச்சித் திருவேகம்பம்' எனக் காஞ்சிபுரத்தையும் ஏகம்பக் கோயிலை யும் இணைத்து மணிவாசகப் பெருமானே பாடி யுள்ளாரே.

இனிக் ''கோகழி'' என்பது ஒரு தனிப்பட்ட ஊரே என்பதற்குத் திருவாசகத்திலிருந்தே சான்றுகள் காணலாம். 1. சிவபுராண மூன் றாம் அடியில் கோகழியைத் கூறியவர், அச் சிவபுராணத்தின் பதினைந்தாம் அடியில் பெருந் துறையைக் கூறியுள்ளார். 'சீரார் பெருந்துறைத் தேவனடி போற்றி' என்பது, அவர் வாசகம்.

2. போற்றித் திருவகவலில்,

''பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி''

என்ற அடிகளில், பராய்த்துறை, சிராப்பள்ளி, குற்றாலம் என முன்னரும், ஈங்கோய் மலை- பழனம் - கடம்பூர் எனப் பின்னரும் ஊர்களைக் கூறி, இடையில் கோகழியைக் கூறியிருப்பதால் கோகழியும் ஒரு தலமேயாகும்.

3. இறைவனின் ஊராக உத்தரகோசமங்கை யையே கூறினார் மணிவாசகர். 'தாதாடு பூஞ் சோலைத் தத்தாய் நமையாளும், மாதாடும் பாகத்தன் வாழ்பதியென் - கோதாட்டிப், பத் தரெலாம் பார்மேற் சிவபுரம்போற், கொண் டாடும் உத்தர கோசமங்கையூர்'(120)எனவும், சீர்த்தித் திருவகவலில் 'உத்தரகோச மங்கை ஊர்' எனவும், கூறியமை காண்க. 'கோகழி' கோயிலாயின், அங்குக் குருமணியாய் வந்து இறைவன் ஆட்கொண்ட சிறப்பு நோக்கி, அதனையுடைய திருப்பெருந்துறையையே இறைவன் ஊர் எனக் கூற வேண்டும்: அவ்வாறு கூறாமையானும் கோகழி கோயிலாகாது.

4. ''கோகழி யாண்ட குருமணி'' என் றமை போலவே, ''கூடல் இலங்கும் குருமணி'' என்றதும் நோக்கின், கூடல் போலவே கோகழி யும் ஓர் ஊராகும் எனக் கொள்ளலாம்.

5. பெருந்துறையைச் சார்ந்த ஓர்ஊராகக் கோகழியைக் கொள்வதாலும் தவறில்லை. ஒரு நகரம் பல சிற்றூர்களைக் கொண்டு அமைதல் உண்டு. பெருந்துறை பெருவழக்காகவே, கோகழி வழக்கிழந்திருக்கலாம். ''ஆடக மதுரை அரசே போற்றி'' என மதுரையைக் கூறிய மணிவாசகர், மீண்டும் அடுத்த அடியில் ''கூடல் இலங்கும் குருமணி போற்றி'' என மதுரையையே கூறினர். முன்னர் மதுரை என்றவர், அடுத்து அதன் வேறு பெயராகிய கூடல் என்பதைக் கூறுவானேன்? ஒரே ஊரை அடுத்து அதன் பெயர்களால் குறிப்பிடு வதால், அவ்விரண்டும் தனித்தனியூர்களே எனக்கொள்ளலாம். மதுரை என்பது பெரிய நகரமாகவும், கூடல் என்பது அதன் உள் ஊரா கவும் வழங்கியிருத்தல் வேண்டும். அவ்விரண் டிடங்களிலும் தனித்தனிக் கோயில் இருந்திருத் தல் வேண்டும். பொதுவில் மதுரைக்கு ஒரு கோயிலும் கூடல் என்னும் பகுதிக்கு ஒரு கோயி லும் இருந்திருக்கலாம். இப்படியே பெருந் துறையும் கோகழியும் அமைந்தனவாகலாம்.

6. மணிவாசகர் தமது குயிற்பத்தில் 2 ஆம் பாடலில் 'பெருந்துறை மேயபிரானை' எனவும்,3ஆம் பாடலில் 'சீலம் பெரிதும் இனிய திருவுத்தரகோச மங்கை' எனவும், 6ஆம் பாடலில் ''கோகழி நாதனை'' எனவும் குறிப் பிடுவதால், பெருந்துறை உத்தரகோசமங்கை என்னும் ஊர்கள் போலவே, கோகழியும் ஓர் ஊராகும் எனக் கொள்க.

7. பெருந்துறைக் கோயிலே 'கோகழி' என்பதற்கேற்ப ''நண்ணிப் பெருந்துறையை'' என்ற பாடலுக்குப் பிள்ளையவர்கள் கூறும் உரையாவது, ''(நெஞ்சே முன்பு நம்பொருட்டு) பண்ணின் மொழியாளொடு உத்தரகோச மங்கை மன்னிக் கழியா திருந்தவனை, (இன்று) பெருந்துறையை வந்து நம்மை ஆட்கொள்ளும் பொருட்டுக் கோகழியில் உள்ளவனை, நீ சென்று தரிசிப்பாயாக'' என்பது. இவ்வுரை யில் அரசை, இருந்தவனை என்னும் இரண்டாம் வேற்றுமை விரிகளுக்கு இயைபு இல்லையா கிறது. அதனால்,

> ''நெஞ்சே! நம் இடர்கள் போயகல எழுந்தருளும்
> கோகழிக் கரசை, உத்தரகோச மங்கையுள்
> மன்னிக் கழியா திருந்தவனைப் பெருந்துறையை
> நண்ணிக் காண்''

எனப் பொருள் கொள்வதுசிறக்கும் எனலாம். மேலும் மதுரை, சிதம்பரம், குற்றாலம், பாவ நாசம் முதலிய ஊர்ப்பெயர்கள் இறைவன் பெயர்களாகவும் வழங்கப்படுதல் போலப், பெருந்துறை என்பதும் ஊர்ப்பெயராகவும், இறைவன் பெயராகவும் வழங்கப்பட்டதாக லாம். 'பெருந்துறை' என்று சொல்வதன்மூலம் பிறப்பறுத்தேன் என்பார், ''பெருந்துறையே யென்று பிறப்பறுத்தேன்'' என்றார். அதனால், ''பெருந்துறையை, கோகழிக்கரசை, உத்தர கோசமங்கை மன்னியிருந்தவனை நண்ணிக் காண்'' எனவும் பொருள் கொள்ள அமைந் துள்ளது, இப்பாடல்.

8. பெருந்துறைக் கோயிலே கோகழி என்றால், மணிவாசகர் ''தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும் ஒல்லை விடையானை'' எனத் தில்லையில் சிற்றம்பலம் இருப்பதை விளக்கமாகக் கூறியதைப் போலப், பெருந் துறையில் கோகழியிருப்பதாகக் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறவில்லை.

9. ''வாதவூர் இறைவன் ஓதிய மொழிகளுள்
மூவரும் ஓதிய முதுபதி யொழியத்
தீதிலாப் பதிமற் றியாதென வினவில்
திருப்பெருந் துறையும் திருக்கோ கழியும்
கூர்புகழ் உத்தர கோச மங்கையும்''

என்று பெருந்துறை, கோகழி, உத்தரகோச மங்கை என்னும்மூன்றிடங்களும் அடுத்தடுத்துக் கூறுகிறது, 'மணிவாசகர் திருப்பதிகக்கொத்து' என்னும் பாடல். இப்பாடலைப் புறச் சான்றா கக் கொள்ளலாம்.

இதுகாறும் கூறிய . சான்றுகளிலிருந்து, கோகழி என்பது ஓர் ஊராகத்தான் இருக்க வேண்டும் என்பது புலப்படும். இனி அவ்வூர் எது எனக் காணல் வேண்டும். திருப்பெருந் துறைக் கோயிலில் குருந்தமர நிழலில் இருந்த குரு முனிவர் மூலம், உபதேசம் பெற்றவுடன் பாடியது சிவபுராணம் என்னும் பாடல். குரு வின் உபதேச மொழி காதில் ஒலித்துக் கொண் டேயிருந்ததால், அம்மொழியின் மாற்று வடி வாகிய 'நமச்சிவாய' என்பதை முதலில் கொண்டு 'நமச்சிவாய வாழ்க' எனத் தொடங் கினார். அம்மொழிக்குரியவனை 'நாதன்' எனக் கொண்டு 'நாதன் தாள் வாழ்க' என வாழ்த்தினார். அந்நாதன் யார் எனின், அவனே குரு வடிவில் வந்து உபதேசித்தவன் என்பார் குருமணி எனக்கூறி 'குருமணிதன் தாள் வாழ்க' என வாழ்த்தினார். அக்குருமணிக்குரிய

இடம் 'கோகழி' என்றார். திருப்பெருந்துறைக் குருந்தமர நிழலில் இருந்த குருவையே, கோகழிக் குருமணி என்றார். அதனால், பெருந்துறைக் குருவே, கோகழிக் குருவாகக் காட்சிதந்தார் என்றும், அக்கோகழிக் குருவே மணிவாசகர்க்குக் குலகுருவாக அமைந்தவர் என்றும், பெருந்துறை உபதேசத்துக்குமுன்னர் அதாவது ஞானம் எய்துவதற்கு முன்னர், கோகழிக் குருவிடம் குலகுரு முறையில் தொடர்பு கொண்டிருந்தவர் அவர் என்றும், பெருந்துறைக் குருவும் கோகழிக்குருவாகவே காட்சியளித்தார் என்றும், அதனால் அக்குருவைச் சிவனாகவே தேறினார் என்றும் அறியலாம்.

மணிவாசகர் காலம் சம்பந்தர் அப்பர் காலங்களுக்கு முற்பட்டதென்றும், சுந்தரர் காலத்துக்குப் பிற்பட்டது என்றும் பலவாறு கூறுவர். மேற்கூறிய மூவரும் ஓதாத பதிகளான சந்திரதீபம், தேவூர்த்தென்பால் தீவு, மந்தர மலை, மயேந்திரமலை முதலிய ஊர்கள், 'மணிவாசகர் பாடல் திருப்பதிகக் கொத்து' என்ற தலைப்புப் பாடல் ஒன்றில் காணப்படுகின்றன. சந்திரதீபம் முதலிய ஊர்கள் திருவாசகத்தில் வைப்புத் தலங்களாக உள்ளன. இவை தமிழகத்துக்கு அப்பாற்பட்ட ஊர்கள். இவ்வூர்களை மணிவாசகப்பெருமான் குறிக்கக் காரணம் இருக்கவேண்டும்.

கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னர்-அதாவது அப்பர் சம்பந்தர் காலத்துக்கு முன்னரே, வடக்கே மத்த மயூர சந்தானம் என்றொரு சைவாசிரிய மரபு விளங்கியதாகவும், அச்சந்தானத்தின் ஒரு கிளையினர், நருமதை யாற்றங்கரையிலுள்ள 'கோகழி' என்ற சிறு குன்று ஒன்றின் மேல் ஒரு மடம் நிறுவினதாகவும், கோகழி பிற்காலத்தில்கோளகி என மருவியதாகவும், அதனால் கோகழி மடம் கோளகி மடம் என்றாயினதாகவும், கோளகி மடத்தார் தெலுங்கு கன்னட நாடுகளில் ஆங்காங்கு மடங்கள் அமைத்துச் சைவநெறி விளக்கியதாகவும், தமிழகத்தில் திருக்காளத்தி, திருப்பாலைவனம், திருவொற்றியூர், திருநெல்வேலி, திருவாலீசுரம், காஞ்சிபுரம், தேவிகாபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர், திருவானைக்கா, திருக்கொடுங்குன்றம் (பிரான் மலை), திருப்புத்தூர், திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில், கோளகி மடங்கள் அமைக்கப் பட்டுச் சைவநெறி வளர்க்கப்பட்டதாகவும், அம்மடங்களுக்கு அவ்வக்கால அரசர்களால் ஆதரவு இருந்ததாகவும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

மாணிக்கவாசகர் தாம் தோன்றிய திருவாதவூரிலோ, அல்லது சிதம்பரத்திலோ, வேறெங்கோ ஒரு கோகழி மடத்தின் குருவைக் குல குருவாகக் கொண்டவராகலாம். கோகழி யாண்ட குருமணி, கோகழிக்கரசு, கோகழி நாதன் என்று அவரையே குறித்தனர் என்றும் கொள்ளலாம்.

மத்த மயூர சந்தானத்தைச் சார்ந்த ஆமர்த்தக தீர்த்தநாதர் இருந்த ஆமர்த்தக மடத்திலிருந்து ஒரு கிளை தோன்றிச் சிவபுரி சந்தானம் என்ற பெயருடன், வடநாட்டில் சமயத்தொண்டு புரிந்தது என்பது அறியப்படுகின்றது. தேவார முதலிகளால் அடிக்கடி பயிலப் படாத சிவபுரம் என்னும் ஊர், மணிவாசகத்தில் மிகுதியும் ஆளப்படுகின்றது. முதற்பாடலின் இறுதியில் ''சிவபுரத்தின் உள்ளார்'' என்ற தொடர் காணலாம். பல இடங்களில் சிவபுரத்தைக் கூறியுள்ளார். சிவபுரம் என்னும் ஊர் சிதம்பரத்தைச் சார்ந்துள்ளது. சிதம்பரத்தில் கோளகிமடம் இருந்ததாக அறிகிறோம். தமிழகத்தில் பல இடங்களில் சிவபுரி என்னும் ஊர்கள் இருந்தாலும், மணிவாசகரால் குறிக்கப்படும் சிவபுரி தில்லையைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று நினைப்பதில் தவறிராது.

. அடிகள் கூறிய கல்லாடம் பற்றி ''இதைப் பாண்டிய நாட்டுப் பழம்பதிகளுள் ஒன்று எனவும், மேற்குக் கடற்கரையில் கொல்லத்துக்கு அருகில் இருந்த ஊர்எனவும், வேறு வேறு கூறுவர். வீரசைவ ஞானாசாரியர்களுடைய மரபு ஒன்று 'ஹல்லட' என வழங்கப்பட்டு வருவதாகவும், அஃது ஒருகால் 'கல்லாடர்' என்ற பெயரோடு ஒற்றுமையுடையதாக இருக்கக்கூடும் என்றும், சிலர் கருதுகின்றனர்'' எனக் கல்லாட மூலப் பதிப்பு ஒன்றின் பதிப்புரையில் காணப் படுகின்றது. இக்குறிப்பைக் கொண்டு கல்லாடம் என்னும் ஊரில், ஒரு (வீர) சைவ மரபு விளங்கியிருந்திருக்கவேண்டும் எனக் கருதலாம். அதுவும் கோகழி (கோளகித்) தொடர்புடையதாகலாம்.

அடிகள் குறிப்பிடும் சந்திரதீபம் என்பது, வங்காளத்தில் உள்ளதென்றும், அங்கு சந்திரகோமி என்னும் வடமொழியாசிரியர் இருந்தனர் என்றும், அவர் புத்த மதத்தினர் என்றும், அவர்பால் புத்த சமய அறிவு மணிவாசகர் பெற்றிருக்கலாம் என்றும், திரு.சு.நடேசபிள்ளையவர்கள் குறிப்பிடுவதாகத் திரு.மு.அருணாசலம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவர். முன்னவர் கருத்தைப் பின்னவரே மறுத்துள்ளார். எனினும், சந்திரதீபத்தில் புத்த சமய குரவர் ஒருவர் இருந்தார், அவர் காலம் கி.பி. 465-544 ஆகும் என்பதால், ஓர் கருத்தை நாம் கொள்ளலாம். 'சந்திரதீபத்தில் புத்தமதப் பிரசாரம் இருந்தது போலவே, சைவசமயப் பிரச்சாரமும் இருந்திருக்கலாம். அதன் தலைவர் சந்திரதீபத்துச் சாத்திரன் எனப்பெற்றிருக்கலாம். அவர் கோளகி அல்லது சிவபுரி சந்தானத்தவராகலாம்' என்பதுவே அக்கருத்தாம்.

அடிகளால் குறிப்பிடப்படும் 'தேவூர்த் தென்பால் திகழ் பெருந் தீவு' என்பதை, இலங்கை எனக் கருதுகின்றனர். அங்கே இறைவன் கோலங்கொண்டு வீற்றிருக்கின்றார் என்றார் அடிகள். அதைச் சொல்வதன் நோக்கம் யாது?

''நிகய சங்கிரகம் என்னும் சிங்கள மொழி வரலாற்றுக் குறிப்பேடு, முதலாம் சேனனை, ஒரு சைவ சமயத் துறவி, சித்துக்கள் பல செய்து

—(தொடர்ச்சி 64ஆம் பக்கம் பார்க்க....)

# திருமால் திருநெறி

திரு. நா. வேணுகோபால் நாயகர், B.A., B.L.

செயலாளர், ஸ்ரீவைணவமகா சங்கம், சென்னை.

''திருமால் திருநெறி'' என்னும் தலைப்பு, திருமால் அருளும் திருநெறி என்றும், திருமாலை அருளும் திருநெறி என்றும் பொருள் தரும். திருமால் திருநெறி, வைணவ சமயம் என்றும் வழங்கப்படுகின்றது. திருமாலைத் தலைவராகக் கொண்ட திருநெறியே வைணவ சமயம்.

திருமால் திருநெறியில் தலையாய கொள்கை, தத்துவத்திரயம் எனப்படும் முப்பொருள் உண்மையாகும். அதாவது இப்பிரபஞ்சம் மூன்று பொருள்களால் இயன்றது என்பது. இம்முப்பொருள்களின் இயக்கமே பிரபஞ்சம். இம்முப்பொருள்கள் நிலையானவை, நிகரற்றவை, நெடுமாலின்நெறியை நிலைநாட்டுபவை.

முதலாவது, உயிரற்றவைகளான ஐம்பெரும் சக்திகள் என்னும் பஞ்ச பூதங்களும், இவற்றின் சேர்க்கையால் ஏற்படும் பொருள்களும் ஆகும். இவைகளே அசித்து எனப்படும். இவைகள் தாமே இயங்க இயலாதவை. இரண்டாவது பொருள், சித்து என்னும் உயிர்த்திரள்கள். சீவாத்துமா என்றும் இதனைக் கூறலாம். மூன்றாவது பொருள் கடவுள், இறைவன் அல்லது ஈசுவரன் எனலாம்.

அசித்தாலான உடலுடன் கூடி, அதனைத் தொழிற்படுத்துகின்றது உயிர் என்னும் சித்து, இவ்விதமாகவே அசித்து ஆகிய உடலையும், சித்து ஆகிய உயிரையும் தனக்கு உடலாகக் கொண்டு, இறைவனாகிய நாராயணன் இயங்குகின்றான். நாரங்கள் என்றால், பிரபஞ்சத்தில் பரவியுள்ள அனைத்துப் பொருள்களின் தொகுதியும், உயிர்ப் பொருள்களின் தொகுதியும் ஆகும். அயனம் என்றால் இவைகளை இயக்குவது என்பது பொருள். எனவே இந்த நாரங்களை இயக்குபவனை, இவைகளுக்குத் தன் சக்தியை அருளுபவனை, நாராயணன் என்று துதிக்கின்றோம். இவ்விதமாக உயிரற்ற எல்லாப் பொருள்களிலும், உயிர்த் தத்துவங்களிலும், இறைவன் பரவி நிற்பதைச் சேவித்துச் சான்றோர்கள், அவ்இறைவனை நாராயணன் விஷ்ணு என்னும் திருப்பெயர்களால் வணங்கினர். விஷ்ணு என்றால் எங்கும் பரவியிருப்பவன் என்று பொருள். இங்ஙனம் தாமே இயங்காத அனைத்துப் பொருள்களையும், உயிர்த்திரள்களையும் உடலாகக்கொண்டு, இறைவன் இயங்குவதை, நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் பின்வருமாறு விளக்குகின்றார்.

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே''

வேதங்கள் நான்கு. அவைகளை விளக்க வந்த அங்கங்கள் ஆறு. நான்கு வேதங்களையும், நான்கு பிரபந்தங்களாகத் தமிழிலே அருளினார் நம்மாழ்வார். இந்நான்கு பிரபந்தங்களுக்கும், தமது ஆறு பிரபந்தங்களால் தமிழில் விளக்கம் தந்தருளிய திருமங்கையாழ்வார், இக்கருத்தையே அடியொற்றிப் பின்வருமாறு அருளுகின்றார்.

மண்ணாய் நீர்எரிகால்
 மஞ்சுலாவும் ஆகாசமுமாய்ப்
புண்ணார் ஆக்கை தன்னுள்
 புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன்
விண்ணார் நீள்சிகர
 விரையார் திருவேங்கடவா
அண்ணா வந்தடைந்தேன்
 அடியேனை ஆட்கொண் டருளே

—பெரிய திருமொழி

உலகில் உள்ளன எல்லாம் இறைவனான ஒரே தத்துவம்(அத்துவிதம்) என்று ஒருசாராரும், உலகில் உள்ளனவெல்லாம் இறைவன், உயிர்கள் என்ற இரண்டு தத்துவங்கள் (துவைதம்) இவையிரண்டும் தனித்து இயங்குகின்றன என்று வேறொரு சாராரும், உலகினை விளக்க முயன்றார்கள். இவ்விரு கொள்கைகளையும் சமன் செய்யும் வகையில், உலகில் உள்ள தத்துவங்கள் மூன்று என்றும்; அவைகள் முறையே அசித்து, சித்து, ஈசுவரன் என்றும்; அசித்து சித்துக்கு உடலாக அமைந்துள்ளது போன்றே அசித்தும் சித்தும் ஆகிய இரண்டும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்து ஒருமைப்பாட்டில் இயங்குகின்றன என்றும் முழுத்தெளிவை உண்டாக்கியது விசிட்டாத்துவிதம் என்னும் வைணவத் தத்துவக் கொள்கை.

நம்மாழ்வார் தாம் அருளிச் செய்த திருவாய்மொழியின் முதற் பாசுரத்திலேயே, 'துயர் அறு சுடரடி, தொழுதுஎழு என் மனமே'' என்று, தன் திருவுள்ளத்திற்கு நியமித்தருள்கின்றார். இதனால் பெறப்படுவது துயரால் அவதிப்படும் மனம் வேறு; அதனை அவதிப்

படுத்தும் துயர் வேறு; அத்துயரை அறுக்கின்ற சுடரடி வேறு என்பதாகும். தொழுது எழும் மனம், சித்து அல்லது உயிர். துயர் என்பது உடலும் ஐம்பூதங்களாலான உலகமும், அதா வது அசித்து; துயரறு சுடரடி என்பது, இறைவ னாகிய ஈசுவரன். இறைவனுக்குத் திருமேனி உண்டென்பது இதனால் தெளிவாகின்றது. இறைவன் அடி என்பார், தெய்வப் புலவரான திருவள்ளுவரும்.

உயிர்த் தத்துவங்கள் மாறி மாறிப் பலபிறப் பும் பிறந்து உழல்வதன் காரணம், இவைகள் செய்யும் வினைகளே. திருமாலும் அவ்வப் போது பிறந்தருள்கின்றார். இதனை அவதாரம் என்பர். திருமால் தொடர்ந்து அவதரித்தருள் வதன் காரணம், அவனது ஒப்பற்ற கருணையே. நாம் பிறப்பது நம் ஞான ஒழுக்கக் குறைவு களாலே. ஆனால் திருமால் பிறப்பது உயிரி னங்களாகிய நம்மை ஆட்கொண்டு காப்பதற் காகவே. உயிர்களாகிய நாம் வினைவசத்தால் பிறக்கின்றோம். ஆனால் இறைவனாகிய திருமாலோ கிருபாவசத்தினால் அவதரிக்கின் றனர். திருமால் நம்முடைய பிறவித் துயரை அறுப்பதற்காகவே பல பிறவிகளை எடுக்கின் றார் என்பதனை நம்மாழ்வார் பின்வரும் திருவிருத்தப் பாடலில் அருளிச் செய்கின்றார்.

''பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா
ஒழுக்கும் அழுக்குடம்பும்,
இந்நின்ற நீர்மை இனியாம்
உறாமை, உயிர்அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்
இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன்
செய்யும் விண்ணப்பமே''

—திருவிருத்தம்.

திருமாலாம் எம்பெருமானுடைய அவ தாரங்களில் சிறந்தவை பத்து. இவைகளைப் பின்வருமாறு பெரியாழ்வார் வரிசைப்படுத்தி அருளிச் செய்கிறார்.

தேவுடைய மீனமாய் யாமையாய்
ஏனமா யரியாய்க் குறளாய்,
மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்,
சேவலொடு பெடையன்னம் செங்கமல
மலரேறி யூச லாடிப்
பூவணைமேல் துதைந்தெழுசெம் பொடியாடி
விளையாடும் புனல் அரங்கமே

—பெரியாழ்வார் திருமொழி.

இதன்படி திருமால் மச்சம் கூர்மம், வரா கம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், தசரத ராமன், பலராமன், கண்ணபிரான், கல்கி என் னும் பத்து அவதாரங்கள் எடுத்தமைபற்றிய விவரம் தெரிகின்றது. திருமால் இதுவரை எடுத்தருளிய அவதாரங்கள் ஒன்பதுதான். பத் தாவதாகிய கல்கி அவதாரம் என்பது இனி கலியுகத்தின் இறுதியில் நிகழவிருப்பதாக நூல்கள் கூறுகின்றன. எனவே இதுவரை எடுத்த அவதாரங்கள் ஒன்பது. மச்ச கூர்ம வராக நரசிம்ம அவதாரங்கள் முன் நான்காக வும், பரசுராம தசரதராம பலராம கிருஷ்ண அவதாரங்களைப் பின்நான்காகவும் கொண் டால், நடுநாயகமாக அமைந்திருப்பது வாமன திரிவிக்கிரம அவதாரமேயாகும். ''முன்னம் குறள் உருவாய் மூன்றடிமண் கொண்டு, அளந்த மன்னன் சரிதை'' என்னும் வாமன திரிவிக்கி ரம அவதாரத்தின் அருமை பெருமைகள் அளப் பரியன. அதன் ஆழ்ந்த தத்துவ நுண்பொருள் கள் ஆராய்ந்து உணர்ந்து மகிழத்தக்கன.

உலகில் அசித்து எனப்படும் உயிரற்ற அசைவற்ற எல்லாப் பொருள்களுக்கும், சித்து எனப்படும் உயிருடைய அசையும் பொருளுக் கும் தலைவனாகிவிட்டதால், மாவலி என்பவன் 'சக்கரவர்த்தி' என்னும் சிறப்பை அடைகின் றான். இரணியனுக்கும் இராவணனுக்கும்கூட இப்பட்டம் கிடையாதே. குலம்தான் அசுர குலம். குணம் அசுர குணமல்லவே. இவன் 'செய்தொழில் வேற்றுமையால்' சிறப்படை கின்றான். மாபலி செய்த தவறுதான் என்ன? தன்னிடம் உள்ள உலகப்பொருள்களையும், பொறுப்புக்களையும், உயர்ந்தோர்க்கு வழங் கிடவே, யாகம் செய்யத் தொடங்குகின்றான். இந்த யாகம், தியானம் தானே.

இத்தகைய நிலையில், தேவர்கள் ஏன் தலைதெரிக்கத் திருமாலிடம் ஓடி முறையிட வேண்டும், மாவலிக்கு எதிராக! தேவர்கள் உயர்ந்தவர்கள் ஆயிற்றே! அவர்கள் மாவலி யிடம் ஏதோ ஒரு அவசியமான, விலக்கவேண்டிய தவறு அல்லது செயலைக் கண்டார்கள் போலும். அதை அவர்கள் தேவாதி தேவனி டம் தேவரகசியமாகவே விண்ணப்பித்தார்கள். தேவர்களின் வேண்டுகோளைத் திருச்செவி சார்த்திய திருமால், அக்குறையைத் தீர்ப்பதற் காக ஒப்புக்கொண்டார்.

கவிச்சக்கரவர்த்தியாம் கம்பநாட்டாழ் வார் தேவர்கள் கூறிய மாவலியின் தவறாய செயலை வெளிப்படையாகத் தம் பாடலில் கூறாமல், கம்பசூத்திரமாகவே காட்டுகின்றார்.

''ஆயது அறிந்தவர் வானவர் அந்நாள்
மாயனை வந்து வணங்கி இரந்தார்
தீயவன் வெந்தொழில் தீர்என நின்றார்,
நாயகனும் அதுசெய்ய நயந்தான்''

—வேள்விப் படலம், 20.

''அது செய்ய நயந்தான்!'' எது செய்ய நயந்தான்? திருமால் வாமன உருவில் மாவலி யிடம் எழுந்தருளி, தானும் ஒரு வேள்வி இயற் றுவதாகவும், அதற்கு மூவடி மண் தேவை என் றும் வேண்டினான். மாவலி திருமாலின் உட் கருத்தை உணராமல் ஒப்புதல் தந்துவிட்டான். ''மூவடி மண்தா?'' என்றதை மண்ணுலகச் சொற்களாகக் கருதிக் கொண்டான் மாவலி. மாவலியிடம் கேட்டுப் பெற்ற வேண்டுகோ ளைச் செயற்படுத்த முனைந்த திருமால், தன் கருத்துப்படி செயற்படலானார்.

பிரபஞ்சத்தில் உள்ளவை சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்றே. அசித்து, சித்து இவையே பிரபஞ்சம் என்று எண்ணி வாழ்ந் தான் மாவலி. சகல பிரபஞ்சத்தையும் வென்று தன் ஆட்சியில் அடக்கிவிட்டதாகவும் நினைத் திருந்தான். இவைகளுக்கெல்லாம் தானே உரி மையாளன் என்றும், தலைவன் என்றும் எண்ணி இவைகளைத் தானமாக வழங்கலானான் அதற்கு மாறாக, அசித்து, சித்து அனைத்தும்

ஈசுவரனாகிய தனக்கே அடக்கம் என்று அறிவுச்சுடர் கொளுத்தத் திருவுள்ளம் பற்றினார் திருமால். மாவலியும் இதை உடனே உணர்ந்து கொண்டான். தன் பிழையைத் திருத்திக் கொள்ள முற்பட்டான். அசித்து வடிவமாக சகல உலகப் பொருள்களையும் திருமாலின் திருவடியிலே அர்ப்பணிக்கவும், திருமால் அவைகளைத் தன் திருவடியில் அடக்கிக் கொண்டான். அடுத்தபடி மாவலி தன் ஆட்சியில் இருப்பதாக எண்ணிய, சித்து வடிவிலான சகல உயிர்த் தத்துவங்களையும் திருமாலினுடையதே என்று மாவலி ஒப்புக் கொண்டான். அவைகளையும் திருமால் இரண்டாவதாகத் தன் திருவடியில் ஏற்றருளினான். மூன்றாவது தத்துவமான ஈசுவரன், தன் ஆளுகையில் இல்லை என்றும், எனவே ஈசுவரனைத் தானமாகத் தருவதற்குத் தன் இயலாமையைத் தாழ்மையுடன் தெரிவித்துத் தலைவணங்கினான் மாவலி. உடனே திருமால், தானே ஈசுவரன் என்று தன் முழுவடிவம் காட்டியருளித் தன்னை உணர்ந்து வணங்கித் தாழ்ந்து பணிந்த மாவலியின் தலையைத் தன் திருவடியில் பொருத்தி, அவனையும் ஆட்கொண்ட அதிசயத்தை வியந்து போற்றுகின்றார் நம்மாழ்வார்.

''ஆழி யெழச்சங்கும் வில்லு மெழ, திசை
வாழி யெழத்தண்டும் வாகு மெழ, அண்டம்
மோழை யெழமுடி பாதலமெழ, அப்பன்
ஊழி யெழவுல கங்கொண்ட வாறே''

மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தவரான அருள்மாரியான திருமங்கையாழ்வார்:

வெந்திறல் வாணன் வேள்வி யிடமெய்தி அங்கோர்
குறளாகி மெய்ம்மை யுணர,
செந்தொழில்வேத நாவின் முனியாகி வையம்
அடிமூன் றிரந்து பெறினும்,
மந்திர மீது போகி மதிநின் றிறைஞ்ச
மலரோன் வணங்க வளர்சேர்
அந்தர மேழி னூடு செலவுய்த்த பாதம்
அது நம்மை ஆளும் அரசே

என்று, மாவலிக்குத் திருமால் அருள்புரிந்த மாட்சியிமையினைப் பொருள் பொதுளப் பாடிப் புகழ்ந்துள்ளார்.

இங்ஙனம் இறைவன் முன்பு, தான் மிகத் தாழ்ந்த நிலையாதலை, மாவலி உணர்ந்தது ஏன்? எல்லாவற்றிற்கும் கீழான பாதளம் சேர்ந்தான் என்ற குறிப்பாகக் கொள்ளவேண்டும். எப்பொழுதும் நிலவியுள்ள, சிரஞ்சீவியான முப்பொருள் உண்மையாகிய தத்துவத் திரயத்தைச் செம்மையுற உணர்ந்த மாவலியும் சிரஞ்சீவியாகத் திகழ்கின்றானாம்

அசித்து, சித்து, ஈசுவரன் என்ற முப்பொருளால் ஆனதே உலகம் என்பதை உணர்த்த வந்த திரிவிக்கிரம அவதாரத்தின் மேன்மையை நெஞ்சையள்ளும் செஞ்சொற் சிலப்பதிகாரம் என்ற செழுந்தமிழ்க் காப்பியத்தில் இளங்கோவடிகள் ''மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி'' என்று புகழ்ந்து துதிக்கின்றார். இத்தகைய திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே? கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே? நாராயணா என்னாத நா என்ன நாவே?

திருக்குறளாம் தமிழ் மறையை அருளிய செந்நாப்போதாரும். ''மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு என்று, இவ் வாமன திரிவிக்கிரம அவதாரத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டுப் போற்றியிருத்தல் காணலாம். ஆழ்வார்களும், கம்பரும், இளங்கோவடிகளும், தெய்வப்புலவர் திருவள்ளுவரும் வாழ்த்தி வணங்கிய மாண்புடையது வாமன அவதாரம். திருமால் நெறியின் அடிப்படையான கொள்கையை உலகோர் உணர்தற் பொருட்டுத் திருமால் உகந்தருளிய, நடுநாயகமான வாமன - திரிவிக்கிரம அவதாரத்தின் மாட்சிமைதான் என்னே.

***

---

(....61ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)


காட்டி, சைவமாக மாற்றினார் என்று கூறுகிறது. மேலும் ஊமையாக இருந்த அவ்வரசனுடைய மகளைப் பேசவைத்துப் பெரும்புகழ் பெற்றார் என்றும் அது குறிப்பிடுகிறது''. இவ்வாறு எழுதி, ஊமைப் பெண்ணை - ஈழத்திலிருந்து கொண்டு வரப்பட்டவளை-மணிவாசகர் பேச வைத்த வரலாற்றொடு தொடர்புபடுத்திக் காட்டுவர் க.த. திருநாவுக்கரசு. இவர் கூற்று, கால ஆய்வில் எப்படியாயினும், இலங்கையில் சைவ இயக்கம் பௌத்தர்களுக்கு எதிராக இருந்திருக்கிறது என்பது உறுதியாம்.

தேவூர்த் தென்பால் திகழ் தீவு என்ற அடிகள், தேவூர் பற்றிச் சிறப்பிக்கவில்லை. ஆயினும் தீவுக்கு எல்லை காட்ட ஆளப்பட்டது. யாவருக்கும் அக்காலத்தில் தெரிந்த நகரமாகத் தேவூர் இருந்திருக்கவேண்டும். திருஞானசம்பந்தர் அவ்வூரைப் பற்றித் ''தென்தமிழ்க் கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்'' என்றார். எனவே தமிழறிஞர் பெருமக்கள் பெருக இருந்த ஊராக இருந்ததால், யாவர்க்கும் தெரிந்த வூராகியிருக்கும்.


அடிகளால் கூறப்பட்ட மயேந்திரம், மந்தரம் என்றும்வழங்கப்படும். கோளகி வழிவந்த விசுவேசுரசம்பு என்பார்க்குக் கி.பி.1261ல் உருத்திராதேவி என்பவர், மந்தரம் என்னும் ஊரையும், அதன் அருகிலுள்ள தீவுகளையும் (இலங்கைகள்) வழங்கினார்; வெலகபூடி என்ற ஊரையும் கொடுத்தார் என்பது தெரியவருகிறது. வெலகபூடி என்பது வேலம்புத்தூர் எனப்பட்டதோ? மயேந்திரம் மந்தரம் என்னும் ஊர்களை, அடிகள் குறிப்பிடுவதால் அடிகளுக்குள்ள கோளகித் தொடர்பு கருதலாம்.

மேலே காட்டப்பட்ட ஊர்களின் செய்திகளால், கோளகி சந்தானம், தெற்கே இலங்கை முதல் வடக்கே வங்காளம் வரை பரவி, ஆங்காங்கே மடம் அமைத்துச் சைவ சமயத்தைப் பரப்பி வந்தது என்பதும், அக்கோளகி கோகழியின் திரிபே என்பதும், கோகழிக் குருவே மணிவாசகர்க்குக் குலகுரு என்பதும் ஓளரவு தெளியலாம்.

***



வடார்க்காடு மாவட்டம் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள், 70 சிறப்புத் திருமணங்களை நடத்திவைத்தார்கள். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் மணமக்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்குகின்றார்கள். இச்சிறப்புத் திருமண நிகழ்ச்சியில் நமது அறநிலைய ஆணையர் திரு ஆர். சண்முகசிகாமணி, I.A.S., அவர்களும், தவத்திரு பாலமுருகன் **அடிமை சுவாமிகள்** அவர்களும், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களோடு உடன் இருக்கின்றனர்.



பதிவு எண். எம் 7039



மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலில், 15.8.82 அன்று நடைபெற்ற சமபந்தி போஜன விருந்து விழா நிகழ்ச்சியில், தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன், திருமதி ஜானகி இராமச்சந்திரன், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், மேற்படி கோயிலின் பரம்பரை அறங்காவலர் திரு மணலி இராமகிருஷ்ண முதலியார், B.A., பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி இராதாதியாகராஜன், M.A.,Ph.D., இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி இராணி இந்திராதேவி அம்மையார், B.A., திருமதி டி. யசோதா அம்மையார் M.L.A. ஆகிய பெருமக்கள் பலரும் கலந்து கொள்ளுதல்.



மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலில், 15.8.82 அன்று நடைபெற்ற சமபந்தி போஜனப் பொதுவிருந்து விழா நிகழ்ச்சியில், திரு இரா. மோகனரங்கம், M.P. அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், அறநிலைய ஆணையர் திரு ஆர். ஷண்முகசிகாமணி, I.A.S., மணலி திரு இராமகிருஷ்ண முதலியார், B.A. முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.